பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 29 ஞாயிற்றுக்கிழமை (14.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 291

## பாதுகாப்புக்குப் பெரும் குந்தகமாம்

# கொழும்பில் தற்காலிகமாகத் தங்கும் தமிழர்கள் வெளியேற வேண்டும்



## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய அறிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர்14

வெளிமாவட்டங்களில் இருந்து கொழும்பில் தங்கியிருப்பவர்களால் பெரும் பாதுகாப்புப் பிரச்சினை தோன்றியுள்ளது. அதனால் தக்ககாரணமின்றித் தலைநகரில் தங்குவோர் வெளியேற வேண்டும். இல்லையேல் வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு அறிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

வடக்கில் நடைபெறும் போரினால் அங்கிருந்து தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வெளியேறுகிறார்கள் அவர்களில் மிகப்பலரும் கொழும்பில் வந்து தக்க காரணங்கள் இன்றி தங்குகிறார்கள் என்றும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் அரச சார்பு 'டெயிலி நியூஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே கோத்தபாய மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்தப்பேட்டியின் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

தகுந்த காரணமின்றி கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தங்கியிருப்போர்

(18ஆம் பக்கம் பார்க்க)

## சந்நிதியில் இன்று தேர்த்திருவிழா



யாழ்ப்பாணம், செப்.14

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயப் பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

பெருந்திருவிழாவையொட்டிய அனைத்து ஏற்பாடுகளும்

(18ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இருந்து வெளியேறுவது குறித்த நிலைப்பாட்டைத் தெரிவிக்க ஒரு நாள் அவகாசம் கேட்கிறது ஐ.நா

கிளிநொச்சி, செப்.14

வன்னியில் இருந்து தாம் வெளியேறுவது தொடர்பான விடயத்தில் தமது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு தீர்க்கமான முடிவுக்கு வருவதற்கு இன்று (ஞாயிற்றுக்கிழமை வரை) அவகாசம் வழங்குமாறு இங்குள்ள அதிகளுக்கான ஐ.நா. தூதரக உயர் அதிகாரி கேட்டுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் முன்பாக பொதுமக்கள் நடத்திவரும் முற்றுகைப் போராட்டத்

(18ஆம் பக்கம் பார்க்க)

## டில்லியில் தொடர் குண்டு வெடிப்பு: 18 பேர் பலி! 45 நிமிடங்களில் ஐந்து இடங்களில் அனர்த்தம்!!

புதுடில்லி செப் 14

புதுடில்லியில் கரோல்பாக், கனாட் பிளேஸ் மற்றும் கிரேடர் கைலாஷ் ஆகிய பகுதிகளில் தொடர் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. அவற்றில் 18பேர் உயிரிழந்தனர். 90பேர் காயமடைந்தனர்.

நேற்று மாலை சுமார் 6.15மணியளவில் மக்கள் நெரிசல் மிகுந்த கரோல்பாக் சந்தைப்பகுதியில் முதல் குண்டு வெடித்தது. அது காஸ் சிலிண்டர் வெடிப்பு என்றும், மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

ஆனால் சில நிமிடங்களிலேயே டில்லியின் மற்றொரு முக்கியபகுதியான கனாட் பிளேஸில் மேலும் இரண்டு குண்டுகள் வெடித்தன.

தெற்கு டில்லியில் உள்ள

(18ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுமாறு ஆயர் பேரவை சகல தரப்புகளிடமும் கோரிக்கை

கொழும்பு, செப்.14

இடம்பெயர்ந்து இன்னற்படும் வன்னி மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என்று ஆயர் பேரவை சகல தரப்புக்களிடம் கோரவுள்ளது.

நாளை கொழும்பில் கூட விருக்கும் ஆயர் பேரவையின் கூட்டத்தில் இக் கோரிக்கை விடுக்கப்படும்.

ஆயர் பேரவையின் கூட்டம் நாளை கொழும்பில் நடக்கவுள்ளது. இக் கூட்டத்தில் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆயர்களும் கலந்து கொள்கின்றனர்.

வன்னியில் பெரும் எண்ணிக்கை (18ஆம் பக்கம் பார்க்க)

## இனச்சுத்திகரிப்பே அரசின் திட்டம் புலிகள் குற்றச்சாட்டு

வவுனியா, செப்.14

வன்னிப் பகுதியிலிருந்து ஐக்கிய நாடுகள் அமைப்புக்களை ஸ்ரீலங்கா அரசு வெளியேற்றுவது தமிழர்களை இனச்சுத்திகரிப்புச்

(18ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படைக்கு தொழில்நுட்ப உதவி வழங்கும் ஒப்பந்தத்தை இந்தியா இடைநடுவில் கைவிட முடியாது

### இலங்கைத் தரப்பில் வலியுறுத்து

கொழும்பு, செப்.14

இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் விமானப்படைக்கு தொடர்ந்து இந்தியாதொழில்நுட்பவசதியைவழங்கவேண்டும். அது இந்தியாவுக்குரிய கடப்பாடாகும். அதனை உரிய காலத்திற்கு முன்னர் கைவிட முடியாது.

இலங்கை அரசு தரப்பில் இவ்வாறு வலியுறுத்தப்படுகிறது.

இலங்கை விமானப்படையினரின் செயற்பாடுகளுக்கு உதவி வழங்குவது தொடர்பாக இந்தியாவுக்கும் எமது நாட்டுக்கும்

(18ஆம் பக்கம் பார்க்க)



வந்தாடும் மாமயில் ஏறிய – கந்தா நின்
சேவடி தொழுதேன் கைவிடலாகாதையா
கந்தையா முருகையா கைவிடலாகாதையா
ஆறுதலை வேலவனே எனக்கு

ஆறுதலைத் தாருமையா
வேறுகதி நானறியேன்
வேலவனே இங்கு வாருமையா
ஓடிவாருமையா, ஆடிவாருமையா!



தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

வெங்கடேஸ்வரா இல 125A 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

திருவருள்மிகு வெற்றிலைக்கேணி முள்ளியான்
மண்டலாய்ப் பிள்ளையார் கோயில் மணவாளக்கோல

## சங்காபிஷேக விஞ்ஞாபனம்

16.09.2008 செவ்வாய்க்கிழமை

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருஷம் ஆவணி மாதம் 30ஆம் நாள் 16.09.2008 செவ்வாய்க்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரம் கூடிய சுபவேளையில் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகம் நிகழ திருவருள் கூடியுள்ளது.

நாட்டுநிலைமை காரணமாக புலோலி மேற்கு வத்தனைப் பிள்ளையார் ஆலயத்தில் சென்றகாலங்களில் நடைபெற்றது போன்று மண்டலாய்ப் பிள்ளையாருக்கு அபிஷேகம் நடைபெறும் என்பதையும் அதில் பங்குகொள்ளும் அடியார்கள் வந்து கலந்துகொண்டு விநாயகப் பெருமான் திருவருள் பெறுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மங்கள இசை
ஜீவரட்ணம் குழுவினர்(நெல்லியடி),
முருகதாஸ் குழுவினர்(பருத்தித்துறை).
ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ.மண்டலேஸ்வரக்குருக்கள்.
(சி/554465)

## யா/இராமநாதன் கல்லூரி கலைவிழா

எமது கல்லூரியில் இன்று(14.09.2008) ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்த கலைவிழா நிகழ்வு எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 26.10.2008 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி.
(78463)

## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. அதிபர்
சண்.வாமதேவன் அவர்களின் அன்புத் தாய்
திருமதி அன்னலட்சுமி சண்முகராசா
அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு அன்னாருக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

கோட்டக் கல்வி அலுவலர்,
அதிபர்கள், நல்லூர் கோட்டம்.
(சி/554647)

## கண்ணீர் அஞ்சலி



கலாபூஷணம் நாகசுர வித்துவான்
வி.கே.கானமூர்த்தி
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நாகசுர வித்துவான்
எல்.எஸ். ஜெயநாதன்
குடும்பத்தினர்.
உடுப்பிட்டி. (சி/554643)

## இரண்டாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



அமரர்
சிவராசா சிவசேகர்
(சுதர்சன் வீடியோ சென்ரர், ஆடியபாதம் றோட்)
மலர்வு 01.05.1978
உதிர்வு 06.09.2006

பாசத்தின் உறைவிடமே
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே
எங்கள் இதயத்தின் இதயத்துடிப்பே
இன்று உம்மைக் காணாமல் கண்ணீர் விடுகின்றோம்
எம் உறவே அழகான உன் உடலுக்கு உயிர்
கொடுத்த இறைவன் அந்த உடலுக்கு அதிக
ஆயுளைக் கொடுக்க மறுத்துவிட்டானா? மறந்துவிட்டானா?
யாரிடம் நீதிகேட்பது என்று - உன்
உறவுகள் ஏங்கித்தவிக்கின்றன.

இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (78458)

என்றும் உன் நினைவுடன் வாழும்:
தாய், சகோதர, சகோதரிகள், அண்ணி,
பெறாமக்கள், சித்திமார், பெரியம்மாமார்.

## விற்பனைப் பிரதிநிதி

உலகப் புகழ்பெற்ற Japan நிறுவனத்தின் கணனிவகைகளை (Labtop) யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்வதற்காக துடிப்புமிகு ஆர்வமுள்ள திறமையான இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆர்வம் மிக்க இளைஞர்கள் சுயவிவரத்துடன் தொடர்பெண் என்பவற்றைக் குறித்து ஏழு நாள்களுக்குள் த.பெ. எண் 158, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் தொலைத் தொடர்பு நிலையத்துக்கு தமிழ், ஆங்கிலம் ரைப்செற்றிங் தெரிந்தவர்கள், போட்டோப் பிரதி, தொலைபேசி இயக்குவதில் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும்.

மே/பா உதயன்
விளம்பர இல- 3141

## விற்பனைக்கு

மரம் + கண்ணாடியிலான கடைகளில் பொருள் காட்சிப்படுத்தும் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: கே.பரமநாதன்,
4/3, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. :- 0774245943, 021 222 6183

## தேவை

அனைத்து வெதுப்பக உள்வேலையும், மெசி னறி வேலையும் தெரிந்த அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை. நேரில் சமுகந்தரவும்.

சந்திக்கும் நேரம்:- 9மணிமுதல் 12மணிவரை
காங்கேயன் வெதுப்பகம்,
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.

## விற்பனைக்கு

புதிய MICRO VAN எட்டு ஆசன வசதி கொண்டது, 800C.C விற்பனைக்கு உண்டு.

Dr.கண்ணா,
சித்தங்கேணி.

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணர் ஏரம்பு

காரைநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணர் ஏரம்பு நேற்று (13.09.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரக்குட்டி - நீலாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும், புஸ்பநாயகியின் அன்புக் கணவரும், நவரட்ணம், விஜயரட்ணம், குபேரரட்ணம், கிருஸ்ணரட்ணம், ரகுரட்ணம், ஜீவகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மைதிலி, அனுசா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2008) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

173, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருளம்பலம் சிவக்கொழுந்து

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளம்பலம் சிவக்கொழுந்து நேற்று (13.09.2008) சனிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலத்தின் அன்பு மனைவியும், சறோஜினிதேவி (பேபி - கனடா), சீவரத்தினம் (கனடா), சிவஞானம் (ரதி - சுவிஸ்), சிவகுமாரி (கனடா), சாந்தகுமாரி (ஜேர்மனி), தயாநிதி (ஏழாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நல்லையா, கந்தையா, முத்தையா, கனகம்மா, சின்னத்தம்பி மற்றும் சிதம்பரப்பிள்ளை, தம்பிராசா, ஜெகராசா (அப்பா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2008) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான், காடாகரம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை. (78456)
தகவல்:
தயாநிதி (மகன்).

### கோதண்டபாணி கானமூர்த்தி

(நாதஸ்வர வித்வான், கலாபூசணம், நாதஸ்வர இன்னிசைச்சக்கரவர்த்தி, நாதஸ்வர இசையருவி)



மூளாயைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கோதண்டபாணி கானமூர்த்தி 11.09.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோதண்டபாணி - ராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், நாராயணசாமி - கிருஸ்ணாம்பாள் தம்பதியினரின் அன்பு மருமகனும், நாதஸ்வரமேதை V.K.பஞ்சமூர்த்தி, காலஞ்சென்ற தவில் வித்துவான் V.K.விஜயமூர்த்தி, ஆனந்தவல்லி ஆகியோரின் சகோதரரும், கலாபூசணம் K.R.சுந்தரமூர்த்தி, ஜெயராணி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மோகனாங்கி, கண்ணதாசன் (ஹொலண்ட்), கிருஸ்ணதாசன், சந்திரசேகர் (கனடா), காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ராம்குமார் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), பாலமுருகன் (நாதஸ்வர இளம் சக்கரவர்த்தி), நந்தினி (ஹொலண்ட்), ஜெயந்தி (மலேசியா), ராஜராஜேஸ்வரி (கனடா), விஜயசிறி, தவில்வித்துவான் இராமதாஸ், நாதஸ்வரவித்துவான் தேவதாஸ், கோபிதாஸ், கிருபாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாருமதி (ஜேர்மனி), வசந்தா (சுவிஸ்), சுதர்சா (கனடா), சசிரேகா (கனடா), குமரேஸ் (நாதஸ்வர இளவரசு), விஜயகுமாரி, பவதாரணி, பவசர்மிலி ஆகியோரின் பெரியதந்தையும், லக்ஷிகா, வர்ஷிகா, சாரங்கன், தரங்கினி, நிஸ்கலன், விவுசன், ஹாசினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், இசைப்பிரியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (சி/554650)
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இராசையா சின்னம்மா



குருந்து வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மில் லேன், பிரம்படி, கொக்குவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா சின்னம்மா நேற்று (13.09.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வியாழர் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்புத் துணைவியும், கிரிதரனின் அன்புத் தாயும், பொன்னுத்துரை, மகேஸ்வரி, பாலசிங்கம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சகுந்தலாவின் அன்பு மாமியாரும், புருஷோத், சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் லேன்,
பிரம்படி,
கொக்குவில் கிழக்கு. (78452)
தகவல்:
கிரிதரன் (மகன்).


## A/L 2008 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

DMI கல்வி நிறுவனமானது, அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளுக்கு விசேட கட்டணச்சலுகையை வழங்குகின்றது.

Diploma in Microsoft Office
Diploma in PC Application
Diploma in Computerized Accounting
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip. in Web Designing & Development
Dip. in Video Production & Multimedia

வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான
கணக்கீட்டு மென்பொருள் கற்கைநெறி
Tally
#Quick Books
# MYOB
# Accpack
JOIN WITH LEADERS IN ACCOUNTS
100% செய்முறைப்பயிற்சி

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
12/09/2008 , 14/09/2008 , 15/09/2008 , Time : 10.00 a.m.

DMI COMPUTER EDUCATION
NO. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



கலாபூஷணம்
நாகசுர வித்துவான்
V.K.கானமூர்த்தி
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குமாரசிங்கம் குடும்பம் - நாவற்குழி,
கு.கிரிதரன் - ஹொலண்ட்,
லோகேஸ்வரன்- யதுாஸ் வீடியோ (திருநெல்வேலி, கொழும்பு),
சோ.ஜீவபாலன் - நாவற்குழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளைப் பலிக்கடாவாக்க அனுமதிக்கக் கூடாது என்ற மனிதாபிமானச் சிந்தனை ஐ.நாவுக்கும் இல்லையா?

ஊர்தி முடிச்சுகளோடு வரிசையாய் வாகனங்கள் வன்னி வீதியின் புழுதியைக் கிளப்பியபடி அவசர அவசரமாக வவுனியாவிலுள்ள அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கிப் பறக்கின்றன.

இது ஒன்றும் போருக்குப் பயந்தோடும் அகதிகளின் இடப்பெயர்வுக் காட்சியல்ல. மாறாக இடம்பெயரும் வன்னி மக்களின் இன்னல்களைத் தீர்க்க வேண்டிய தொண்டு நிறுவனங்கள் அரச கட்டளைக்கு அடி பணிந்து, மக்களைக் கைவிட்டு விட்டு ஓடிச் செல்கின்ற சம்பவமே மேலே கூறப் பட்டுள்ளது.

மக்களை மீட்பதற்கான மனிதாபிமான நடவடிக்கை என்ற போர்வையில் வன்னிப்பகுதி மீதான யுத்தத்தை முன்னெப் போதுமில்லாதவாறு அதிதீவிரப்படுத்தியுள்ளது அரசு. இடம்பெயர்வுகளாலும், எறிகணை வீச்சுக்களாலும், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களாலும் நாளும், பொழுதும் இரத்தத்தையும், சாவுகளையும், ஒப்பாரிகளையுமே வன்னிப் பகுதி மக்கள் சந்திக்க வேண்டியவர்களாயுள்ளனர். தம் முடைய பூர்வீக வசிப்பிடங்களையும், சிறுகச் சிறுகச் சேர்த்திருந்த உடைமைகளையும் இழந்து,



நிர்க்கதியான மக்கள், மரநிழல்களில் இப்போது அடைக்கலம் புகுந்துள்ளனர்.

எவ்வித அடிப்படை வசதிகளுமற்று, அடுத்த பொழுது பற்றிய அவநம்பிக்கைகளோடு வாழ்கின்ற மக்களின் துயர் துடைப்பதில் சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் தம்மாலியன்றளவு செயற்பட்டன. உணவுப்பொருள்கள், கூரை விரிப்புகள், சமையல் பாத் திரங்கள், பாய்கள், உடுபுடைவை கள், என்பன வற்றைப் பாதிக்கப் பட்ட மக்களுக்கு உடனடியாகவே தொண்டு நிறுவனங்கள் பகிர்ந்தளித்துவந்தன.

**சூனிய வெளிகளே கைப்பற்றப்பட்டன**

வன்னி மீதான யுத்தத்தில் படையினரால் மக்களற்ற 'சூனிய வெளிகளே' ஆக்கிரமிக்கப்பட்டன. நிலங்களைக் கைப்பற்றுவதில் அரசுத் தரப்பு பெருமீவெற்றியீட்டியிருந்தாலும், பொதுமக்களைத் தமதுகட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியாமல் போனது. அழிவிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்

கூடிய அழைப்புகளை விடுத்தல் என்பன போன்ற அரசின் நடவடிக்கைகள் எல லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக வீணாகிப் போயின. எனவே மக்கள் மீதான நெருக் கடிகளை இன்னும் தீவிரப்படுத்தி, அதனூ டாக இனி உயிர்வாழ ஒரேவழி அரசபகு திக்குள் சென்று வாழ்வதுதான் என்ற நிலைக் குள் மக்களைத் தள்ளும் முயற்சிகள் எடுக் கப்பட்டுவருகின்றன.

எனினும் இந்த முயற்சிகளுக்கு சர்வ தேசத் தொண்டு நிறுவனங்களின் செயற் பாடுகள் பெரும் முட்டுக்கட்டையாக அமைந்தன. தொண்டு நிறுவனங்களி னூடாக மேற்கொள்ளப்பட்டு வந்த மனிதாபிமான நடவடிக்கைகளால், அரச கட்டுப் பாட்டுப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மன திலே தோன் றவில்லை. இதனால் தொண்டு நிறுவனங்களின் மீது பலவித நொண்டிக் காரணங்களை முன்வைத்த ஆளுந் தரப்பு, அவர்களின் பொதுநலச் செயற்பாடு களுக்கும் தடைகளை விதிக்கத் தொடங் கியது.

பல.தொண்டு நிறுவனங்கள் தமது வாகனங்களை விடுதலைப் புலிகள் பயன்படுத்துவதற்கு கொடுப்பதாகக் குற்றஞ்சாட்டிய படைத்தரப்பு, புதிதாக வாகனங் களை வன்னிப் பகுதிக்குள் அவை கொண்டு செல லத் தடை விதித் தது. வன்னியில் உள்ள தொண்டு நிறுவன அலுவல கங்களில் உள்ள பொருள்களின் பட்டியல்களும், மக்களுக்கு எவ்வகை யில் அவை விநியோகிக்கப்பட்டன என்ற விவரங்களும் படைத்தரப்பால் பெறப்பட் டன. அத்தோடு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தொண்டு நிறுவனங்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு அரசு அனுமதியளித்தது. உயர் தொழினுட்ப வசதி கொண்ட தொலைத் தொடர்புக் கருவிகளை தொண்டு நிறுவ னப்பணியாளர்கள் பயன்படுத்தவும் உட னடியாகத் தடைவிதிக்கப்பட்டது. இவற் றையெல்லாம் மறுபேச்சின்றி சிரமேற் கொண்டு செய்து வந்தாலும், மட்டுப் பாடான வளங்களைக்கொண்டும் மக்க ளின் துயர்துடைக்கும் பணிகளைச் செய் வதிலிருந்து தொண்டு நிறுவனங்கள் தவறவில்லை.

**நொண்டிக் காரணங்கள்**

மேலும் கண் மண் தெரியாமல் வன் னிப் பகுதியெங்கும் படைத்தரப்பு நடத்து கின்ற விமானத்தாக்குதல்களால் அப்பா விப் பொதுமக்கள் கொல்லப்படுவதும், காயப்படுத்தப்படுவதும் அன்றாட நடவ

இப்போது வன்னிப் பகுதியில் இயங்கி வருகின்ற சகல தொண்டு நிறுவனங் களும் வெளியேற வேண்டும் என்று அரசு ஆணையிட்டதைத் தொடர்ந்து தமது பொருள்கள், வாகனங்கள் என்பவற் றோடு ஐ.நா அமைப்புகள் உள்ளிட்ட பல சர்வதேசப் பொதுஅமைப்புகள் உடன டியாகவே தமது இருப்பிடங்களைக் காலி செய்து கொண்டு, வெளியேற ஆரம்பித் துவிட்டன.

**பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்....**

இதனால் பனையால் விழுந்தவனை மாடேறி மிதித் ததைப் போல வன்னி மக்களின் நிலை ஆகிவிட் டது. தொண்டு நிறுவனங்களின் உதவியால் கிடைத்து வந்த ஒருவேளை கஞ்சிக்கும் அரசின் உத்தரவு ஆப்பு வைத்துவிட்டது. அத்தோடு இது வரை காலமும் போரினால் பாதிப் புற்ற மக்களுக்குச் சேவை புரிந்து வந்த எம்.எஸ்.எவ். என்ற பிரெஞ்சு மருத்துவர் குழுவும் அரசின் உத்தரவுக்கமைய



மூதூரில் தொண்டு நிறுவனமான 'அக்ஷன் பாஃம்' நிறுவனப் பணியாளர்களுக்கு நேர்ந்த அவலச்சாவுகள் தமக்கும் நிகழ்ந்து விடுமென்ற அச்சமும் இவ்வாறு இயலா மையோடு தொண்டு நிறுவனங்கள் எதிர்ப்பின்றி வெளிச்செல்வதற்கு காரணமாக இருக்குமோ என்று எண ணத் தோன்றுகிறது.

சமாதான காலத்தில் நீ முந்தி, நான் முந்தி என்று முண்டியடித்துக் கொண்டு வெள்ளைச் சிறகுடன் உள்நுழைந்த தொண்டு நிறுவனங்கள், மக்கள் இன் னலுறும் போது அவர்களைக் கைவிட்டுச் செல்வதால் அவற்றின் மீதும், அரசின் மீதும் கடுங்கோபத்தை

# இனக்குரோதத்துக்கு இடம்கொடுத்து அரச கட்டளையை சிரமேற்கொண்டு வன்னியிலிருந்து வெளியேறுவது அநியாயம்!

வெளியேறியுள்ளதால், பாரிய மனிதப் பேரவலத்தை சந்தித்தாக வேண்டிய துன்பநிலைக்குள் வன்னி மக்கள் சிக்குண்டுள்ளனர்.

மோதல்களினால் இடம்பெயர்ந்து வரும் மக்கள் பாரிய சுகாதாரப் பிரச்சி னைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், மக்களின் பாதுகாப்பை

**சமகால விவகாரம்**

இருதரப்பும் உறுதிப்படுத்த வேண்டு மெனவும், மீண்டும் வன்னியில் சேவையாற்றத் தாம் தயாராய் இருப்பதாகவும் எம்.எஸ்.எவ். அமைப்பு தெரிவித்துள்ளது. இதே போன்றே இடம் பெயர்கின்ற எல்லாப் பொது அமைப்புக ளும் மக்களின் துயர் பற்றி இரத்தக் கண்ணீர் வடிக்கின்றன.

கொசாவா, மற்றும் சில ஆபிரிக்க

தமிழர் தரப்பிடம் ஏற்படுத்தியுள்ளன. தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு 'இச்செயலானது தமிழ் மக்களை கூண்டோடு ஒழிக்கும் நடவடிக்கை' என விமர்சித்து, அரசுக்கு தனது கண்ட னத்தை வெளியிட்டுள்ளதோடு, இந்த விடயத்தில் சர்வதேசமும், ஐ.நாவும் தலையிட வேண்டுமென அவசர வேண்டு கோளும் விடுத்துள்ளது.

இது தவிர பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாகப் பல பொதுநல ஒன்றியங்களும் தொண்டு நிறுவனங்களின் வெளியேற் றத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கருத்துக்களை, அறிக்கைகள் வாயிலாக வெளியிட்டுள்ளன. தொண்டு

**- ஒளண்யன் -**

நிறுவனங்கள் வெளியேறினால், தமது வாழ்வே அஸ்தமித் துவிடுமென்பதை உணர்ந்த வன்னி மக்களின் உச்சக் கட்டக் குமுறலாக - ஐ.நா தொண்டு நிறுவனங்களின் உறைவிடங்களைச் சுற்றி வளைத்துப் பெரும் முற்றுகைப் போராட்டம் தொடங்கப்பட்டுள்ளது. நடத்தப்பட்டுள்ளது. இதன்போது அர சின் கட்டாயத்தின் பேரிலேயே தாம் வெளியேறிவருவதாகவும், மக்களின் உள்ளத்து உணர்வுகளுக்கு மதிப்பளித்து விரைவில் தமது நடவடிக்கைகள் தொடர்பான நல்ல முடிவினை அறிவிப்பதாகவும் ஐ.நா அமைப்புகளின் பிரதிநிதிகள் மக்களிடம் தெரி வித்துள்ளனர். ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கீ-மூனும் மக்களின் வாழ்வைக் காப்பதற்காக இருதரப்பும் உடனடியாக அரசியல் தீர்வொன்றைக் காணும் நட வடிக்கையில் இறங்க வேண்டும் என்று கேட்டுள்ளார். இவையெல்லாம் யுத்த முனைப்போடு நிற்கின்ற அரசின் முடி வினை எள்ளளவும் மாற்றப் போவதில்லை.

தொண்டு நிறுவனங்கள் முற்றாக வெளியேறினால், பட்டினிச்சாவுகளும், வசதியீனங்களும், தொற்று நோய்களும், மருத்துவக் குறைபாடுகளும், விஸ்வரூபமெடுத்து மக்களை விழுங்கத் தொடங்கிவிடும். அத்தோடு தொண்டு நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதிகளில் தன்னுடைய எறிகணை, விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களைத் தவிர்த்து வந்த படையினர் இனித் தம்மிஷ்டபடி நீக்கமற வன்னி நிலமெங்கும் தாக்குதலைத் தொடங்கி விடுவார்கள். கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித் துள்ளதைப் போன்று பட்டினிச் சாவுகளையும், பரிதாபமான வாழ்க்கையையுமே தொண்டு நிறுவனங்களின் வெளியேற்றம் வன்னி மக்களுக்குப் பரிசளித்துள்ளது. *****

# வன்னி மக்களின் முற்றுகைப் போராட்டம் உயர் மட்டத்தின் உணர்வைத் தொடுமா?

கொள்வதற்காகப், படையினரின் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களை நோக்கி ஓடா மல் புலிகளின் பிரதேசங்களை நோக்கியே பொதுமக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

தமது பிரதேசத்துக்குள் பொதுமக் களை உள்வாங்குவதனூடாக படைத் தரப்பு பல அனுகூலங்களைப் பெறமுடி யும். கைப்பற்றிய பிரதேசங்களில் மக் களைக் குடிய மர்த்துவதனால், புலிகள் அப்பகுதிகள் மீது பதில் தாக்குதல்களை நடத்த முடி யாத சூழல் ஏற்படும். ஏனெ னில் தாக் குதலில் சிக்கிப் பெருமளவான பொது மக்கள் உயிரிழக்கக் கூடும். அத்தோடு புலிகளின் பகுதியிலுள்ள மக் களை அரசகட்டுப் பாட்டுப் பிரதேசத் துக்குள் வரவழைப்பதனூடாக, புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு என்ற தோற்றத்தையும் உலகின் கண்களுக்கு காட்ட அரசுக்கு வசதியாயிருக்கும்.

இதனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் மக்களைத் தன்னு டைய கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொ ண் டு வருவதற்கு அரசுத்தரப்பு பலவித உத் திகளையும், பிரசாரப்படுத்தல்களையும் கையாண்டது. விமானங்கள் மூலம் துண் டுப் பிரசுரங்கள் வீசுதல், அரச ஊடகங் களினூடாக ஆசை வார்த்தைகளுடன்

டிக்கையாகிவிட்டது.எனினும் 'நாங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத் தீவில்லை. விடுதலைப் புலிகளின் இலக் குகளையே தாக்கியளித்தோம்'



என்றே இத்தாக்குதல்களை அரசு அறிக்கை களூடாக வெளிப் படுத்தியது. ஆயி னும் விமானப் படை தாக்கியது விடுதலைப் புலிகளையல்ல; அப்பாவிப் பொது மக்களையே என்ற உண்மையை அம்பலப்படுத்துவதிலும் தொண்டு நிறுவனங்களுக்குப் பங்குண்டு என்று அரசு சந்தேகிக்கிறது போலும். அதனால்

நாடுகளில் தன்னார்வத் தொண்டு நிறுவ னங்களை வெளியேறுமாறு அந்நாட்டு அரசுகள் அறிவுறுத்திய போதும் 'எங்களு டைய சேவை மக்களுக்கு மிகவும் அவசிய மானதாக இருக்கின்றது. எனவே நாம் வெளியேற மாட்டோம்' என்று அந் நாடுகளிலே அரசுகளுடன் முரண்டுபிடித்து மக்களுக்குத் தொடர்ந் தும் தொண்டு நிறு வனங்கள் சேவை செய்த நிகழ்வுகள் சமீபகாலத்தில் நடந்தவைதான். அங்கு தமது சேவை நலனை முதன்மைப்படுத்தி, மக்களுக் காய போராடிய அதே தொண்டு நிறுவ னங்கள்தான் இப்போது இலங்கை அரசு வெளியறுேமாறு அறிவித்தவுடன் சின்னதான முணுமுணுப்பை மாத்திரம் தமது எதிர்ப்பாக வெளியிட்டுவிட்டு, வெளியேறுகின்றன. சில வேளை களில் அரசுடன் முரண்டு பிடித்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.வி.ஜி. மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



R.V.G. ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தேரினிலே நீ வருவாய் செல்வ சந்நிதி முருகா!
பாரினிலே எமைச் சூழ்ந்துள்ள பகை எனும் துயர்
விலக்கி மீட்சி தர வேண்டுமையா!
தரவேண்டும் நிம்மதியை சந்நிதி வேலா நீ


## கண்ணீர் அஞ்சலி



### வி.கே.கானமூர்த்தி

ஈழத்தின் இசையுலகின் ஓர் சிகரம்
காலத்தின் விதியதனால் சாய்ந்ததேனோ?
தாளத்தின் ஓசைக்கு அசைகின்ற -
உன் விரல்கள்
உலகத்தை கலங்க வைத்து அசைவின்றிப்
போனதேனோ?
கோலம் கலைந்ததேனோ?
குயில் ஒன்று கூவ மறந்ததேனோ?
உன் கான மழையில் நனைந்தவர் நாம்
இன்று கண்ணீர் மழையில் நனைகின்றோம்!

உம் ஆத்ம சாந்திக்காய் அனைவரும் பிரார்த்திப்போம்.

தகவல்:
பா.சிவசேந்தன் (கனடா)
திருமதி யோகராணி
பாலசுப்பிரமணியம்.

கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (78434)

## கண்ணீர் அஞ்சலி



கலாபூஷணம்

### வி.கே.கானமூர்த்தி

நாதஸ்வர மேதை கலாபூஷணம் வி.கே.கானமூர்த்தி அவர்களின் மறைவைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெரியதம்பிரான் ஆலய
ஏழாலை. தொண்டர்கள்.

## சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம்
## அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய
## பொதுக்கூட்ட அழைப்பு

இடம் : ஆலய மண்டபம்
காலம் : 28.09.2008 ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 10 மணிக்கு
தலைவர் : திரு.பொ.குகன்

அத்தருணம் நித்திய வழிபாட்டாளர்கள் உபயகாரர்கள், ஆயுட்கால உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் அனைவரையும் வருகை தந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

பதிவு இல. HAJA/261 - 05 - 12 - 1988

இ.கிருஷ்ணசாமி
செயலாளர்.
(78427)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

பிரபல முன்னணி விற்பனை நிறுவனமொன்றிற்கு விற்பனைப் பிரதிநிதிகள் உடன் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது. திறமைக்கேற்ப தகுந்த சம்பளம் வழங்கப்படும். 20.09.2008 இற்கு முன் கிடைக்கக்கூடியதாகத் தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.

இல.3140, மே/பா,உதயன்.
(78450)

## தேவை

உணவகத்திற்குரிய கதிரை, மேசை, உழுந்து அரைக்கும் இயந்திரம் மற்றும் வேலையில் அனுபவமுள்ள, பழக விரும்புவோரும் தேவை.

தொடர்பு: ஓமக்ஸ் ஹோட்டேல்
372, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (78453)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் செல்லையா
பொன்னு



தோற்றம்: 07.03.1928
மறைவு: 26.08.2007

திதி: திரயோதசி (13.09.2008)

தகவல்:
குடும்பத்தினர்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12
★
11
★
1939



உதிர்வு
27
★
08
★
2007

### திருமதி இராசதுரை பத்தர் இராசலட்சுமி

திதி:-சதுர்த்தசி 14.09.2008

அன்பில் தவம் இருந்து எம்மை ஈன்று எடுத்த தாயே
அம்பாள் திருவடி ஐக்கியமாகி விட்டீரே
உமது நினைவில் வாழும்.

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமகன்மார்,
உறவினர்.

புதிய செம்மணி வீதி,
585, சிங்கராஜர் லேன்,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
077 9231587, 077 4676557 (78449)

## தவறிவிட்டது

ஏழாலை மத்தி களவாவோடை என்னும் முகவரியுடைய நவரத்தினம் நிதர்சன் என்பவரது தேசிய அடையாள அட்டை (912312755V) கடந்த 05.09.2008 வெள்ளிக்கிழமை புன்னாலைக்கட்டுவனுக்கும், மல்லாகத்துக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, சங்கரத்தையில் வீடு மற்றும் ரெலிபோன் பூத் ஒன்றும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: சி.சிவநாதன்,
சாந்தி மில் வீதி, வட்டு.தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.
T.P.: 021 222 2768, H.P.077 6569883
(78440)

## மணமாலை

இந்து, கிறிஸ்தவ சகல சமூகங்கள்/ குடும்பங்களிலுமுள்ள சகல மணமக்களுக்கும் உரிய திருமண சேவைகள்.

அருள் முருகன் திருமணப் பணியகம்
இல.03, யாழ்.வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்ப்பாணம்.
அழைப்புகள் 222 9334 இரவு 9.30 மணிவரை மட்டும்.
(78432)

## ஜான்சி அழகுக் கலையகம்



குறுகிய கால புதிய பிரிவுப் பயிற்சி
வகுப்புகள் 20.09.2008
சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

- ★ அழகுக் கலை
(பேசியல், தலைமுடி அயன்செய்தல், தலை முடி சுருட்டுதல்)
- ★ மணப்பெண் அலங்காரம்
(இந்து, கிறிஸ்தவ, சிங்கள,குஜராத் கலாசார முறைகள்)
- ★ தலை அலங்காரம் (சடை நாகம் தயாரித்தல்)
- ★ புடைவை அலங்காரம் (சாறி வேக்ஸ்)
- ★ (F) பப்றிக் வர்ணம் தீட்டுதல் (கிளாஸ், மண் வர்ண வேலைகள்)
- ★ கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள்
- ★ பூ வேலை, கைவேலை, பொம்மைகள் தயாரித்தல்
- ★ ரெடி பியார் (நாய்க்குட்டி) பொம்மைகள் தயாரித்தல்
- ★ இலகு வழித்தையல் முறைகள்.

சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்கள் என இரு பிரிவுகளாக வகுப்புகள் நடத்தப்படும். மேலதிக விவரங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரிலோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ உடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள்
021 222 6950, 060 221
8360, 077 6258186

583, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
வில்லியம் பேக்கரிக் கட்டடத்தில்.

## விற்பனையாகின்றது.....

- ★ அரச அலுவலக தாபன நடைமுறை
அலுவலக முகாமைத்துவம்
- ★ மாகாணசபை சட்டங்கள்
- ★ தாபனவிதிக் கோவை
- ★ அலுவலக முறைமை
- ★ ஆசிரிய சேவை விடையங்கள்

மாதிரி வினா விடைகளுடன்
சகல புத்தகசாலைகளிலும்
கிடைக்கும்.(சி/554639)

## ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்

தாய்
மடியில்
13
.
06
.
1981



சந்நிதியான்
காலடியில்
25
.
08
.
1999

### செல்வி திருமகள் கனகசபை

(மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

திதி: சதுர்த்தசி

மறுமையில் எம்முடன் நீ....
திருமகளே எம்மொரு மகளே
திருமுருகன் தேர்காண
சந்நிதிக்கு சென்ற வேளை
சாவுதனை தந்து உனை
ஆட்கொண்ட பெருமான் எமை
ஆறாத்துயரில் ஆழ்த்தினானே.

உன்நினைவுடன்
குடும்பத்தினர்.

த.மு.:125, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.
நி.மு.: மீசாலை வடக்கு,மீசாலை.
(78443)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 15.09.2008 திங்கள் விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ★ ராஜீவ் - நவாலி வீதி
ஆனைக்கோட்டை
- ★ மதுரா - ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
- ★ சிற்றி பாம் ரேடேர்ஸ் -
கல்வியங்காடு
- ★ திருமகள் களஞ்சியம் -
சிவலிங்கப் புளியடி
- ★ P. ரவி - சுபதக்கத்தோர் வீதி
சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### ஏணஸ்ற் காணிக்கை மரியை



யாழ்ப்பாண்ணம், டேவிற் வீதி, இலக்கம் 58இல் வசித்த ஏணஸ்ற் காணிக்கை மரியை நேற்று (13.09.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏணஸ்ரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செபதேயு - மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - பெரியபிள்ளை தம்பதியரின் மருமகளும் அமரர் பாலிஸ், ஏணஸ்ற் ஆகியோரின் சகோதரியும் பத்மா, பற்றீசியா ஆகியோரின் மைத்துனியும் குமார், சூரி, விஜய குமார், சாந்தகுமார், தர்மினி ஆகியோரின் பாசமிகு தாயும் ரஜனா, சூட்டி, ரெனிசியா,ஜெபர்சன் ஆகியோரின் மாமியும் தேனுஜா, அனுஷியா, டிலெக்சனா, பொம்பிடோ, பெறோஸ், றிசானா, சரணியா, ஏனெஸ்ரினா, கஸ்ரோ, எடினா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.09.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இறுதி ஆராதனையின் பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.58, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம். (78430)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

## தேர்த் திருவிழா சிறப்புமலர் - 14.09.2008

### ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் கொக்குவிலில் மஞ்சவனப்பதியான் எனும் திவ்விய நாமத்துடன் விளங்கும் முருகப் பெருமான் இன்று சித்திரத் தேர் ஏறி அருள் பாலிக்கும் இவ்வேளையில் யாழ்ப்பாணத்தின் சிறப்பு வாய்ந்ததும் முருகன் ஆலயத்தில் பழமை வாய்ந்ததுமான இந்த ஆலயத்தில் இன்று வள்ளி தெய்வானை சமேத சண்முகப் பெருமான் தேரேறி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த இரதோற்சவத்தை காணும் அடியவர் களுக்கு சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு கிடைக்க வும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்கவும் எல்லாம் வல்ல கலியுக வரதன் கந்தவேள் பெருமானின் ஆசி கிடைக்க பிரார்த்திக்கின்றேம்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்'

சிவப்பிரம்மஸ்ரீ. ஈசான சிவாச்சாரியார்
சொ.இ.விக்னேஸ்வரக்குருக்கள்,
ஆலய பிரதம சிவாச்சாரியாரும் மகோற்சவ குருவும்.

### தர்மகர்த்தா சபையின் செய்தி

மஞ்சவனப்பதி வாழும் வரமணியே!
தஞ்சமென நின்பால் சரணடைந்தேன் - செஞ்சொல்
குணபதியே! ஞானக்குருபரனே! செல்லக்
கணபதியே! காப்பாய் கனிந்து!.

அழகிய சித்திரத்தேரில் ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேறுதலைத் தந்து தேச நலன் காக்க மஞ்சவனப் பதியான் இன்று தேர் ஏறிவருகின்ற காட்சி அமைகின்றது.

மகோற்சவத்தில் சிறப்பிடம் பெறும் தேர்த்திருவிழா இறைவனுக்குரிய மிகச் சிறந்த இராசோபசாரமாகும். மூன்று திருத்தேர்களிலும் விநாயகரும், முருகனும், சண்டேஸ்வரபெருமானும் அமர்ந்து அசைந்தாடிச் செல்லும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். இக் காட்சியைக் கண்டு இன்புறும் அடியவர்கள் காலாகால மாக தமிழ்மக்கள் எதிர்பார்த்திருக்கும் அமைதியையே எம்பெருமானிடம் வேண்டி நிற்பர். அவ்வேண்டுதலை நாமும் வேண்டி இறைஞ்சுகிறோம் மஞ்சவனப்பதியானை.

கா.பாலசுப்பிரமணியம், தலைவர்.
இ.இராசலிங்கம், செயலாளர்.

### ஆலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

சீரும் திருவும் பொலியும் புண்ணிய பூமியாகிய இலங்கை மணித்திருநாட்டின் மகுடமெனத் திகழும் யாழ்ப்பாணத்தில் முருகவழிபாடு தமிழரசர்கள் ஆட்சிக் காலத்திலேயே சிறப்புற்று விளங்கியுள்ளது. சைவமணங்கமளும் யாழ்நகரின் வடபால் இரண்டு மைல் தொலைவில் கொக்குவில் பதியில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் வள்ளி தெய்வயானை சமேதராக சுப்பிரமணியப் பெருமான் வீற்றிருந்து மக்களுக்கு அருளாட்சி புரிந்து வரகின்றார்.

கொக்குவில் கிராமத்தில் ''மஞ்சமருதிக்காடு'' என்ற இடப் பெயருடை குறிச்சி ஒன்று காணப்பட்டது. அவ்விடம் மேட்டு நிலமாகவும், மருதமரங்கள் வானகளாவ நிறைந்த சோலையாகவும் அங்கு அம்பலவாண விநாயகடுமமூதர்த்தி என்ற பெயருடைய ஆலயமும் இருந்தது. தற்போது பரிவார மூர்த்தியாகிய விநாயகர் ஆலயம் இருக்கும் இடத்தில் இருந்த அந்த விநாயகர் 'மஞ்சமூர்த்தி' என அழைக்கப்பட்டு தற்போது மஞ்சவனப்பதி முருகனாக கர்ப்பக்கிருகத்தில் வள்ளி தெய்வயானை சமேதராக சுப்பிரமணிய பெருமான் வீற்று இருக்கிறார் என கர்ணபரம்பரைக் கதையாக கூறப்பட்டு வருகின்றது.

அங்கு அவ்வாலயமும் அதற்கு முன் ஓர் கொட்டகையும் அமைக்கப்பட்டிருந்தன. இவை யாவும் ஓலையால் வேயப் பட்டனவாகவும் தரை சாணத்தால் மெழுகப்பட்டும் வந்ததுடன் அந்தண பரம்பரையைச் சாராத சைவமரபில் வந்த ஒருவரினால் ஒரு வேளை பூசையும் இடம்பெற்று வந்தது. இவ்வாறு மடாலய மாக இருந்த இவ்வாலயம் 1817 கற்கோயிலாக அமைக்கப்பட்ட துடன் அந்தணமரபில் வந்தவர்களே நித்திய நைமித்திய கிரியை களை மேற்கொண்டு வரலாயினர். ஆரம்பத்தில் சிவஸ்ரீ சின்னப்பா ஐயர் தொடக்கம் அவர்களது பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிலா விக்கிரகங்களும் மற்றம் உற்சவ மூர்த்திகள், அவற்றுக்கான சந்நிதிகளும் முருகன் அடியார்களினால் உபயம் செய்யப்பட்டு வருகின்றது. காலத்திற்கு காலம் நிர்வாக சபை, திருப்பணி சபை தெரிவு செய்யப்பட்டு அவர்கள் தமது சிறந்த பங்களிப்பினை செலுத்தி ஆலயத்தை திருத்தியும், அமைத்தும் கும்பாபிஷேகங்களை நிகழ்த்தி இறை யருளை வளர்த்து வருகின்றார்கள்.

இந்துப் பண்பாட்டு மரபில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை எனும் நுண்கலைகள் கோயில்களை நிலைக்களனாகக் கொண்டு திகழ்கின்றன. ஆலயங்கள் ஆண்டவ னின் அருள் சுரக்குமிடம் மட்டுமல்லாது நுண்கலைகளின் உறை விடங்களாகவும் திகழ்கின்றன. இவ்வாலயத்தில் ஆகம முறைப்படி திராவிட பாணியில் கர்ப்பக்கிருகமும் ஏனைய பரிவார மூர்த்திகளது ஆலயமும், கிழக்கே பஞ்ச தளங்களை உடைய கோபுரமும் அதற்கு இரு மருங்கிலும் மணிக்கூட்டு கோபுரங்களும் அமைக்கப் பட்டுள்ளன.

புண்ணியவான்களின் கால்பதிந்து அருளுரை நிகழ்த்திய பெருமையும் இவ்வாலயத்திற்குரியதாகும். அந்த வரிசையில் திருமுருக கிருபானந்தா வாரியார், செல்லத்துரை, குமாரசுவாமிப்புலவர், மணி ஐயர் எனப் பட்ட சுவாமிநாத தம்பிரான் போன்ற மகான்கள் வந்து இறைவனின் பெருமைகளை பிரசங்க வாயிலாக எடுத் துரைத்ததுடன், புராண படனங்களுடன் இடம்பெற்று வந்துள்ளன.

தூல லிங்கமாகிய கோபுரத்தை தரிசித்தே சூக்கும லிங்கமாகிய இறைவனை தரிசித்தல் வேண்டும் என்ற நோக்கில் பஞ்சதள கோபுரம் அமைக்கப்பட்டு உள்ளது. அதில் கந்தபுராண, பெரியபுராண கதைகளை சித்திரிக்கும் வள்ளி திருமணம், சுந்தரர் கைலைக்கு செல்லும் காட்சி, நாயன்மார்கள், முருகன் சிவனுக்கு உபதேசம் போன்ற காட்சிகள் கலை அம்சத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவற்றுடன் தேரில் காணப்படும் சிற்பங்கள் மற்றும் விமானங்களில் காணப்படும் சிற்பங்களும் இறைவனது அற்புதங்களை எடுத்து இயம்புவனவாக உள்ளன.

ஆலயங்கள் வழிபடுவோனையும் இறைவனையும் இணைக்கின்ற பக்தி நிலையங்களாக அமைந்ததோடு அவை இந்துக்களது வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடை யனவாகவும் உள்ளன. அடியவர்களும் தம்மால் இயன்ற பணிகளையும் வளங்களையும் ஆலய சேவைக்கு வழங்கியுள்ளனர். அதாவது திருவிழாக்கள் செய்தல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், அன்னதானம் வழங்கல், நந்தவனம் அமைத்தல் போன்றவையாகும்.

அந்த வரிசையில் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செ.ஆறுமுகம் என்ற முருகன் அடியார் மஞ்சவனப்பதிக்கு கைலாச வாகனமும் செ.புவிராஜ் என்ற முருகன் அடியார் திருமஞ்சமும் உருவாக்குவித்துக் கொடுத்துள்ளனர்.

எமது இந்துப் பண்பாட்டின் உறைவிடம் ஆலயம். சமுதாய வாழ்வில் ஆலயம் இன்றியமையாமையாத தொன்றாகும். இந்துப்பண்பாட்டினை வளம்படுத்தி உள்ள ஆலயங்கள் ஒவ்வொரு ஊரின் மத்தியிலும் அமைந்து அங்கள்ள சகல வாழ்வினரின் உயிர்நாடியாக விளங்குகின் றது. எத்தனையோ பிறவிகள் ஈட்டிய புண்ணியத்தை ஒரு கோயிலை அண்மி வாழும்போதுதான் கிடைக்கின்றது. இப்பேற்றினை வளர்த்துக் கொள்வதே மானிடப் பிறப் பின் நோக்கமாகும்.

பன்னீர்ச்செல்வி நாகையா B.A. (Hons)

லக்ஷி
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

றமணன்
கட்டடப் பொருள் நிலையம்
இல: 528, தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

மகா நதி நகையகம்
நவீன வடிவில் அழகிய தங்க ஆபரணங்களை 22 கரட்டில் பெற்றுக் கொள்ள முடியும்.
இல: 72, ஏ, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சண்முகம்
வர்த்தக நிலையம்
புதினப் பத்திரிகை முகவர்
கே.கே.எஸ். வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்

B.K. மல்ரி சொப்
மின்சார உபகரணங்கள், அன்ரனா வகைகள், பைப் வகைகளை பெற்றுக் கொள்ளலாம்.
இல: 1008 கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

துர்க்கா றேடர்ஸ்
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.

மக்றா வயின்டிங்
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

பராசக்தி
பிறின்டிங்
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களை 22 கரட்டில் பெற்றுக் கொள்ள
செல்வி
நகை அகம்
இல: 1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2229441

வளர்மதி
புடைவையகம்
இல: 258, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கணேசன்
தொலைத் தொடர்பு சேவை
இன்ரநெற், பக்ஸ் வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

கரன் எலக்ரிக்கல்
சகலவிதமான மின்சாரப் பொருள்களதும் விற்பனையாளரும் விநியோகஸ்தரும்.
இல: 100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மகாலட்சுமி
உணவகம்
சிற்றுண்டி வகைகள் மற்றும் பலகார வகைகள் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.

செந்தூரன்
எலக்றிக்கல் அன் ஹார்ட்வெயார்
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி.

எவ வன்
படப்பிடிப்பாளர்
கொம்பியூட்டர் டிசைனிங் செய்து கொடுக்கப்படும்.
கிளை: ஆனந்தா படமாடம்
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எரிக் கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகம்
கிளை: இல: 91, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.
தொ.பே: 222 5233
இல: 86, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

நவீன வடிவங்களில் அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
ஸ்ரீகிருஷ்ணா
நகைத் தொழிலகம்
கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி.

SATS. TECH ENGINEER'S
Importers & Dealer for Satellite Receiving Equipments.
No: 182, K.K.S.Road, Kokuvil,
Jaffna. T.P: (021) 2225908.
No: 11/10B, stanley road,
Jaffna. T.P: 021 222 8812

Techno Park
Pc Repairing
& game zone,
127/2, K.K.S.Road,
Kokuvil Junction,
Kokuvil.

பரணி
கிறீம் கவுஸ்
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு செல்

## தேர்த் திருவிழாச் சிறப்பு





### பிரதம குருவின் ஆசிச் செய்தி



சிவசக்தி தந்த மைந்தன் சண்முகநாதன் தானே விரும்பி ஆற்றங்கரையில் புண்ணியர் சமாதி கொண்ட பூவரச மரத்தடியில் உறைந்ததும், அன்னதானக் கந்தனாகவும், நோய்கள் நீக்கும் அருமருந்தாளனாகவும், அருள்பாலிக்கின்றான். செல்வச் சந்நிதியில் துட்ட நிக்கிரக பரிபாலனம் புரிவதுமான தேர்த்திரு விழா நாளாம் இன்று மூன்றாம் வீதியில் முன்னவன் முன்வர மூன்று தேர்களில் வலம் வருகின்றவர்களாகவும் கதிர்காமரைத் தடுத்தாட் கொண்ட கந்தவேள் தந்தருளிய செவ்வேள் எதனை யும் வெல்லும் தனிமை யில் உயர்வு உடை யதும் என்றும் படைத்தல்,காத்தல், அழித்தல், மறைத் தல்,அருளல் என்கின்ற ஐந்தொழில் நடம்புரி ஐயன் வள்ளி, தெய்வானை சமேதர்களாக காட்சி தரும் திருக்கோலத்தை மும்மலங்களையும் குன்றுவிக்க மூன்று தேர், மூர்த்தங்களை யும் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று பெருவாழ்வு அனைவரும் பெறவும், குல தெய்வமாகிய என் நிதியும் தரும் செல்வச் சந்நிதி நாதனிடம் ஆசிவேண்டி அமைகின்றேன்.

ஆ.சிவசண்முகம் ஐயர், பிரதமகுரு, சந்நிதியான் ஆலயம்.

### சந்நிதியானுக்கு இன்று தேர்



தொல்வினை தீர்க்கும் செல்வச்சந்நிதி முருகனுக்கு இன்று தேர்த்திருவிழா. அழகன் முருகன் வேற்பெருமானாகவும், வள்ளி, தெய்வானையுடன் சண்முகப் பெரு மானாகவும், வினைகள் அறுக்கும் விநாயகப்பெரு மானுடன் சித்திரத் தேரிலே எழுந்தருளுவார்கள். புனித ஆறுபாயும்தொண்டைமான் ஆற்றங்கரை யிலே எழுந்த ருளியிருக்கும் வேற்பெருமான் ஈழம் வாழ் மக்கள் அனைவருக்கும் அமைதியும், சுபீட்சமும், சமாதானமும் நிலைக்க அருள் பாலிக்க வேண்டும் என்று வடிவேலனின் பாதக் கமலம் பணிந்து உளமாரப் பிரார்த்திப்போமாக.

சிவஸ்ரீ தங்கராசா ஐயர், குகனேந்திரா ஐயர், செல்வச் சந்நிதியாலய திருப்பணிச் சபைச் செயலாளரும்,பிரதம பூசகரும்.

### தேரேறி வந்து அருள்வாய் குகனே!



ஆற்றங்கரை அமர்ந்து நாடிவரும் அடியவரின் தீவினைகள் போக்கி நல்லருளை வாரி வழங்கும் சந்நிதி முருகன் இன்று தேரேறி வருகின்றான். தேரில் வரும் முரு கனைக் தரிசித்தால் நம் பாவவினை அகலும், நல்லருள் கிடைக்கும் என்ற எண்ணத் தினால் அடியவர்கள் பல்வேறு நேர்த்தியுடன் முருகனைத் தரிசிக்க வரும் காட்சி எல்லோரையும் திருவருள் மயப்படுத்தும் சந்நிதி முருகனைத் தரிசித்தால் மன அமைதி கிடைக்கும். முருகன் நேரடியாக வந்து தம் அடியவர் மன இருள் நீக்கி அருள் பொழிந்த ஆலயங்களில் செல்வச்சந்நிதியும் ஒன்றாகும். இச் செல்வச்சந்நிதி அருள் நிறைந்த பிரதேசமாகும். இங்கு முருகன் அடியவர் வடிவில் வந்து அற்புதங்கள் செய்த வரலாறு பல உண்டு. மன வேதனைகளைச் சுமந்து வந்த அடியவர்கள் முருகன் சந்நிதியில் தம் வேதனைகள் அற்றுப்போய் நிம்மதிபெற்ற வரலாறுகளுமுள்ளன. முருகன் சந்நிதியில் வாழ்வை நடத்திச் செல்வதே உயர்ந்த செல்வமாகக் கருதி வாழும் அடியவர் கூட்டம் இன்றும் இங்கு நிறைந்துள்ளது. இவ்வகையில் ஆலயச் சுழல் அன்னதான மடங்கள் நிறைந்தது. வருகின்ற அடியவர்களது உளச் சுமையை மட்டுமன்றி உடற்களைப்பையும் பிணியையும் போக்கி அருள் மழை பொழிகின்ற பதி செல்வச் சந்நிதி ஆகும். சந்நிதியில் தொழுது வந்தால் சகல செல்வங்களும் கிடைக்கும் என்ற பேரார்வத்துடன் மக்கள் வழிபடும் ஆலயமே செல்வச் சந்நிதி ஆகும்.

இயற்கையான அழகான ஆற்றங்கரைச் சூழலிலே சந்நிதிப் பதியில் அமர்ந்துள்ள முருகப் பெருமான் எளிமையான வாழ்வினால் மக்களை உயர வைப்பவன். அம் முருகன் மகோற்சவ காலங்களில் தேர்த்திருவிழாவன்று தேரேறி வருவது பஞ்சகிருத்தியங்களில் அழித்தலைக் குறிக்கின்றது. இங்கு அழித்தல் என்பது மக்களின் மன அ அழிப்பதைக் குறிக்கும். தேரின் வ வானில் இடம் பிடிக்கும் அடிய நன்நாளில் முருகன் அருள் வே தொழுது நிற்பர். அருள் வேண்டு ருக்கு அருளை வாரி வழங்க முரு தேரேறி வருகின்றான். அவன் தரி உள நோய் நீங்கி அருள்வேண்டு இன்றாகும். நாமும் தேரேறி வரும் மு யுடன் தொழுது அவன் அருள் பெற

ஆ.சிவநாதன்

வல்வை சிவகுரு வித்தி


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவல் இருந்தாலே நல்லது



ஒரு கிராமத்தில் பணக்கார எஜமானி ஒருவர் இருந்தார். அவருடைய வீட்டில் வேலைகள் செய்வதற்கு பல வேலைக்காரிகள் இருந்தார்கள். அந்த எஜமானி மிகவும் கண்டிப்பானவர். காலையில் சேவல் கூவும் போதே வேலைக்காரப் பெண்களை எழுப்பி விடுவார்.

இது அந்த வேலைக்காரிகளுக்குக் கஷ்டமாக இருந்தது. "இந்தச் சேவல் அதிகாலையில் கூவினால் தானே எஜமானி எம்மை எழுப்புவார்?" என நினைத்தனர்.

அதனால் ஒருநாள் இரவு, அந்தச் சேவலை எல்லோருமாகச் சேர்ந்து கொன்று புதைத்து விட்டனர். "இனி அதிகாலையில் சேவலும் கூவாது, எஜமானியும் எழுப்ப மாட்டார் நாங்கள் சந்தோஷமாக விடியும்வரை தூங்கலாம்" என்று வேலைக்காரிகள் நினைத்து மகிழ்ந்தனர்.

அவர்கள் கண் அயரும் நேரத்தில் எஜமானியின் குரல் கேட்டது. "இப்போது தான் படுத்தேன் இன்னும் பொழுது விடியவில்லை" என்று வேலைக்காரிகளில் ஒருத்தி குரல் கொடுத் தாள். "அப்படியா? நான் விடிந்துவிட்டது என நினைத்தேன். சரி பரவாயில்லை நீங்கள் தூங்குங்கள்" என்றவாறே கண்ணயர்ந்தார் எஜமானி.

ஒரு அரை மணி நேரத்தின் பின் மீண்டும் எஜமானியின் குரல் கேட்டது. திடுக்கிட்டுக் கண் விழித்தனர் வேலைக்காரிகள். "அம்மா இன்னும் விடியவில்லை இப்போது நேரம் 11 மணி" என்றனர்.

"அப்படியா? நான் விடிந்துவிட்டது என்று நினைத்தேன்..." இப்படி இரவெல்லாம் தூங்காமல் எஜமானி பல தடவைகள் எழுப்பி விட்டார். அப்போதுதான் அவர்களுக்கு ஒன்று புரிந்தது "இதைவிடச் சேவல் இருந்தாலே நல்லது. அது கூவும் வரையாவது நிம்மதியாகத் தூங்கினோம்! இப்போது அநியாயமாகக் கொன்று விட்டோமே" என்று மனம் வருந்தினர். எதனையும் செய்யும் முன் பின்னுள்ள விளைவை சிந்தித் துப் பார்க்க வேண்டும்.

சு.விஜிதா, தரம் 8A யா/மகாஜனக் கல்லூரி.




நந்திவர்மன் நடுங்கும் விரல்களோடு மனைவி கொண்டுவந்த செய்தியோலையை வாங்கினான்.

"மாறவல்லி! இந்த மடலை உன்னிடம், யார் தந்தது?" என வினவினான்.

"யாரென்று தெரியவில்லை அரசே. அந்தப் புரத்திலுள்ள என்னுடைய அறைக்குள் திடீரென இந்த ஓலை வந்து விழுந்தது. இரத்தத்தைக் கண்ட பயத்தில், இதை உங்களிடம் எடுத்து வந்தேன்" என்று பயங்கலந்தகுரலில் கூறினாள் மாறவல்லி!

நந்திவர்மன் ஒன்றும் பேசாமல் செய்தியோலையை விரித்துப் படிக்கத் தொடங்கினான். அதைப் படிக்கப் படிக்க நந்திவர்மனின் முகம் கறுக்கத் தொடங்கியது. இடையிடையே பற்களை நறநறவெனக் கடித்துக் கொண்டான்.

"ராட்சசி! சொன்னபடியே செய்துவிட்டாள். இவளைச் சும்மா விடக்கூடாது" என்று தன்னையுமறியாமல் கூவினான்.

"வேந்தே என்ன நடந்துவிட்டது? அந்த ஓலையில் அப்படி என்னதான் இருக்கின்றது?" என்று கேட்டாள் மகாராணி.

"மாறவல்லி! எங்கள் குலத்தைக் கருவறுப்பதாகச் சபதம் செய்துள்ள மாயத்தீவு மந்திரக் கிழவிதான் எங்கள் புதல்வர்களைக் கொல்ல முயன்றிருக்கிறாள். எப்படியும் இளவரசர்களைக் கொன்றே தீருவேன் என்று செய்தியும் அனுப்பியிருக்கிறாள்" என்று ஆவேசமாக நந்திவர்மன் கூறிமுடித்தான்.

"[illegible]ந்திரத்தீவு மாயக்கிழவியா? யார் அவள்?" என்று மாறவல்லி வினாவ, அவளுக்கு மந்திரக்கிழவி யாரென்பதை நந்தி[illegible]மன் விபரிக்கத் தொடங்கினான். இதேவேளை - நந்திவர்மனும், மாறவல்லியும் [illegible]த்துடன் உரையாடுவதைத் தன்னுடைய மாயக் கண்ணாடியில் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள் மாயத்தீவிலுள்ள மந்திரக் கிழவி!

(தொடரும்)



## அந்தரத்தில் துண்டு விரல்

உங்கள் கையின் இரு ஆள்காட்டிவிரல்களையும் முகத்திற்கு நேரே கண்களுக்கு முன்னால் ஆறு அங்குல தூரத்தில் ஒன்று சேர்த்துப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்கள் பார்வையை விரல்களில் பதிக்காமல் எதிரில் உள்ள சுவரில் ஒரு நிலைப்படுத்திப் பாருங்கள். அதே சமயம் சேர்த்துள்ள விரல்களை அரை அங்குலம் விலக்குங்கள். இரண்டு விரல்களுக்குமிடையே ஓர் அங்குலத்திற்கு ஒரு துண்டு விரல் அந்தரத்தில் நிற்கும்.

சூரியகுமாரன் கஜேந், தரம்- 3B, யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.


## மாணவர் தூரிகை



ச.அனோஜா, தரம் 7 B, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.



ஸ்ரீ.அபிநயா, தரம் 4 D, யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்.



என்.ஆஷாசியா, யா/[illegible]

## விடுகதை சொல்லப்போறோம்...

1) வரும்போது வெண்சிவப்பு! வளரவளரத் தகதகப்பு! போகும் போது கடும் சிவப்பு!. அது என்ன?
- சூரியன்

2) மழைகாலம் வந்துவிட்டால், மகராசி பாட்டெடுப்பாள். அவள் யார்?
- தவளை

3) தீக்குளித்தாலும் திடமாக இருப்பார். அவர் யார்?
- செங்கல்

4) கல் வீட்டுத் தாத்தா, மெதுமெதுவாகத்தான் நடப்பார். அவர் யார்?
- ஆமை

5) வயலில் உழுதுவான், ஊதியம் வாங்கமாட்டான். அவன் யார்?
- மண்புழு

6) புத்தாண்டில் புகுந்த விருந்தாளி, தங்குவதோ ஓராண்டு. அவன் யார்?
- கலண்டர்

7) வெயிலில் மலரும், காற்றில் உலரும். அது என்ன?
- வியர்வை

8) தலையைச் சீவினால் தாளில் நடப்பான். அவன் யார்?
- பென்சில்

9) உயிரில்லாத நீதிபதி, உரிய தீர்ப்பு வழங்குவார். அவன் யார்?
- தராசு

10) ஊசி போட்ட வைத்தியர், பாடிக்கொண்டு போகிறார். அவர் யார்?
- நுளம்பு.

நே.நிவேதா, தரம் 5, யாழ்ப்பாணக் கல்லூரி.

## முதன்மைகள்

| | |
|---|---|
| சந்திரனில் முதலில் அடி எடுத்து வைத்தவர் | - நீல் ஆம்ஸ்ரோங் |
| முதன்முதலில் செயற்கைக்கோள் விட்ட நாடு | - ரஷ்யா |
| முதன்முதலில் விண்வெளிக்குச் சென்ற பெண்மணி | - வலண்டீனா தெரஷ்கோவா |
| விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதன் | - யூரி ககாரின் |
| முதலாவது இந்தியக் குடியரசின் தலைவர் | - Dr.இராஜேந்திரபிரசாத் |
| முதல் இந்தியப் பெண் பிரதமர் | - இந்திரா காந்தி |
| முதலில் நோபல் பரிசு பெற்ற இந்தியர் | - ரவீந்திரநாத் தாகூர் |
| வடதுருவத்தை முதன்முதலில் அடைந்தவர் | - ராபர்ட் - பியரி |
| உலகத்தை முதன்முதலல் சுற்றிவந்தவர் | - மகலன் |

சி.சிவதர்சினி, தரம்-9A, யா/அச்சுவேலி புனிததெரேசா மகளிர் கல்லூரி.

## விநோத உயிரினங்கள்

1) அதிக நீர் அருந்தும் பறவை - புறா
2) மிகச் சிறிய முட்டையிடும் பறவை - தேன்சிட்டு
3) சத்தமிடாத விலங்கு - ஒட்டகச் சிவிங்கி
4) ஞாபக சக்தி கூடிய விலங்கு - யானை
5) நீல நிற இரத்தத்தையுடைய கடல் உயிரினம் - நண்டு, இறால்.
6) பறக்கும் போதே தூங்கும் பறவை - ஆல்பட்றாஸ்
7) பித்தப்பை இல்லாத முலையூட்டி - எலி
8) நாக்கு இல்லாத ஊர்வன - முதலை

த.தர்சன் யாழ்.மத்திய கல்லூரி.

## அம்மா

நீ தொட்டால் தென்றல்
வீசினால் புயல்
நுகர்ந்தால் மணம்
எதிர் கொண்டால் பயணம்
சிரித்தால் பூ விரியும்
சீறினால் தீ பரவும்
உன் ஸ்பரிசம் என் உறக்கம்
உன் சுவாசம் என் உயிர்
நீ எதுவாக இருப்பினும்
என்னுடைய அம்மா நீ தானே

இ.இந்துஜா, தரம்-8, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.




## கிழமைகள்

★ திங்கட்கிழமை தினமெல்லாம் தமிழை நானும் படித்திடுவேன்
★ செவ்வாயன்று கணக்குகளைச் செம்மையாகச் செய்திடுவேன்
★ அடுத்து உள்ள புதன் நாளில் ஆங்கிலம் அழகாய்க் கற்றிடுவேன்
★ வியாழன் அன்று விஞ்ஞானம் விரிவாய் நானும் அறிந்திடுவேன்
★ வெள்ளியிலே வரலாற்றோடு நிலை நூலை வடிவமாய்ப் பயின்றிடுவேன்
★ சனியினிலே இசைகள் கற்று நன்றாய் இனிய பாடல் பாடிடுவேன்
★ ஞாயிறு அன்று விளையாடி மகிழ்ச்சி பொங்க ஆடிடுவேன்.

க.[illegible], தரம் 7E, சென்.ஜோன்ஸ் கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-....................
தரம் :-....................
பாடசாலை :-....................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்....



யாழ்.பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள 14 ஞானக்குழந்தை இல்லங்கள் இணைந்து நடத்திய பாலர் விளையாட்டு விழாவில், 'பாண்ட்' இசைக்கும் பாலர்களைப் படத்தில் காணலாம்.



சிவலிங்க யோகேந்திரா நிலையத்தினர் அச்செழு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய உற்சவத்தை ஒட்டி நடத்திய சைவசமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் களுடன் சொற்பொழி வாளர்களான கந்த. சத்தியதாசன், சி.சசீவன் மற்றும் க.நிஜலிங்கம், ஆலயப் பூசகர் இராசு ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.



உலக வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு யாழ்.சாயி நிலையத்தில் வலுவிழந்த 138 பேருக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. அதன் போது எடுக்கப்பட்ட படம்.



தொல்புரம் மேற்கு-மன்ன தோட்டம் ஜெகஜோதி அம்பாள் ஆலயத்தில் 'ஜோதிப் பிரவாகம்' என்னும் வரலாறு, அருள் கூறும் பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழை அண்மையில் வெளியிடப் பட்டது.

பாடல்களை இசையமைத்துப் பாடிய தவநாதன் றொபேட்டுக்கு சடாச்சரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக் கின்றார்.

(படம்: மு. சந்திரகுமார்)



ஆனைக்கோட்டை விநாயகர் முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் அப் பாடசாலையின் மாணவ மாணவிகள் விநோத உடைப் போட்டியில் கலந்துகொள்வதற்கு தயார் நிலையில் நிற்கின்றனர். (200)



பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற முன்பள்ளி விளையாட்டு விழாவில் வெற்றியீட்டிய மழலைகளுக்கு நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கி உதவி முகாமையாளர் குலேந்திர ஜெயபாபு பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.



ஊரெழு கணேச வித்தியாசாலையின் முத்தமிழ் விழா நிகழ்வுகள் அண்மையில் ந... பெற்றன.

இந்நிகழ்வில் வலய மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற பாடசாலையின் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து நிகழ்வு மேடையேற்றப்பட்டது நாடகத்தில் பங்கேற்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிபர் சி.திரிதரன் நெறியாளர், ஆசிரியர் செ. சிவகுமார் அணிசெய் கலைஞர்கள் ஆகியோர் இணைந்து எடுத்துக் கொண்ட படம். (72)



வலி.கிழக்குப் பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழாவின் மூத்த கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில், புத்தூர் வே.இளையகுட்டி கவிதைத் துறைக்காக கௌரவிக்கப்பட்டார்.யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் பொன்னா... போர்த்தித் திலகம் இடுவதைப் படத்தில் காணலாம்.



யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினர் உரும்பிராயில் உள்ள முன்பள்ளிக்கு தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றை வழங்கியுள்ளனர்.

உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், கழக உறுப்பினர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர்.



ஊர்காவற்றுறையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட புதிய தேவாகலை கலாசார மன்றத்தை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் உதயன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். (325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'ச-ரோ-ஜா' (திரைவிமர்சனம்)



மிகுந்த எதிர்பார்ப்புகளிடையே, பல எதிர்ப்புகளையும் மீறி சொன்னபடியே செப்ரெம்பர் 5 ஆம் திகதி 'சரோஜா' திரைப்படம் வெளிவந்துவிட்டது.

ஷிவா, வைபவ், எஸ்.பி.பி.சரண், பிரேம்ஜி ஆகிய நால்வரும் நண்பர்கள். கிரிக்கெட் போட்டியொன்றைப் பார்ப்பதற்காக இவர்கள் நால்வரும் ஹைதராபாத் நகருக்குச் சென்று கொண்டிருக்கும் போது, வீதி விபத்தொன்றால் சாலை மூடப்பட்டுள்ளதால் பயணத்தைத் தொடரமுடியாத நிலை ஏற்படுகின்றது. இதனால் குறுக்கு வழியொன்றால் ஹைதராபாத்துக்கு செல்ல நண்பர்கள் நால்வரும் முயல்கின்றனர். இடையிலே பாதை தவறிப்போய், ஒரு பாழடைந்த தொழிற்சாலைக்குள் அகப்பட்டுக் கொள்கின்றனர். இவர்கள் சிக்கிக் கொண்ட அதே தொழிற்சாலையில்தான் தொழிலதிபர் பிரகாஷ்ராஜின் மகள் 'வேகா'வும் கடத்தி வைக்கப்பட்டிருக்கிறாள். பாழடைந்த தொழிற்சாலையில் நடக்கும் ஒரு கொலை முயற்சி, நண்பர்களைத் துரத்தும் வில்லன் கூட்டம், கடத்தப்பட்ட பெண்ணைக் காப்பாற்றும் முயற்சி எனப் பல திருப்பமான சம்பவங்களுடன் சரோஜா திரைப்படத்தின் திரைக்கதை நகர்த்தப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட பிரகாஷ்ராஜின் மகளைக் காப்பாற்ற பொலிஸார் எடுக்கும் துணிச்சலான நகர்வுகள் ஒரு பக்கம். வில்லனிடமிருந்து தப்புவதற்காய்த் தவிக்கும் நண்பர்கள் இன்னொரு பக்கமென இருவகைப்பட்ட கதைக்களங்களையும் ஒன்றிணைத்து, அதனை எல்லோருக்கும் புரியும்படி திரையில் கொண்டு வந்திருக்கிறார் இயக்குநர் வெங்கட் பிரபு.



பரபரப்பான திரைக்கதையில் நகைச்சுவையைக் கலந்து கொடுத்துள்ள முறையும், சென்னை- 28 இல் உள்ளதைப் போன்ற இயல்பான காட்சியமைப்புகளும், நடிப்பு மோடியும் மற்றைய தென்னிந்திய 'மசாலாத்' திரைப்படங்களிலிருந்து 'சரோஜா' திரைப்படத்தை வேறுபடுத்தி நிற்கின்றன.

பிரகாஷ்ராஜின் மகளைக் காப்பாற்ற முயன்று கொண்டிருக்கும் பொலிஸ் அதிகாரி ஜெயராம்தான் வில்லன் கும்பலின் தலைவன் என்ற எதிர்பாராத திருப்புமுனை படத்தின் வெற்றிக்குப் பலமானதாக அமைந்துள்ளது.

யுவன்ஷங்கர் ராஜாவின் இசையில் வந்துள்ள பாடல்களெல்லாம் மனதைத் தாலாட்டுகின்றன. ஷக்தி சரவணனும் தன் பங்கிற்கு ஒளிப்பதிவால் மிரட்டியுள்ளார்.

எஸ்.பி.பி.சரண், வைபவ், பிரேம்ஜி, ஷிவா, பிரகாஷ்ராஜ், ஜெயராம், வேகா என்போர் மிகச் சிறப்பான நடிப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். பிரேம்ஜி திரையில் தோன்றுகின்றபோதெல்லாம் நம்மையும் அறியாமல் சிரிப்பலை எழுகின்றது. இன்னொரு வடிவேலுவாக வருவதெற்கு பிரேம்ஜிக்கு வாய்ப்புகள் அதிகம். ஒருவீதி, சில வாகனங்கள், ஒரு ரயில், பழைய தொழிற்சாலை, பொறுக்கி யெடுத்த சில நடிகர்கள் இவற்றைக் கொண்டு சிறிய கதையை மிகச் சுவாரசியமான முறையில் வெளிப்படுத்துகின்றது சரோஜா திரைப் படம். சரோஜாவுக்கு வெற்றி நிச்சயம்.

***

# பிரகாஷ்ராஜ் தயாரிப்பில் விஜய்!

இளையதளபதி விஜயும், நடிகர் பிரகாஷ் ராஜூம் சினிமாவில் மோதிக் கொண்டாலும், உண்மையில் நல்ல நண்பர்கள். பிரகாஷ் ராஜின் 'டூயட் மூவிஸ்' பட நிறுவனத்தின் தயாரிப்பில் விஜய் நடிப்பதற்கு 'வில்லு' படத்தில் விஜய்க்கு வில்லனாக நடித்தபடியே, சம்மதமும் வாங்கிவிட்டார் பிரகாஷ்ராஜ்.





பிரகாஷ்ராஜின் தயாரிப்பில் விஜய் நடிக்கப் போவதாக நீண்டகாலமாகவே கதைகள் அடிபட்ட போதும், இப்போதுதான் உத்தியோக பூர்வமாகப் பிரகாஷ்ராஜ் அறிவித்துள்ளார்.

"தோஸ்த் படத்துக்கு பிறகு 'பந்தயம்' படத்தில் எஸ்.ஏ.சந்திரசேகரன் டைரக்ஷனில் நடித்து வருகிறேன். 'அபியும் நானும்' பட ரிலீசுக்கு பிறகு நான் தயாரிக்கும் 'மயிலு'படம் வெளிவரும். 'இனிது இனிது' படவேலைகளும் நடக்கின்றன. அதனைத் தொடர்ந்து டூயட் மூவிஸுக்காக விஜய் நடிக்கும் படத்தை தயாரிக்க இருக்கிறேன். அது பற்றி விரைவில் மேலதிக விவரங்களை அறிவிப் பேன்"

இவ்வாறு பிரகாஷ்ராஜ் தெரிவித்துள்ளார். அனேகமாக இது விஜயின் ஐம்பத்தோராவது படமாக அமையலாம்.***

# தீபாவளிக்கு அஜித்தின் "ஏகன்"



இலங்கைத் தமிழரான லண்டன்கருணாவின் ஐங்கரன் இன்டர் நஷனல்ஸ் தயாரிப்பில் அஜித்தின் 'ஏகன்' திரைப்படம் தீபாவளிக்கு வெளியாவது உறுதியாகியிருக்கிறது.

இந்தியில்ஷாருக்கான்நடித்த "மொய்ன் ஹூன்னா" என்ற படமே ஏகனாக உருவாகிறது. பிரபுதேவாவின் அண்ணனும், பிரபல நடன இயக்குநருமான ராஜூசுந்தரம் இப் படத்தின்மூலம்இயக்குநராக அவதாரமெடுக்கிறார்.

தீபாவளிக்கு முன் 'ஏகன்' திரைக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தீபாவளிக்கு படத்தை வெளியிடுவதே தயாரிப்பாளர் மற்றும் அஜித்தின் விருப்பமாக உள்ளது. முன்னதாக ஒக்டோபர் பதினோராந்திகதி படத்தின் பாடல்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளனர். தீபாவளிக்கு விஜயின் 'வில்லு' வெளியாகும், தீபாவளிப்போட்டி 'களை' கட்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. எனினும் வில்லு படப்பிடிப்பு இன்னும் முடியாததால் தைப்பொங்கலுக்குப் பட வெளியீட்டை தள்ளி வைத்துள்ளனர். 'ஏகன்', 'வில்லு' இரண்டினதும் தயாரிப்பாளர் ஒருவரே என்பதும் இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம்.***

# கண்ணனைக் கண்ட ஜேசுதாஸ்



பிரபல பின்னணிப் பாடகரான கே.ஜே.ஜேசுதாஸ் கிறிஸ்தவராக இருந்த போதும் இந்துக் கடவுளான கண்ணன் மீது பக்தி கொண்டவர். கிருஷ்ணர் பற்றி பல பக்திப் பாடல்களையும் பாடிப் பரவசப்படுத்தியவர். ஆனால் அவர் வேற்று மதத்தவரென்ற காரணத்தால் குருவாயூர் கிருஷ்ணன் கோயிலில் கண்ணனைத் தரிசிக்க அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏனைய கிருஷ்ண ஆலயங்களிலும் வழிபாடு செய்ய ஜேசுதாசை அனுமதிக்கப் பின்னடித்தார்கள். இதனால் கோயிலில் உள்ள கண்ணனைக் கண்ணாரக் கண்டு தன் இசையால் இறைவனை வழிபட முடியவில்லையே என்ற ஏக்கம் ஜேசுதாசுக்கு நீண்ட காலமாகவே இருந்து வந்தது.

இந்நிலையில் 'ஆரன் முளா'கிருஷ்ணன்கோயிலில், பாரம்பரிய வஞ்சிப்பாட்டு வரவேற்புடன் ஜேசுதாஸ் கண்ணனைத்தரிசிக்க அனுமதிக்கப்பட்டார். தன் ரசிகர்கள் புடைசூழ இந்து முறைப்படி ஆலய வழிபாட்டில் பங்கு பற்றிய அவர், கண்ணனைக் கண்டு , மனமகிழ்ந்து உருக்கமான பக்திப்பாடல்களைப் பாடினார். "கண்ணனைக் காண வேண்டும் என்ற என் நீண்டநாள் கனவு பலித்துள்ளது. இனியாவது குருவாயூரப்பனைத் தரிசிக்க அனுமதி வழங்குவார்கள் என நம்புகிறேன்" என்று கிருஷ்ணனைத் தரிசித்த மகிழ்வோடு கூறுகிறார் கே.ஜே.ஜேசுதாஸ்.***

# மர்மயோகி மர்மங்கள்





போக்கக்காரன் தான் இந்த மர்மயோகி. த்ரிஷா, ஸ்ரேயா என்று இரண்டு முன்னணி நட்சத்திரங்கள் கமலுடன் மர்மயோகி படத்தில் ஜோடி சேரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

சரித்திரக் கதையான மர்ம யோகியை பிரமிட் சாய்மீரா நிறுவனம் பெரும் பொருட் செலவில் தயாரிக் கிறது. கதை, திரைக்கதை, இயக்கம் கமல்ஹாசன். மர்மயோகியும் அவரே.

பிரதான வேடத்தில் ஹேமமாலினி நடிக்கிறார். அதிநவீன ஒளிப்பதிவு நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது.



மர்மயோகி குறித்த நம்பத்தகுந்த செய்திகள் கைப்பிடி அளவே வெளி வந்துள்ளன. ஆனால் வதந்திகள் தினந்தோறும் மர்மயோகி பற்றி புற்றீசல்களாய் வெளிக்கிளம்புகின்றன. கஜோல், பத்மப்ரியா ஆகியோரிடம் கதை சொன்ன கமல், இறுதியில் மர்மயோகிக்கு த்ரிஷாவினை சம்மதிக்க வைத்ததாகவும், ஸ்ரேயாவையும் ஒப்பந்தம் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளதாகவும் தகவல்கள் வந்தபடியுள்ளன. இந்தச் செய்தியை ஸ்ரேயாவோ, தயாரிப்பாளர் தரப்போ இன்னும் உறுதி செய்யவில்லை. அதிகாரபூர்வ அறிவிப்பு வந்த பின்பே த்ரிஷா, ஸ்ரேயா இருவரும் மர்மயோகியில் நடிப்பதும், நடிக்காததும் தெரியவரும்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வத்தளையில் குடும்பஸ்தர் கடத்தல்

மூன்று பிள்ளைகளின் தந்தையான கொட்வின் ஸ்டெனிஸ் வின்சன்ட் (வயது 39) என்ற குடும்பஸ்தர் ஒருவர் கடத்தப் பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வத்தளை பண்ட் வீதியில் வசிக்கும் இவர் கடந்த 11 ஆம் திகதி இரவு தனது வேலைகளை முடித்துக் கொண்டு வத்தளை ஸ்டேஷன்வீதியில்வந்துகொண்டிருந்த போது, ஆயுதம்தாங்கிய இராணுவச் சீருடையில் வந்தவர்களால் கடத்தப்பட்டார் என அவரது தந்தையான எஸ்.ஜே.வின்சன்ட்; பிரதி அமைச்சர் இராதா கிருஸ்ணனிடமும் வத்தளை பொலிஸ் நிலையத்திலும் முறைபாடு செய்துள்ளார்.

இது குறித்து அமைச்சரின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

புளத்கோபிட்டிய, எதுராபொல தோட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த 25 வருடங்களாக வத்தளைப்பகுதியில் வசித்து வருகிறார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் கப்பலில் பொதிகளை விடுவிக்கும் தனியார் கம்பனியில் லிகிதராகப் பணியாற்றுகிறார் எனக் கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ணவிடம் பிரதி அமைச்சர் முறைப்பாடு செய்துள்ளதோடு உடன் அவரை கண்டுபிடித்து தருமாறும் கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா' சகல பார்மஸிகளிலும்
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS

## நான்காம் ஆண்டின் நினைவுகளில்...

மலர்வு 24 ★ 01 ★ 1936



உதிர்வு 14 ★ 09 ★ 2004

திருமதி
### அக்னெஸ் அம்மா அருளானந்தம்

அனைத்தும் அவர் வழியாய்
அவருக்காகப் படைக்கப்பட்டன;
அனைத்துக்கும் முந்தியவர் அவரே,
அனைத்தும் அவரோடிணைந்து
நிலை பெறுகின்றன (கொலோ: 16-17)
எங்கள் அன்பு அம்மாவின் ஆன்மா
இறை சந்நிதியில் அமைதி காணட்டும்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
அன்புள்ளங்கள்.

"அருள்நேச வாசா",
சென்.தோமஸ் லேன்,
பருத்தித்துறை.

## நீங்காத நினைவலைகள்

நான்காம் ஆண்டு



கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை
பிறப்பு 23.03.1938 இறப்பு 29.08.2004

மூன்றாம் ஆண்டு



தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை
பிறப்பு 29.12.1946 இறப்பு 13.09.2005

பிறந்தவர் இறப்பது நியதி
எனினும் தாங்க முடியவில்லையே உங்கள் பிரிவை
உறுத்துது எமது உள்ளங்களை
உருக்குது மனதை நாள்தோறும்
அன்பான குணமும் ஆணித்தரமான வார்த்தைகளும்
பேசியே வாழ்ந்த உயர்ந்த மனிதர்கள் நீங்கள்
உற்றாரும் ஊராரும் கேட்கின்றனரே உங்களை
எப்படிச் சொல்வோம் நீங்கள் சென்ற இடத்தை

மகாத்மா லேன்,
அளவெட்டி வடக்கு.

குடும்பத்தினர்.

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் சைவ உணவகத் திற்கு ரீமேக்கர், சப்பிளையர், சுவீற்மேக் கர் போன்ற வேலைகளுக்கு அனுபவ முள்ள பணியாளர்கள் உடன் தேவை. வேலை நேரம் காலை 6.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை. சம்பளம் நாள் ஒன்றுக்கு ரூபா 300/= உணவும் வழங்கப்படும்.

தொடர்பு:- சரஸ்வதி விலாஸ்,
சைவ உணவகம்,
இல, 70, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச நிறுவனக் கணக்காளருக்கு (கி.பாவம் -41, நட்சத்திரம்-அச்சுவினி,33 வயது) அரச சேவையில் ஆசிரியராக கடமையாற்றுபவர் மட்டும் உடன் ஜாதகம், படம், மற்றும் தொலை பேசி எண் போன்ற விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

மே/பா உதயன், விளம்பர இல:3137

## MBBS.கற்கைநெறி

MBBS கற்கை நெறிகள் [English medium] குறைந்த கட்டணத்தில் ஐரோப்பிய நாட்டில்.
**Commencing October-2008**
**Pre-Medicine Courses**
For Those Entering Medical Faculty.
தொடர்புகளுக்கு
T.P:0715-175957

## மணமகன் தேவை

இந்துகௌரவகுடும்பம் 1975ஆம் ஆண்டு சதய நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமற்ற 50 கிரகபாவம் கொண்ட பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. விவாகப் பொருத்துனர்களும் விவரத்துடன் தொடர்பு கொள்ளலாம்-
விளம்பர இல-3138
மே/பா உதயன்

## குறுகிய நேர சேவை

கூல் லெமினேசன் அழைப்பிதழ்கள், அச்சிடல் பிரசுரங்கள், கண்ணீர் அஞ்சலி என்பன குறுகிய நேரத்தில் அச்சிட்டு வழங்கப்படும். வெளியிடங்களில் இருந்து வருபவர்களுக்கு முன்னுரிமை.

பிள்ளையார் அச்சகம்,
சிவன் கோவிலடி, 356, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

### 69 கைதிகள் விடுதலை!

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் நாட்டிலுள்ள சில சிறைச்சாலைகளிலிருந்து 69 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் எனச் சிறைச்சாலைகள்திணைக்களம் தெரிவித்திருக்கின்றது.

நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் ஒழுக்கமான முறையில் தண்டனைகளைக் கழித்துவந்த சிறைக் கைதிகளே நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

## நன்றி நவில்கின்றோம்

பிறப்பு 09 ★ 07 ★ 1917



இறப்பு 25 ★ 08 ★ 2008

### அமரர் L.A.ஜோசவ்


எங்கள் தந்தையாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய வணக்கத்துக்குரிய குருப்பிரசாதிகள், சங்கைக்குரிய சகோதரிகள், இறுதிப் பலிப்பூசை ஒப்புக்கொடுத்த வண. பிதா சத்தீஸ் சவரிமுத்து மற்றும் கல்கிசை மகிந்த மலர்ச்சாலைக்கு வருகை தந்தோர்க்கும், இறுதி மரணச்சடங்கில் பங்குபற்றியோருக்கும் துயரச்செய்தி பகிர்ந்தோர், மலர் வளையங்கள் சாற்றியோர், இணையதளத்திலும், பத்திரிகைகள், பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோர்க்கும், இந்தத் துன்பவேளையில் பலவழிகளிலும் உதவியோர்க்கும், கல்கிசையில் உள்ள வீட்டிற்கும், எமது குடும்ப இல்லம் 'அமிர்த வில்லா' மாதகல், 27 கதிர்காமர் வீதி, மட்டக்களப்பு, ஸ்ரிக்கர் ஒழுங்கை, பிளானோ (Texas, USA) 19 கான்றில் தோட்டம் சொட்ஸ் (UK) ஆகிய இடங்களுக்கு வருகை தந்து துயர் பகிர்ந்தோர்க்கும், அன்னாரின் நினைவாக மாதகல், கல்கிசை, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, கண்டி, சொட்ஸ் (UK), கிளாஸ்கோ (UK), பிளானோ (Texas, USA), புறுக்கிளின் (USA) ஆகிய இடங்களில் திருப்பலிகள் ஒழுங்கு படுத்தி ஒப்புக்கொடுத்தோர்க்கும் எமது நன்றி உரித்தாகுக.

தனித்தனியே நன்றி நவில இயலாமைக்கு வருந்துகின்றோம்.

L.A.யோசவ் குடும்பத்தினர்,
"அமிர்த வில்லா",
மாதகல்.
8, பழைய புகையிரத வீதி,
கல்கிசை.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 10 ★ 08 ★ 1980



ஆண்டவன் அடியில் 15 ★ 08 ★ 2008

### கந்தையா பிரதீபன் (B.A)

(தீபன்)

பட்டங்கள் பல பெற்றிட
இசையின் நுணுக்கங்கள் கற்றிட
கல்வியில் மேலோங்க
சமுதாயம் முன்னேற
பாடுபட்ட செல்வனே
உனது கனவெல்லாம்
தவிடு பொடியானதோ தீபன்
நீ மறைந்து நாள்கள்
31 ஆனாலும்
நீ என்றும் எங்களோடுதான்

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல்வச்சந்நிதியான் ஆலய
# ப்புமலர் - 14.09.2008





## வேலவனின் அருள்கிடைக்கப் பிரார்த்திப்போம்



*வீரவேல் தாரவேல் விண்ணோர் சிறை மீட்ட*
*தீரவேல் செவ்வேள் திருக்கை வேல் - வாரி*
*குளித்த வேல் கொற்றவேல் சூர் மார்பும் குன்றும்*
*துளைத்தவேல் ஒன்றே துணை*

எந்நிதியும் தருவான் சந்நிதி வேலவன், எங்கள் செல்வச்சந்நிதி வேலவன் சிங்கார வேலவனாய் பதிகள் தோறும் அமைந்து ஆறுபடைதனில் அழகாய மர்ந்த வெற்றிவேற் பெருமான் அடியார்க்கு நல்ல பெருமானாக அமரரிடர் தீரச் சமர் புரிந்த குமரன் இலங்கையிலும் தெற்கே கதிர்காமப் பகுதியில் வந்து அமர்ந்திருந்து கொடியோனாகிய சூரனைச் சங்காரம் செய்து தூயோனாக்கி தன் மலரடிக்கீழ் இன்பம் துய்க்கச் செய்து தன்னையே நாடி, வாடி, ஆடி, ஒடிய வள்ளியை மணம் முடித்து கதிர்காமத்தின் கண் அமர்ந்து அருள்பாலிக்கத் தொடங்கினான். அவ்வருள் ஒளியின் பிரகாசம் எங்கெங்கும் அமையத் திருவுளங்கொண்டு தொண்டை மானாற்றில் சின்னக் கதிர்காமமாய் முருகன் வேலாயுதத் தின் வடிவில் எழுந்தருளியவன் எங் கள் சந்நிதி வேலவன்.

ஆற்றங்கரையானாக பூவரசம் மரத்தடியில் அமர்ந்திருந்து 65 ஆலமிலையில் அருளமுதை ஏற்றும் அடி யார்க்கு வழங்கியும் அன்னதானக் கந்தனாக நித்தமும் அன்பர்கள் நெஞ்சமதில் குடிகொண்ட பெருமான் சந்நிதி வேலவன். அழகனாய் வேற்பெருமான் அடியார்களுக்கு அவர் தம் வாழ்வில் செல்வச் செழிப்புக்களை வழங்குவதால் செல்வச் சந்நிதியான் என அழைக்கபடலாயினான்.

அன்போடும் பக்தியோடும் சைவாசார சிலராக வாய் கட்டி மந்திரமின்றி நடைபெறும் மௌனப் பூசை யும் அடியார்களின் திருமுறைப் பாராயணம், முருகன் புகழ் மாலைகள், பறையொலி, மணியொலி, சங்கொலி, தவிலொலி, நாதஸ்வர ஒலிகளோடு அன்பர்களது அரோகரா ஒலியோடும் நடைபெறும் பூசைகள் அடி யார்கள் உள்ளத்தை மெய்சிலிர்க்க வைக்கும். பன்னூறாண்டுகளாக ஏராளமான அன்பர்கள் வழிபட்டுப் பயன்பெற்றது மட்டுமன்றி மேலாம் முத்திநிலை கூடிய அருளாளர்களும் ஏராளம்.

இவ்வாறு சந்நிதி வேலவனின் அருட் பிரவாகத்திற்குள் நீங்காது நின்ற அரு ளாளர்களில் மயில்வாகனம் சுவாமிகளின் வழிகாட்டலில் நித்திய அன்னப்பணி நடை பெறு வது எமக்கு நிறைவைத் தருகின்றது. அன்னதானக் கந்தனின் அரும்பணிக்கு உதவும் அன்புள்ளங்களுக்கு வேலவனின் அருள் கிடைக்கப் பிரார்த் திப்பதோடு இன்று பல மடங்களில், இடங்களில் அன்னதானப் பணி நடைபெறுகின்றது. இப்பணி மேன் மேலும் பெருகவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

இன்று வண்ணரதமேறி மும்மூர்த் திக ளாய் வலம்வரும் விநாயகப்பெரு மானும் வேற்பெருமானும் சண்முகப் பெருமானும் பார்ப்பவர்களுக்கு மன நிம்மதியைத்தருவதோடு மகிழ்ச்சியை யும் அளிக்கின்றனர்.

எங்கள் செல்வச் சந்நிதி வேலவன் தூய அன்புள்ளங் களையும் அடியார்க ளுக்கு நிம்மதியான வாழ்வையும் வழங்க வேண்டும் என பிரார்த்திக்கின் றேன். இன்றைய இரதோற்சவ தினத் தினை தரிசிக்கின்ற மானசிகமாக காணுகின்ற முருகன் அடியார்கள் எல்லோருக்கும் சகல செல்வயோக மும் மிக்க பெரு வாழ்வும் கிடைக்க வேலவன் தாழ் பணிந்து போற்றுகின்றேன்.

செ.மோகனதாஸ் சுவாமிகள்
சந்நிதியான் ஆச்சிரமம்

...ு மக்களின் மன அழுக்குகளை ...றிக்கும். தேரின் வடம் பிடித்து ... பிடிக்கும் அடியவர்கள் இந் ...கன் அருள் வேண்டி அழுது ...். அருள் வேண்டும் அடியவ ...வாரி வழங்க முருகன் இன்று ...றான். அவன் தரிசனம் கண்டு ... அருள்வேண்டும் நன்னாள் ...ம் தேரேறி வரும் முருகனை பக்தி ...வன் அருள் பெறுவோமாக.

ஆ.சிவநாதன், அதிபர்,
...ப சிவகுரு வித்தியாசாலை.

பன் நிதி அருளுந தற்காய்
பரியிழு தேரி லேறும்
நன்மன இடைய னான
கதிர்காமர்க் கருளுந செல்வச்
சன் நிதிக் கந்தா பாதம்
சரணெனத் தொழமெங் கட்கு
நிம்மதி தன்னை யிந்த
நீ ணிலத் தருளுந வாயே

K.K.K. சிவபாலன்.


யசோ
...ரக்ல்
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே:
0773164245
0776980472
0776280178

விலையில் மலிவு
தெரிவில் நிறைவு
திருமணப் பட்டுப் புடைவைகள்
சேட்டிங் சூட்டிங்
சிறுவர்களுக்கான ரெடிமேட்
ஆடைகள்
அனைத்துக்கும்
செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை
நெல்லியடி, கரவெட்டி.021 2263238.

S.V.M
பலசரக்கு மாளிகை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இந்திரா கபே
நெல்லியடி,
கரவெட்டி.

கிருஷ்ணானந்தம்
பலசரக்குக் கடை
இல. 01, மத்திய சந்தை,
நெல்லியடி, கரவெட்டி.

சைக்கிள் உதிரிப்பாகங்கள், பெற்றோல் மைக்ஸ் உதிரிப்பாகங்கள், மின்சார உபகரணங்கள், பி.வி.சி. பைப்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
சித்திவிநாயகா
பிரதான வீதி, வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

அழகுசாதனப் பொருள்கள், சகலவிதமான அன்பளிப்புப் பொருள்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அருண் அழகுமாடம்
நெல்லியடி.

'செபற்கோ' கிருமிநாசினி, தெளிகருவிகள், உரவகைகள் கட்டடப் பொருள்கள், உபகரணங்கள், மாபிள் வகைகள், S-Lon பைப் வகைகள், ஒயில் வகைகள், ஏசியன் பெயின்ற் வகைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
விண்மீன் அங்காடி
பிரதான வீதி, நெல்லியடி.

நியூலக்
ஐஸ் கிறீம்
டச்சு வீதி, உடுவில்.

மூக்குக்கண்ணாடி
விற்பனையும்
பல்கட்டுபவரும் மிதப்பான
பற்களுக்கு 'கிளிப்' போடப்படும்.
நிலா மூக்குக்கண்ணாடி நிலையம்
பிரதான வீதி, நெல்லியடி.

சிதம்பரப்பிள்ளை
பொத்தகச்சோலை
நெல்லியடி,
கரவெட்டி.
தொ.பே: 226 3228

தேசிய சேமிப்பு வங்கி – இலங்கை மக்களுக்கோர் வரப்பிரசாதம்
தேசிய சேமிப்பு வங்கியின் பென்சன் பிளஸ் (NSB Pension +) கணக்கு 16 வயதுக்கு மேற்பட்ட எவராலும் 1000/– ஆரம்ப வைப்புடன் இக்கணக்கை ஆரம்பிக்கமுடியும். அத்துடன் இக்கணக்கை ஆரம்பிக்கும் வாடிக்கையாளருக்கு வங்கியால் 500/– கணக்கில் வரவு வைப்பதுடன் 500/– பெறுமதியான ரிதிரேகா சான்றிதழ் இலவசமாக வழங்கப்படும். இதனால், பெறுமதி மிக்க பரிசுகளை வழங்கும் சீட்டிழுப்புக்கு உரித்துப்பெறும் சந்தர்ப்பம் கிடைக்கும். அத்துடன் 55 வயதிற்கு பின் மாதாந்தம் ஓய்வூதியம் பெறும் தகுதியைப் பெறலாம்.
தேசிய சேமிப்பு வங்கியில் குதூகல சேமிப்புக் கணக்கு (NS.B. Happy Saving Account) இக்கணக்கை 1000/– ஆரம்ப வைப்புடன் 16 வயதுக்கு மேற்பட்ட எவராலும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஆரம்பித்து செயற்படுத்த முடியும். வைப்புத் தொகைக்கு ஏற்ப அதிகரித்த வட்டியாக 14.5 % பெறமுடியும். அத்துடன் 10 இலட்சம் ரூபா (1,000,000/–) வரையான இலவச ஆயுட் காப்புறுதி வசதி மற்றும் உலகளாவிய இலவச தன்னியக்க பணப்பரிமாற்ற அட்டை வசதிகள் அத்துடன் சுயதேவைக்கடன் வசதிகள் வைப்புக்களுக்கு எதிரான கடன் வசதிகளை இக் கணக்கின் மூலம் பெறமுடியும்.
NSB
தேசிய சேமிப்பு வங்கி
பருத்தித்துறை கிளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலய தேர்த் திருவிழாச் சிறப்புமலர் - 14.09.2008

## வேண்டுவோர்க்கு வேண்டுவதை வழங்குகின்ற சந்நிதி முருகன் இன்று தேர் ஏறிவருகின்றான்

அடியார்களுக்கு அருள் பாலிப்பதற்கரக தொண்டைமானாறு ஆற்றங்கரையடியில் நாடிவந்து குடிகொண்டுள்ள ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகனின் தேர் உற்சவம் 1925 ஆம் ஆண்டு கட்டுத்தேர் அமைக்கப்பட்ட காலத்திலிருந்தே நடந்தேறி வருகின்றது.

**தேர்எரிப்பு**

போத்துக்கேயர் காலம் முதல் இவ்வாலயத்தில் அழிவுகள் இடம் பெற்று வந்தாலும் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி கண்டாமணி அழிக்கப்பட்டதும், அதே ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி 45 அடி உயரமான பிரமாண்டமான சித்திரத்தேர் தீமூட்டி எரிக்கப்பட்டதும் துன்பியல் நிகழ்வுகளாகும். 500 இற்கு மேற்பட்ட சிற்பங்களுடன் 1008 மணிகளுடன் ஒருகலைப்பொக்கிசமாகத் திகழ்ந்த அந்த சித்திரத்தேர் எரிக்கப்பட்ட நிலையில் அதனை உருவாக்குவதற்காக அயராது உழைத்தவர்கள், மற்றும் சந்நிதிமுருகன் பக்தர்கள் என அனைவரும் தேர் முழுமையாக எரிந்துவிட்ட செய்திகேட்டு துக்கத்தால் உறைந்து போனார்கள்.

**அதர்மத்தை அழிப்பவன்**

கலியுககந்தன் சந்நிதி முருகன் கருணைத்தெய்வமாக விளங்குகின்ற அதேநேரம் அதர்மத்தையும், அநியாயத்தையும், ஆணவத்தினையும் அங்கே என்றும் அனுமதித்ததில்லை.

2005 ஆம் ஆண்டு முதல் மூன்று சித்திரத்தேர்களுடன் முழுமையான நிறைவுடன் சந்நிதியில் தேர் உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

**கண்கண்ட தெய்வம்**

மருதர் கதிர்காமரை சந்நிதிமுருகன் ஆட்கொண்டதுடன் தனக்கு ஆலயம் அமைத்துப் பூசை செய்யுமாறும் கேட்டுக் கொண்டான். புனிதமான அந்தப் பணியைச் செய்ய மருதர் கதிர்காமர் தயக்கம் காட்டிய பொழுது "நீ வாய் கட்டி எனக்குப் பூசையை நடத்து" எனவும் முருகன் வழிப்படுத்தினான்.

இவை எல்லாம் எப்பொழுதோ நடந்து முடிந்த விடயங்கள் அல்ல. தற்பொழுதும் சந்நிதியில் நடந்து கொண்டிருக்கின்ற நிகழ்வுகளாகும். இதனால்தான் தற்பொழுது பூசையினை மேற்கொண்டு வருகின்ற இந்தப்பூசகர்களும் சந்நிதியானை பயபக்தியுடன் வணங்கித் தொண்டு செய்கின்றனர்.

**அற்புத நிகழ்வு**

2003 ஆம் ஆண்டு கட்டுத்தேர் குடைசாய்ந்தவேளை உடனிருந்த பிரதம பூசகர்கள் இருவரும் சந்நிதியானுக்கு ஏதும் நடந்துவிடக்கூடாதென்பதற்காக வேலவனை தமது கைகளால் தாங்கி, கைத்தாங்கலாகவே இருப்பிடம் வரை பாதுகாப்பாக கொண்டு சென்று, நிறைவாகச் செயற்படுத்தி முடித்தனர்.

இவர்களில் பிரதம பூசகரான ஆறுமுகசாமிஐயர் 06-05 2007 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த தனது தினப் பூசையில் சாயரட்சைப் பூசையின் பொழுது சந்நிதியானுக்கு இராசவள்ளிக் கிழங்குக்களியினை நைவேத்தியமாகப் படைக்கச் சித்தம் கொண்டார்கள்.



தான் படைக்க விரும்பிய இராசவள்ளிக்கிழங்கினை வாங்குவதற்காக உடுப்பிட்டிச் சந்தைக்கு இரண்டு நாள்கள் சென்ற நிலையிலும் அதனை அங்கே அவரால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனாலும் மனம் தளராது சந்நிதியான் பக்தர்களில் ஒருவரான திரு.பழனிவேல் மூலம் அதனை நெல்லியடிச் சந்தையில் பெற்றுக் கொள்வதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டார்கள்.

இந்நிலையில் சந்நிதியானுக்குப் பூமாலைதொடுத்து பூசிக்கின்ற ஆறுமுகசாமி ஐயருடைய மகள் விஜயதர்சினி ஒரு கனவு கண்டார். கனவில் சந்நிதியான் வயதுமுதிர்ந்த ஒருகிழவனாக வந்து தனக்குப் பசிக்கிறது எனவும் தனக்குப் பிட்டு விருப்பமாக இருக்கிறது எனவும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தனது தந்தையாருடைய தினப்பூசை இடம்பெறவிருக்கும் சூழ்நிலையில் அவ்வாறானதொரு கனவினை சந்நிதியான் வெளிப்படுத்தியதனால் எப்படியும் தனது தந்தையாருடைய தினப்பூசையிலே சந்நிதியானுக்குப் பிட்டை நைய்வேத்தியமாகப் படைத்துவிட வேண்டுமென்று விஜயதர்சினி முடிவு செய்து தனது விருப்பத்தை பெற்றோருக்கும் தெரிவித்துவிட்டார்.

இவ்வாறு சந்நிதியான் மீது கொண்ட அளவற்ற அசையாத பக்தியினால் தத்தம் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டுமென்பதில் தந்தைக்கும் மகளுக்கும் ஒரு போட்டியே ஏற்பட்டுவிட்டது. இதில் எதனை நிறைவேற்றுவது எதனை நிராகரிப்பது எனத் தெரியாது ஆறுமுகசாமி ஐயரது குடும்பமே குழப்பமடைந்தது. தினப் பூசைக்கு இன்னும் ஒருநாள் மட்டுமே இடைவெளி இருந்தது.

ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் இது சந்நிதியானுடைய திருவிளையாடல் தான் என்பதை உணர்ந்து கொண்டார்.

இக்கலகத்தை ஏற்படுத்தியுள்ள சந்நிதியானே அதனை முடித்துவைக்கட்டும் எனத் தீர்மானித்த அவர் தினப்பூசைக்குரிய ஏனைய செயற்பாடுகளில் மூழ்கிவிட்டார்.

என்ன ஆச்சரியம் நெல்லியடிச் சந்தைக்குச் சென்ற பழனிவேல் அவர்கள் அந்த சந்தைமுழுவதும் தேடியும் இராசவள்ளிக் கிழங்கினை எங்கேயும் அவரால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அந்தச்செய்தியை பழனிவேல் ஆறுமுகசாமி ஐயரிடம் கவலையுடன் தெரிவித்தார். சந்நிதியான் தனது திருவிளையாடலை நன்கு திட்ட மிட்டு நடத்தி முடித்துள்ள விந்தையை இப்பொழுது ஆறுமுகசாமிஐயர் அவர்கள் உணர்ந்துவிட்டார்.

ஆம். இப்பொழுது மகள் விஜயதர்சினி விரும்பியது போல சுவையான பிட்டு சந்நிதியானுக்கு நைவேத்தியமாகப் படைக்கப்பட்டது. அது சாதாரண பிட்டு அல்ல. வெங்காயம் மிளகாய் என்பவற்றை சிறிது சிறிதாக வெட்டி அவற்றையும் கலந்து அவித்த மிகுந்த சுவை நிறைந்த பிட்டு. தனது மகள் விரும்பியதை விடவும் சுவையாக ஆறுமுகசாமிஐயரே அதனைத் தயாரித்து தனது சாயரட்சப்பூசையின் பொழுது சந்நிதி யானுக்கு தானே நிறைவாக நைவேத்தியமாகப் படைத்தார்.

வாருங்கள்; திருவிளையாடல் புரிகின்ற அந்தக் கலியுகக்கந்தன் தேர் ஏறிவருகின்ற இந்நாளில் அவனது எழில்கோலத்தை நீங்களும் வந்து தரிசியுங்கள்.

"ஓம் முருகா"

- ந.அரியரத்தினம்.



### அன்னதானக் கந்தனுக்கு ரதோற்சவம் இன்று

சந்நிதி முருகனுக்கு இன்று ரதோற்சவம், அன்னதானக் கந்தன் எனப் பக்தர்களால் அழைக்கப்படும் கந்தன் இன்று ரதமேறி பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

புதுமெருகூட்டப்பட்ட ஆலயத்தில் இவ்வாண்டு முருகனின் அருட்காட்சி காண ஆயிரம் கண்கள் வேண்டும். அத்தகைய அழகிய தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்க ஆசி கூறி அமைகின்றேன்.

**சிவானந்த ஐயர் செல்வமணி ஐயர்**
உற்சவகால பிரதமகுரு

### பொருளாளரின் வாழ்த்துச் செய்தி



சந்நிதி முருகன் இன்று தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குகிறார்.

வருடாவருடம் இடம் பெறும் தேர்த் திருவிழாவில் இம்முறை சிறப்பு அம்சமாக தேர்த் திருவிழாவை ஒட்டி விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலயம் மற்றும் தேர் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இம்முறை தேரில் முருகன் வலம் வருகின்றார். ஆலயத்தைப் புதுமெருகூட்ட பக்தர்கள் வழங்கிய நிதி மூலம் புனரமைப்புக்கள் மேற்கொள்ளப் பட்டன. மேலும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

சந்நிதி முருகன் திருவருள் பலருக்கும் கிட்ட வேண்டி அமர்கின்றேன்.

**ஆ.அருணாசலம்**
திருப்பணிச் சபைச் செயலாளர்


## தேர்த்திருவிழா சிறப்புற அன்னதானக் கந்தனை இறைஞ்சுவோர்

சகலவிதமான மின்சார இணைப்புப் பொருள்கள், சைக்கிள் உதிரிப் பாகங்கள், கட்டடப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள
**கரன் எலக்ரிக்கல் சென்ரர் ஆகாஷ் ஹாட்வெயார்**
வல்வெட்டித்துறை வீதி, உடுப்பிட்டி.

**பாக்கியரத்தினம்**
கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையம்.
163, 165, பிரதான வீதி, சங்கானை. TP:0602212713.
கிளை: **தரன் ரேடேர்ஸ்**
130, 132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
TP :021 222 2664.
021 222 7184.

**சந்நிதியான் ஆச்சிரமம்**

**கணபதி களஞ்சியம்**
கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உரும்பிராய்.

**ஸ்ரீ காளி கிறீம் ஹவுஸ்**
சுகாதார முறையிலான சுவை மிக்க குளிர்பானங்களைப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்
**ஸ்ரீ காளி கிறீம் ஹவுஸ்**
கட்டுவன் றோட், மல்லாகம்.
TP:0779396772.

**செல்வா ஹாட்வெயார்ஸ்**
ஆவரங்கால்.

**தமிழ்ப் பூங்கா அச்சகம்**
நெல்லியடி.

**நவரத்தினராசா குடும்பம் குப்பிளான்**

காகிதாதிகள், பாடசாலைப் பொருள்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதுடன் கணனி, போட்டோப் பிரதி, லெமினேற் சேவைகளையும் பெற்றுக்கொள்ள
**கனன் போட்டோ கொப்பி சேவிஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

சீனா, பர்மா, இந்தியா, பாகிஸ்தான், கனடா, பல்கேரியா போன்ற நாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**வேணி களஞ்சியம்**
165, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**க.கு.கந்தையாபிள்ளை**
பலசரக்குமாளிகை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்**
காரைநகர் வீதி, சங்கானை.

**மகாராணி பட்டுச் சோலை**
50, பெரியகடை, யாழ்ப்பாணம்.

சித்திரத் தேர் கோலம் காணப் பெற்றவரும்
உற்றவரும் மடங்களில் இடம் தேடி
தங்குவதை அறியாயோ,
சின்னஞ்சிறு பாலகனாக நீ தேரேறி ஆடியதை
கேட்ட முதல் எந்நிலை அறிய மாட்டாயோ
மாற்றம் தந்தாய், ஏற்றம் தந்தாய்
மறவாவரம் தருவாயோ என வேண்டி நிற்பவர்கள்
**கணபதி வெதுப்பக, களஞ்சிய**
உரிமையாளரும் ஊழியர்களும்.
உரும்பிராய்.

**ரூபின்**
கட்டட ஒப்பந்தகாரர்
யாழ்ப்பாணம்.

**ஐங்கரன் கிறீம் ஹவுஸ்**
கற்பொக்குனை, கந்தரோடை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மு.தளையசிங்கம் ஈழத்துச் சிறுகதைத் துறையில் தனக்கெனச் சிறப்பு
முத்திரை பதித்தவர். 1957 களில் எழுத்துலகில் காலடி பதித்த அவர்,
புத்திலக்கிய வடிவத்தின் வழிகாட்டியாகவும் கருதப்படுகிறார். தமிழ்
இலக்கிய வானில் ஒரு துருவ நட்சத்திரமாகக் கருதப்படுபவர்.
''இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்ததற்கான சாயல்களை இவரைப்
போல் முழு மூச்சோடு வெளிப்படுத்திய ஆளுமைகள் நம்மிடையே வேறு
உள்ளனவா?'' என்று தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் சுந்தர ராமசாமியால்
விதந்து பாராட்டப்பட்ட பெருமைக்குரியவர்.
பாரதியின் சிந்தனையை, இவர் தமது காலத்துக்குக் கொண்டு வந்து
இடைக்காலச் சரித்திரத்துக்கும் எதிர்வினை தந்து, இடைவெளிகளை
அடைத்து, முழுமைப்படுத்த முயன்றவர் என்றும் சிலாகித்துப் பேசப்பட்டவர்.
அவரது படைப்புகள் புதிய சகாப்தத்துக்குக் கட்டியம் கூறும் எழுத்துக்களாக அமைந்தவை.
இவரது முதலாவது சிறுகதை 'தியாகம்', 1957 இல் சுதந்திரனில் வெளிவந்தது. **புதுயுகம்**
பிறக்கிறது அவரது சிறுகதைகளின் முதலாவது தொகுப்பு. **''ஒரு தனி வீடு''** முதலில் வெளிவந்த நாவல்.
''புதுயுகம் பிறக்கிறது'' சிறுகதை அதே பெயரில் வெளிவந்த அவரது சிறுகதைத் தொகுதி
யிலிருந்து மீள் பிரசுரம் செய்யப்படுகிறது.
புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாவார்.
அமரராகிவிட்டார்.

# புதுயுகம் பிறக்கிறது

## சிறுகதை

**கௌரி** இன்னும் கண்ணைத் திறக்கவில்லை. ஆஸ்பத்திரிக் கட்டிலில் அசையாமல் கிடக்கிறாள். பக்கத்தில் சுற்றிப் போர்த்த அந்தச்சிறு உருவம் கிடக்கிறது. அது உருவமா? உள்ளே எலும்பென்பது இருக்குமா? அந்தக் கண்கள்? அந்த வாய்? உயிர் இருக்கிறது. ஆனால் எத்தனை நாளைக்கு?

கனகரத்தினம் கல்லாய் நிற்கிறான். கௌரி இனி கண்ணைத் திறக்கும்போது அவன் என்னத்தைச் சொல்வது? எப்படிச் சொல்வது?

கனகரத்தினத்தின் நெஞ்சு கனக்கிறது. நேற்று, முந்தநாள், ஏன்-இரண்டு மாதங்களுக்கு முன் கௌரி அந்தக் கதையை ஆரம்பித்தது முதல் அவன் என்னென்னவெல்லாம் சொன்னான்! எப்படியெல்லாம் சொன்னான்!

கனகரத்தினத்தால் தாங்க முடியவில்லை. அடக்கமுடியாத வேதனையோடு நினைவுகள் சேர்ந்து நெஞ்சை அமுக்குகின்றன.

இரண்டு மாதங்களுக்கு முன்பு.

''அரோகரா'' என்று கேலியாகக் கத்திக்கொண்டு சாமி அறைக்குள் எட்டிப் பார்த்தான் கனகரத்தினம். கையில் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது.

ஊதுபத்தியைப் பற்ற வைத்துச் சாமிப் படத்துக்கு முன்னால் கும்பிட்டுக் கொண்டு நின்ற கௌரி ஒரு கணம் திரும்பினாள். முகத்தில், மேலே ஒரு மெல்லிய புன்னகை நின்றாலும் அடியிலிருந்த சினம் தெரியாமலில்லை. கனகரத்தினத்தின் கையிலிருந்து அறைக்குள் நுழைந்த சிகரெட் புகையைப் பார்த்தபின் அந்த மெல்லிய புன்னகையும் மறைந்துவிட்டது. திரும்பவும் தலையைத் திருப்பிக் கொண்டு கும்பிடத் தொடங்கினாள்.

கனகரத்தினம் கவலைப்படவில்லை. முன் விறாந்தையில் இருந்த சோபாவில் போய் கௌரி வரும் வரை காத்திருந்தான். அவனுக்கு அதெல்லாம் பழக்கம். கௌரியின் உரிமை அது. அவனுக்கு அதில் எல்லாம் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, அவளுக்கு இருக்கிறது. அதில் அவன் தலையிடக்கூடாது. அது அவளின் தொழுகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்றுதான் இல்லாவிட்டாலும் ஒரு படித்த மனைவிக்குக் கடைசி அந்தச் சுதந்திரமாவது இருக்க வேண்டும். கௌரி அடிக்கடி எழுப்பும் வாதம் அது. அதில் அவள் உண்மையான கண்டிப்புங்கூட. இப்போது கொஞ்சம் முந்தி கனகரத்தினத்தையும் அவனது சிகரெட்டையும் நோக்கி வந்த அந்தச் சுண்டிச் சிவந்த பார்வை அதற்கு ஓர் உதாரணம். சாமி அறைக்குள் போய்விட்டால் கௌரி வேறு ஓர் அவதாரம். அவர்கள் வீட்டில் இந்த அறை மட்டும் ஒரு தனியான கலாசார டிப்பார்ட்மென்ட். கௌரிதான் அதற்கு அதிகாரி. கனகரத்தினத்தின் கலாசாரம் அதற்கு முற்றிலும் மாறானது. புரட்சிகரமானது. வீட்டில் எங்குமே ஆட்சி செய்தது. ஆனால் சாமி அறை வாசலுக்கு அப்பால் மட்டும் அது போவதில்லை. அப்பால் கௌரியின் ஆட்சி. புரட்சி பக்திக்குப் பணிய வேண்டும். பணிய விரும்பாவிட்டால் அதில் தலையிடாமலே இருந்து விடலாம். அது பயமுறுத்தல் அல்ல, பரஸ்பர ஒப்பந்தம். மரியாதை. கனகரத்தினத்துக்கு அதெல்லாம் பழசாகிப்போய்விட்டது. எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், தொழுகைச் சுதந்திரம் என்பதில் எல்லாம் நம்பிக்கை வைக்கும் பேர்வழியல்ல அவன். அவனுடைய கட்சி வேறு. ஊதுபத்தி சாம்பிராணி போட்டு மணித்தியாலக் கணக்காக நின்று ஏதாவது ஒரு படத்துக்கு முன்னால் முணுமுணுத்துத்தான் ஆகவேண்டுமென்றால் முன் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த மார்க்ஸ், லெனின் படங்களை அவன் சிபார்சு செய்யத் தயார். ஆனால் கௌரியின் ரசனை வேறு ரகம். கோவணத்தோடு நிற்கும் முருகன் தரவழிகளைத் தவிர மற்றவர்களுக்கு அவள் உலகத்தில் அனுமதி இல்லை. அவள் வேறுயுகப் பேர்வழி. எப்போதோ பிறந்து, காலங்காலமாய் வளர்ந்து முதிர்ந்து இப்போது செத்துக் கொண்டிருக்கும் பழைய யுகம். பிறந்துகொண்டிருக்கும் இப் புதிய யுகத்தைச் சேராதவள் அவள். கௌரியைப் பற்றிய கனகரத்தினத்தின் அபிப்பிராயம் அது. என்றாலும் அவளுடைய விசயங்களில் அவன் தலையிடுவதில்லை. ஏதோ அவள் பட்டபாடு என்ற எண்ணம். அவனுடைய மாபெரும் இலட்சியமான உலகப்புரட்சிக்கு அவளின் அந்தச் சின்னஞ்சிறிய நான்கு சுவர் அறையிலிருந்து ஆபத்து வரப்போவதில்லை. எனவே, அறைக்கு வெளியே நின்று கிண்டல் பண்ணுவது கூட அனாவசியம். ஆனால் அப்படிச் செய்வதில்தான் அவனுக்கு ஓர் ஆனந்தம்.

சில நேரம் சென்று வெளியே வந்த கௌரியின் முகத்தில் பழைய சினம் இருக்கவில்லை. ''உங்களுக்கு எந்த நேரமும் பகிடி'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே வந்தாள். முகத்தில் நிம்மதி நிறைந்த சாந்தி நின்றது. நெற்றியில் விபூதி பொட்டு ஒளிவிட்டது. கூடவோ தாய்மையின் பூரிப்பு.

கௌரியின் முகத்தில் அப்படி ஒரு களை சதா ஒளியிடத்தான் செய்யும். ஆனால் முக்கியமாக அவள் சாமி அறையிலிருந்து வெளிவரும்போது அந்தக் களையின் ஒளிவட்டங்களைக் கூடக் கண்டுவிடலாம் என்ற ஒரு பிரமை ஏற்படும். கனகரத்தினத்துக்கு அந்தத் தோற்றம் கௌரியின் அம்மாவை நினைவூட்டும். அவன் சின்னவனாய் இருக்கும் போதே இறந்துபோன அவனின் தாயாரை நினைவூட்டும். அம்மாவின் அம்மாவை, தாயாரின் தாயாரை என்று அதற்குப்பின் ஒரு தொடர் நினைவுகள் ஓடும். எல்லோர் முகங்களிலும் அதேவித அமைதி; தெய்வீகக் களை; ஒளிவிடும் விபூதிப் பூச்சு. அதுதான் கிழக்குப் பண்பாடு என்று ஏதோ ஒன்று நெஞ்சுக்குள் சொல்லும். சாமி அறைக்குள் போய் நின்று அந்தப் பழைய பரம்பரைத் தொடரோடு கௌரி தொடர்பேற்படுத்திக் கொள்கிறாளா? ஐக்கியப்பட்டு விடுகிறாளா? ஆச்சரியத்தோடு கனகரத்தினம் தன்னையே அப்படிக் கேட்டுக் கொள்வான். அந்தக் கேள்விகளுக்கு அவனால் விடை கண்டு கொள்ள முடியாவிட்டாலும் கௌரியின் முகத்தில் நிற்கும் அந்த அமைதி நிறைந்த களைக்கு மனத்துள் அவனால் மரியாதை கொடுக்காமல் இருக்க முடியாது. அவளின் பழக்கவழக்கங்கள் பழைய பரம்பரைப் பழக்கவழக்கங்களாய் இருக்கலாம். ஆனால் அவற்றில் உள்ள அமைதியும் பொறுமையும் போற்றப் படக்கூடியதுதான். அவனது புரட்சி எண்ணங்களில், அவன் காணும் புதுயுகப் பெண்களில் அவற்றின் வெறுமையினால் ஏற்படும் குறையை அப்போதுதான் அவனால் உணர முடியும். ஆனால் அதற்காக கௌரியில் அதிக அன்பைக் காட்டுவதைத் தவிர தன் கொள்கைகளை மாற்றிக்கொள்ள அவன் விரும்புவதில்லை. கட்சியும் கொள்கையும் அறிவை அடிப்படையாகக் கொண்டவையேயொழிய உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டவையல்ல என்ற பழக்கமான அவனின் சுலோகத்தை அதற்குக் காரணமாகவும் காட்டிவிடுவான்.

''இண்டைக்கென்ன டைம் டேபிளில் ஒரு மாற்றம்? பகல் பத்துமணிக்கும் ஒரு கும்பிடு. ஞாயிற்றுக்கிழமை யெண்டும் பாராமல்?'' என்று கௌரியைப் பார்த்து அவன் அப்போது கேட்டபோது பகிடியோடு ஓர் இனந்தெரியாத வாஞ்சையும் சேர்ந்து நின்றது.

''உங்களுக்கென்ன ஊர் சுற்றியிற்று வருவீங்க, விடிஞ்சாப் பொழுதுபட்டா கட்சி கட்சியெண்டு பீத்துவீங்க. வேறென்ன தெரியும்?''

''அடேயப்பா புதிசா ஏதோ தெரிஞ்சு வச்சிருக்கிற போலிருக்கே'' என்று கனகரத்தினம் உதட்டைப் பிதுக்கி முகத்தைக் கோணலாக்கிச் சிரித்தான். ''என்ன அமெரிக்கன்காறங்கள் சந்திரனுக்குப் போயிட்டாங்களா? அல்லது நூறு மெகாடன் அணுகுண்டை வெடிக்க வைச்சிட்டாங்களா? அல்லது கென்னடிதான் ஒரு கொம்யூனிஸ்ட்டாக மாறியிட்டாரா?''

''போங்களப்பா, உங்களுக்கு எப்பவாவது நல்லதாக ஏதாவது கதைக்க முடிகிறதா?'' என்றாள் கௌரி.

கனகரத்தினத்துக்குச் சாடையாகச் சுட்டது. எப்போதாவது அவன் நல்லதாக இல்லாத ஏதாவதைப் பற்றிக் கதைத்ததுண்டா? நிரந்தரப் புரட்சி, தொழிலாளர் எழுச்சி, சோஸலிஸ அமைப்பு, முதலாளி வர்க்க ஒழிப்பு என்பவற்றைவிட நல்லவை வேறு இருக்கிறதா?

''சரி நீ நல்லதாக ஏதாவது கதை பார்ப்பம்'' என்றான் கௌரியைப் பார்த்து வேண்டுமென்றே.

''சுசீலா இருக்கே?'' என்று ஆரம்பித்தாள் கௌரி.



ஆனால் கனகரத்தினம் விடவில்லை. ''எந்தச் சுசீலா?'' என்று இடைமறித்தான்.

''என்ன, சுசீலாவைத் தெரியாதா?'' என்று ஆச்சரியப்பட்டாள் கௌரி.

கனகரத்தினத்துக்குச் சிரிப்பாக வந்தது. கௌரி சொல்பவை அவ்வளவு முக்கியமற்றவை என்று காட்டிக் கொள்வதில் அவனுக்கு ஒரு சந்தோசம்.

(14 ஆம் பக்கம் பார்க்க...)

# தொலைந்த சுவடுகள்

**சுழன்றோடும் வாழ்க்கை**
**சுழியில் உழன்று**
**பாதைகள் மாறி**
**பயணங்கள் தொடர்ந்து**
**துன்பம் களைந்து**
**இன்பம் பெறவேண்டி**
**தொலைதூரம்**
**தொலைந்த சுவடுகள்**
**தேடுகிறோம்.**

**திசைமாறிய வாழ்க்கை**
**சிதைந்து போன எண்ணம்**
**உறவுகள் மறந்து**
**உதவிகள் இன்றி**
**உள்ளக்கிடக்கையில்**
**உழன்று தேறி**
**நடைப்பிணங்களாய்**
**நடமாடி**
**தொலைவானில்**
**தொலைத்த சுவடுகள்**
**தேடுகிறோம்.**

**வாழ்க்கைத் தேடலில்**
**வசதிகள் இழந்து**
**வறுமைபிடித்து**
**சொந்தம் விலகி**
**சோகங்கள் தாங்கி**
**நொந்து நூலாகி**
**வெந்து தணலாகி**
**தொலைதூரம்**
**தொலைந்த சுவடுகள்**
**தேடுகிறோம்.**

**கூட்டுக் குடும்பம்**
**கூடிக்குலாவி**
**குதூகலித்து மகிழ்ந்து**
**குறும்பு செய்தது**
**சிறகு கட்டிப் பறந்து**
**சிறு கனவுகளாகி**
**வெகு தொலைவில்**
**வேகமாகத்**
**தொலைந்து போனதே!**

**அ.ஆனந்தலட்சுமி**
*இணுவில்*

# பாத்திரங்களாகவே மாறிநின்று குறள் தீட்டிய வள்ளுவனின் தனித்துவத்துக்கு ஒப்புவமை இல்லை

எல்லா நலன்களும் பொருந்திய ஒப்பற்ற இலக்கியம் திருக்குறள். பொருள்நலன், ஓசை நலன், அணிநலன், சொல்நலன் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

அணிகளுள் இலகுவாக விளங்கக் கூடியது உவமை அணி. அந்த அணிதான் எல்லா அணிகளுக்கும் தாயாகவும் விளங்குகிறது.

கவிஞர்களின் பாவில் விளையாடிய உவமை அணி பொதுமக்களின் நாவிலும், விளையாடத் தவறவில்லை. அதற்கு அதன் எளிமையே காரணம்.

தன்குழந்தையின் கன்னத்தைத் தடவிய தாய் பூப்போன்ற கன்னமென அதன் மென்மையைக் குறிப்பிடுவாள்.

காதலியின் வார்த்தையைக் கேட்ட காதலன் 'தேன்' போன்ற இன்சொற்களை அவள் பேசுகிறாள் என்பான். கோபத்தில் சத்தமிடும் ஒருவனைப் பார்த்து இன்னொருவன் ஏன் நாய் போலக் குரைக்கிறாய் என்பான்.

உவமை அணி செய்யுள் வழக்கு, பேச்சு வழக்கு என்று எல்லாம் பார்க்காமல் எங்கும் உலாவும் தனித்துவம் கொண்டது.

தலைவன் தலைவியைத் தழுவுவதால் ஏற்படும் இன்பம் எப்படி இருக்கும் என்பதைப் பாடாத கவிஞர் இல்லை. தலைவன் தலைவியைத் தழுவும் இன்பத்தைத் தமிழ் இலக்கியங்கள் மட்டும் சிறப்பித்துப் பாடவில்லை. உலகில் உள்ள உயர்ந்த இலக்கியங்கள் பலவும் பாடி உள்ளன. ஆனால் திருவள்ளுவர் அந்த இன்பத்தைக் கூறும்போது அவரது தனித்துவம் விளங்குகின்றது.

சொந்த வீட்டில் இருப்பது இன்பம் என்கிறார் வள்ளுவர். இடப்பெயர்வால் வாடகை வீட்டில் இருப்பவர்களுக்குச் சொந்தவீட்டில் இருக்கும் இன்பம் [illegible] சொந்த வீட்டில் வசிப்பதும், வெளிநாட்டில் இருந்து வரும்பணத்தை எதிர்பாராது உறவினரின் உதவியை எதிர்பாராது தமது உழைப்பினால் வரும் பணத்தில் உண்பதும் இன்பம் என்கிறார் அவர். அப்படி உண்ணும்போது கூடப் பசி என்று வந்தவர்களுக்குக் கொடுத்து ஏழை உறவினர்களுக்குக் கொடுத்து உண்பதுமேல் என்கிறார்.

தலைவன் தலைவியைத் தழுவுவதால் வரும் இன்பத்தைச் சொந்த வீட்டில் சொந்தப் பணத்தில் பிறருக்கும் கொடுத்து உண்ணும் வாழ்வோடும் ஒப்பிடுகிறார்.

*''தம் மில் இருந்து தமது பாத்துண்டற்றால்*
*அம் மா அரி வைமுயக்கு''*

என்கிறார்.

அழகியைத் தழுவுதலால் ஏற்படும் இன்பம், உலகோர் தம் உழைப்பால் வந்த பொருளைத் தமது வீட்டிலிருந்து பிறர்க்கும் கொடுத்து உண்ணும் இன்பம் போன்றது என்கிறார்.

திருவள்ளுவர் அறத்தைப்பாடும்போது அறவோராகத் திகழ்வார். அரசியலைப்பாடும் போது அரசியல்வாதியாகத் திகழ்வார். படைச் சிறப்பைப் பாடும்போது தானே வீரனாக மாறுவார். காதற்சிறப்பைப் பாடும்போது தலைவனாக மாறிவிடுவார்.

பால் இனிமையானது என்பது எல்லோருக்கும் தெரியும். தேனும் இனிமையானது. அதுவும் எல்லோருக்கும் தெரியும். பாலையும் தேனையும் கலந்து உண்டால் ஒருபுதுச் சுவை உண்டாகும். இது எல்லோருக்கும் தெரியாது. பாலையும் தேனையும் கலந்து உண்டவர்களுக்கு மட்டும்தான் தெரியும்.

தலைவியின் இதழ் அமுதம் தரும் இன்பம் எப்படி இருக்கும். அது தலைவனுக்கு மட்டுமே தெரியும்.

*''பாலொடுதேன் கலந்தற்றே பணிமொழி*
*வாலெயிறு ஊறியநீர்''*

மென்மையான மொழியினை உடைய தலைவியின் இதழ் அமுதம் பாலையும் தேனையும் கலந்த கலவை போல் இருக்கும் என்கிறார்.

திருவள்ளுவர் உவமையைக் கையாளும் போது மக்களுக்கு நன்கு தெரிந்த பொருளையே உவமானமாகக் கொள்வார். தலைமயிர் எல்லோருக்கும் தெரிந்த பொருள். தலைமயிர் தலையில் இருக்கும்போது தலைமயிரை அழகுபடுத்துவதற்காக கன்னியரும் காளையரும் நீண்டநேரம் கண்ணாடிமுன் நிற்பர். சிலர் செயற்கை நெளிவுகளைக்கூடத் தலைமயிருக்கு ஏற்படுத்துவர். வாசனைப் பொருள்களால் வாசனை ஊட்டுவர். இவ்வளவும் தலைமயிர் தலையில் இருக்கும் போதுதான்.

உணவு உண்ணும் போது ஒரு தலைமயிர் தவறி உணவில் விழுந்து விட்டால் தமது தலைமயிரைப் பார்த்துத் தாமே அருவருப்பர். ஒரு தலைமயிருக்காக உணவையே கொட்டிவிடுவர்.

இதேபோலத்தான் ஒருவர் கல்வித்துறையிலோ, அரசியல்துறையிலோ, வேறு எந்தப் பொதுத் துறையிலோ, உயர்ந்த நிலையில் இருக்கும்போது உலகம் அவரைப்போற்றும். சந்தர்ப்பவசத்தால் அவர் ஒழுக்கம் தவறினாலோ மது உண்ணத் தொடங்கி விட்டாலோ பண மோசடியில் ஈடுபட்டாலோ அவரைக் கண்டு உலகம் அருவருப்படையும்.

இதனைத் திருவள்ளுவர் -

*''தலையின் இழிந்தமயிரனையர் மாந்தர்*
*நிலையின் இழிந்தக் கடை''* என்கிறார்.

உயர்ந்தவர்கள் தம் உயர்ந்தநிலையை விட்டுத் தவறியபோது தலையை விட்டுத் தவறி வீழ்ந்த தலைமயிரைப் போல இழிவடைவார்கள் என்கிறார்.



தெரிந்தபொருள்களை உவமையாக்கித் தாம் எடுத்த பொருளை விளக்கும் திருவள்ளுவரின் ஆற்றல் தனித்துவம்மிக்கது.

புலவர் ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகம் பிறக்கிறது....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''என்ன பெரிய சரித்திரப் பிரசித்தி பெற்றவர்களைப் பற்றிச் சொல்லியிற்று ஆச்சரியப்படுகிறவள்போல ஆச்சரியப் படுகிறாயே. சுசீலா எண்டால் என்ன, லெனின் ஸ்டாலின் எண்ட எண்ணமா?''

கௌரி அதைப் பொருட்படுத்த வில்லை. ''நம்மோடு வாசிற்றியில் இருந்ததே அது'' என்றாள் அவள்.

கனகரத்தினம் கொஞ்சமும் அதைப் பற்றி நினைக்க விரும்பாதவன்போல, ''சரி அந்தச் சுசிலாவுக்கு என்னவாம்?'' என்றான் அசிரத்தையாக.

''அதுக்குப் பிறந்த முதல் குழந்தை செத்துப் பிறந்திருக்காம். முகம் கண் மூக்கெல்லாம் அசிங்கமாக இருந்திச்சாம். என்னவோ வியாதியெண்டு இப்ப கோமளா சொல்லியிற்றுப் போகுது.''

''அவளுக்கு வீ.டி.யாக்கும்'' என்றான் கனகரத்தினம்.

''யாருக்கு?''

''பிள்ளையைப் பெத்த சுசீலாவுக்கோ கிசீலாவுக்கோ!''

''சும்மா பைத்தியம் மாதிரி கதைக்கா தீங்க'' என்று பதை பதைத்துச் சொன் னாள் கௌரி. ''உங்கட நாக்கல்ல அழு கிப்போகும் அப்படிச் சொன்னா. அவள் எவ்வளவோ நல்லவள். அவள் ஒரு றிலிஜியஸ் கேஸ்.''

''அப்ப அவளின்ர புருஷனுக்காக் கும்'' என்றான் கனகரத்தினம். எந்தள விலும் தன் காரணம் பிழைக்காதது போல்.

கௌரிக்கு, கனகரத்தினம் இன்னும் கூடுதலான ஒரு பாவத்தைச் செய்து விட்டதுபோல் பட்டிருக்க வேண்டும். அவளின் பதைபதைப்பு இன்னும் கூடிற்று. ''மற்றவையெல்லாம் தன்னைப் போல எண்ட எண்ணமாக்கும். ஏனிப்படி வீணாப் பாவத்தைத் தேடிக்கொள்றீங்க? அது ஒரு சாமிப்போக்கு. சுசீலாவைவிட நல்லம். என்னுடைய (Batch mates) பற்ச்மேற்ஸைப்பற்றி எனக்குத் தெரியாதா? மூண்டு வருசத்துக்கு முந்தியிருந்த உங் களுக்கென்ன தெரியும்? நீங்கதான் முந்தி அங்கையும் இஞ்சேயும் திரிஞ்சீங்களெண்டு இப்பவும் கதைக்கினம்.''

''சரி அதுக்கு இப்பவேன் ஒரு சண்டே ஸ்பெசல் கும்பிடு போட்டனி? சுசீலாவின்ர குழந்தை உயிர்த்தெழ வேண்டுமெண்டா?'' கனகரத்தினம் கதையை மாற்றினான். தன்னைப் பற்றிய புதை பொருள் ஆராய்ச்சி தோல்வியைத்தான் கொண்டு வரும் என்று அவனுக்குத் தெரியும்.

''இல்லை, உங்கட பிள்ளைதான் சுக மாகப் பிறக்க வேண்டுமெண்டு, மூண்டு வருசத்துக்குப்பின் அருமை பெருமை யாகக் கிடைச்சிருக்கெண்டு அக்கறை இருக்கா உங்களுக்கு?''

கனகரத்தினம் ஓவென்று சிரித்தான். சிரித்துக்கொண்டே சொன்னான். ''அதுக்குத்தானா நீ இப்ப ஸ்பெஸல் கும்பிடு போட்டாய்? பைத்தியம். நீ எரிக்கிற கற்பூரமும் ஊதுபத்தியும் நம்நாட்டுப் பணத்தை ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் அனுப்புமேயொழிய கடவுளட்ட ஒண்டும் சொல்லாது. இந்த விசயங்களுக்கெல்லாம் கடவுளிட்டக் கேட்கிறதும் காசி கதிர்காமம் போறதுவும் இந்தக்காலத்திலை செய்யிறதில்ல. அது அந்தக்காலம். இது அணுகுண்டுக் காலம் கௌரி. இது அணுகுண்டுக் காலம். விஞ்ஞானம் எதையும் செய்யும். கடவுளிட்டக் கேட்கிறதை விட்டிற்று டொக்டரட்டப் போகோணும்.''

''சரி சரி உங்கட லெக்ஸர் போதும்'' என்று சொல்லிக்கொண்டே அவன் அதை முடிக்கு முன்பே கௌரி தன் பாட்டில் குசினிப் பக்கம் போய்விட்டாள். கனகரத்தினம் தொடர்ந்து சிரித்தான். அது ஒரு வெற்றிச்சிரிப்பு.

கனகரத்தினம் ஒரு பொதுவுடைமை வாதி. பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதே அவன் அப்படி. இப்போ கொழும்பில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருக்கிறான். அதே சமயம் ஒரு முக்கிய தொழிற்சங்கத்தின் செயலாளனும் கூட. கட்சி விவாகாரந்தான் அவனது முக்கிய வேலை. உத்தியோகம் இரண்டாந்தர யந்திரத் தொழில். தனிப்பட்ட முன்னேற்றத்தில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. மனித குலத்தின் பொது முன்னேற்றத்தில்தான் அவனுக்கு நம்பிக்கை. அதற்குத் தடையாய் உள்ள பிற்போக்குச் சக்திகளை அகற்றும் விசயத்தில் அவனது கட்சிச் சகாக் களைவிட அவன் மிகவும் தீவிரமான வனுங்கூட. அகிம்சை, பொறுமை என்பவற்றை அவன் அடியோடு வெறுத்தான். அவற்றின் மூலம் பிற்போக்குச் சக்திகளைக் களைந்தெறிய முடியாது என்பது அவனது அசையாத நம்பிக்கை. புரட்சியும் சர்வாதிகாரமுந்தான் அவனுக்குப் பிடித்த வழி. கட்சி மாறாகச் சொன்னாலுங்கூட பலத்தைப் பலம்தான் அழிக்கவேண்டும் என்பதுதான் அவனது தனிப்பட்ட கொள்கை. திபெத்தைச் சீனா கைப்பற்றியபோது, இந்தியாவில் அது ஆக்கிரமிப்பு நடத்தியபோது அவனுக்கு அவை தவிர்க்க முடியாத உலகப் புரட்சியின் சில கட்டங்களாகத்தான் பட்டன. பரீட்சார்த்தமாக வெடிக்கப்பட்ட அதிக மெகாடன் அணுகுண்டுகள் அவனைப் பொறுத்த வரையில் அதே செய்தியைத்தான் கொடுத்தன. வழி எப்படியாய் இருப்பினும் தன் நோக்கம் தலைசிறந்தது என்பது அவனது நம்பிக்கை. அதைக் கௌரியும் உள்ளுக் குள் உணர்ந்திருந்தாள் என்பது அவ னுக்குத் தெரியும். ஆனால் கௌரி வழி யைப்பற்றிக் கவலைப்பட்டாள். கனகரத் தினதுக்கு அந்தக் கவலை இருக்க வில்லை. மாறாக அது ஒரு பழைய பரம்பரைப் பிற்போக்குச் சுபாவம் என்று சிரித்தான். அடுத்த இரண்டு மாதங்க ளாகக் கௌரி கவலைப்படும்போதெல் லாம் கனகரத்தினம் அப்படித்தான் சிரித்தான். அப்படித்தான் பகிடி பண்ணி னான். ஆனால் அடுத்த இரண்டு மாதம் வரைக்கும்தான். அதற்குப்பின்?

கௌரி கண் திறந்து ஐந்தாறு நிமிடங்களாகின்றன. கஷ்டப்பட்டுப் பிரசவித்தபின் கௌரி இப்போதுதான் கண் திறந்திருக்கிறாள். நிதானமாக அறிவு வந்தபின் அங்குமிங்கும் அவள் கண்கள் தேடுகின்றன.

கனகரத்தினத்தின் முகத்தில் அப்படி எழுதி ஒட்டிவிட்டிருக்கிறதா?

''பிள்ளை எங்க?'' என்று பயத்தோடு அவள் கேட்கிறாள்.

பிள்ளை கிடக்கும் பக்கத்தைக் கனகரத்தினம் காட்டுகிறான். போர் வையை அகற்றிக் காட்டும்படி அவள் வேண்டுகிறாள். பேசாமல் நிற்கிறான் கனகரத்தினம். அவளால் பொறுக்க முடியவில்லை. கஷ்டத்தோடு தானே முயல்கிறாள். அதைப் பொறுக்க முடி யாமல் கனகரத்தினமும் உதவுகிறான். போர்வை அகற்றப்பட்டு உருவம் தெரிகிறது. அடுத்தகணம் கௌரி கீச்சிட்டுக் கொண்டே முகத்தைத் திருப்பிவிடுகிறாள்.

கனகரத்தினத்துக்கு அவளை எப்படித் தேற்றுவதென்று தெரியவில்லை. ஐந்து நிமிடங்களுக்குப்பின் கனகரத்தினத்தின் பக்கம் அவள் பார்வை திரும்புகிறது. அதில் நிற்கும் அந்தக் கேள்வி!

''அப்போ உங்களுக்கும் வீ.டீ.தானா? உங்களுக்கும் அதுதானா?''

''இல்லை கௌரி, இல்லை. இது என்ன வியாதியெண்டு தெரியவில்லை யாம். அணுகுண்டுகளின் றேடியோ ஆக்டிவ்தூசுகளினால் வந்திருக்கலாம் எண்டு டொக்டர்ஸ்மார் சொல்லீனம்'' என்று கனகரத்தினம் சொல்லும் போது அவனுக்குக் கண்ணீர் வடிக்கிறது.

கௌரியின் கண்கள் விரிகின்றன. பின்பு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல் மறுபக்கம் தலையைச் சாய்த்துக் கொள்கிறாள். முன்பு இருந்த விம்மல், குலுங்கல் ஒன்றும் இல்லை. ஆனால் கண்களில் நீர் ஆறாகப் பெருகி ஓடுகிறது. கனகரத்தினத்தின் நெஞ்சை அந்தக் காட்சி நெருடுகிறது. என்னத்தை நினைத்து அவள் அழுகிறாள்?

கடைசியில் உங்கள் விஞ்ஞானம், உங்கள் அறிவு, வழியல்ல, நோக்கமும் முடிவுந்தான் முக்கியம் என்ற கொள்கை எல்லாம் இதைத்தானா செய்தன என்றா நினைக்கிறாள்?

''அழாதே கௌரி, அழாதே. எல்லாம் கடவுளின் செயல்'' என்று என்ன சொல்கிறோம் என்று தெரியாமல் உளறினான் கனகரத்தினம்.

''இல்லை'' என்றாள் கௌரி. முனகினாலும் நிதானமாகக் குரல் வந்தது. ''இல்லை, இது கடவுளின் செயலல்ல. உங்கள் முன்னேற்றம் எங்கட கடவுளையே கொண்டு போட்டுது''.

***

## சொற்சிலம்பம் - போட்டி இல: 27

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | 6 |
| 7 | | | | 8 | | | |
| | | 9 | 10 | | | 11 | |
| 12 | | | | | 13 | | |
| | | 14 | | 15 | | | 16 |
| 17 | 18 | | | 19 | | | |
| 20 | | | 21 | | | | |
| | | 22 | | | | 23 | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி இல. 27
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)
லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (24.09.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக் கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.27இல் வெற்றிபெற்றோர் விவரம் 28.09.2008 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

**இடமிருந்துவலம்**

1. தருமநூல்.
4. தங்களது.
7. சிலம்புக்குள் இருக்கும் சிறு பருக் கைகள்.
8. இரக்கம்/கொடை.
9. பல்லாயிரம் வருடங்கள் கொண்ட காலம்.
11. கச்சு/வார்/கயிறு.
12. பயன்படுத்திய/உபயோகித்த.
13. கதவின் கொழுக்கி/பூட்டு.
14. கணவன் - மனைவி.
17. வகுப்பு.
19. பின்னிற்றல்/பின்நில்
20. வசி.
21. கூறு.
22. கோபம்/சினம்.
23. தங்கம்.

**மேலிருந்து கீழ்**

1. நெருக்கடியின் போது உதவு பவன் மாயக்கிருஷ்ணனுக்கு இப்ப டியும் ஒரு பெயர்.
2. களவு செய்.
3. உடற்போர்.
4. குளிர்மை.
5. விவாக தினம்.
6. தளிர்.
8. தமது
10. தண்டம்/ஓர் ஆயுதம்.
13. மருத்துவ உதவியாளர்.
15. பதற்றமுறு.
16. பாண்டவருள் ஒருவன்.
18. மன்மதன் காதலி.
21. பிரி.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 25 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)உசிதம்(4) பிசகு (7) சாவடி (8) அந்தாதி (9) வலைப்பந்து (11) புழுதி (14) துப்பாக்கி (17) ஆந்தை (18) பொங்கல் (19) வித (20) கழுகு (21) தின்னாது (22) ஆடி

**மேலிருந்து கீழ்**

(1) உசாவல் (2) சிவலை (3) தடிப்பு (4) பிந்து (5)சதா (6) குதிரை (8) அந்திப்பொழுது (10) பழுது (12) தக்க (13) சந்ததி (15) பாங்கு (16) கில்லாடி (17) ஆவி (20) கனா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோ சனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 25 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவ ரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
கோபிகா பரிமளகாந்தன்,
யா/வேம்படி மகளிர் உ/த பாடசாலை.
தரம் 8F
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
செ.மேரி பிருநறியால்,
சிற்றம்பலபுரம்,
அச்சுவேலி.

**3 ஆம் பரிசு**
செ.சூரியகுமாரன்,
சம்பியன் லேன்,
கொக்குவில்.

பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) க.சுகன்யா,
5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(2) ந.சிவகுமாரன்,
இல: 72 (22) நல்லூர் குறுக்குத்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(3) பி.ரஞ்சினிதேவி,
இல: 87, [illegible] கோயில் வீதி,
[illegible] யாழ்ப்பாணம்.

(4) ஆனந்தறூபி பெலற் விமலதாஸ்,
புனிதபீற்றர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(5) அ.றஜீவன்,
புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாதஸ்வர இசையை இனிதாய்ப் பொழிவதில் ஞானமூர்த்தியாக விளங்கிய கானமூர்த்தி



தமிழ்க் கலைகளின் தாயகம் தமிழ்நாடே என்று வாதிடுவோரின் தர்க்கத்தை அழித்த பெருமை நம்நாட்டு இசைவேளாளர்களுக்கே உரியது. தமிழ்நாட்டு இசை மேதைகளே நம் இசைவேளாளர் தம் ஆற்றலைப் போற்றியும் புகழ்ந்தும் பாராட்டிய வரலாறு நம் இனத்தின் பெருமையை பறைசாற்றும். அப்பெருமை மிகு இசைவேளாளரின் ஆலம் விருட்சத்தைத் தாங்கி நின்றிருந்த விழுதுகளில் ஒன்றாகத் திகழ்ந்த கோ.கானமூர்த்தியின் மறைவு எம் இசையுலகத்திற்குப் பெரும் இழப்பாகும்.

தனது ஆற்றலாலும் பண்பாலும் மற்றவர்களிற்கு நன்மை பயப்பதாலும் சுற்றத்தவரை தன் வசப்படுத்தும் இவரது குழல், இனிமை குன்றாது மற்றவரை பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிடும். நம்மவரை தலை நிமிரவைக்கும் இசையாற்றல் மிக்க கானமூர்த்தி சாஸ்திரீயம் கலையாத

**சோ.குமுதா**

தனக்கேயான தனிப்பாணி யுடன் இசை வழங்கி வந்தவர். இவரது கானடா ராகத்திற்கு மயங்காதவர் எவரும் இருக்கமுடியாது.

1945ஆம் ஆண்டு தை மாதம் 3ஆம் திகதி யாழ்ப்பாணம் கோண்டாவில் கோதண்டபாணி ராஜராஜேஸ்வரி தம்பதியரின் மூத்த மைந்தராய்ப் பிறந்த இவர் தனது ஆரம்ப சிட்ஷையை தனது மரபுரீதியாகத் தந்தையிடமிருந்தே பெற்றுக் கொண்டார். இவர் தனது சகோதரர் பஞ்சமூர்த்தியுடன் இணைந்து இசைச்சேவகம் புரிந்தும் பல இசைக்கச்சேரிகளை நிகழ்த்தியும் பாராட்டுப் பெற்றவர். கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதஸ்வர இசை என்றால் பலராலும் விரும்பப்பட்ட ஒன்று. தனது சகோதரனை இந்தியாவிற்கு அனுப்பி சிட்ஷை பெற வைத்த உத்தமரான இவர், சகோதரருடன் இணைந்து வாசித்து எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியதுடன் பல கௌரவங்களையும் பெற்றவர்.

ராஜலக்ஷ்மியை மணம்புரிந்து ஐந்து குழந்தைகளின் தந்தையான இவர், தன் ஆண் மக்கள் மூவரையும் தம் மரபு பேணும் இசையிலேயே ஈடுபட வைத்துள்ளார். அவர்கள் தங்களாலான இசைச் சேவகத்தை ஆலயங்களில் செய்து வருகின்றனர். இசைக் கலைப்பட்டதாரியான இவரது இளைய புத்திரி, தன் தளராத முயற்சியினால் இளம் வயதிலேயே நாதஸ்வர இசையில் புகழ் பரப்பிவரும் பாலமுருகனை கரம் பற்றித் தன் தந்தையின் மரபைக் கணவருடன் இணைந்து பேணி வருகின்றார்.

### விரல்களின் இயல்பான ஓட்டமும் மக்களை வசப்படுத்தியது

கானமூர்த்தி எனும் தனது பெயருக்கேற்ற வகையில் தனது சகோதரனுடன் இணைந்தும், தனித்தும் ஆயிரக்கணக்கான இசைக் கச்சேரிகளை நிகழ்த்தி 'ஞானமூர்த்தியாக' விளங்கியவர். யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இவரது இசைச் சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பு விழா எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. நாதஸ்வர இசை வழங்கும் ஒரு குழுவில் இருவர் நாயனம் வாசிக்கும்போது பிரதானமான ஒருவரிற்கு மற்றையவர் ஒத்து வாசிப்பவராகவே இருப்பார்.

ஒத்து உடன் வாசிப்பவரும் நல்ல ஞானமுடையவராக அமையும்போது அதன் இசை அழகே தனி. ஆனால் குருவும் சீடனும், தந்தையும் மகனும் என இணைகின்றபோது இருவரது திறமையும்பகிரப்பட்டாலும்ஒருவருக்கேமுதன்மை தரப்படும். ஆனால் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி இருவரும் சகோதரர்களாக இருந்தமையால் அம்முதன்மைத்தனம் இன்றி இருவரும் ஒருவருக்கொருவர் சளைக்காது மிகவும் உற்சாகத்துடனும் கம்பீரத்துடனும் இசைத்து மக்களைப் பரவசப்படுத்தியதுடன், அதுவே அவர்களுக்கேயுரிய தனித்துவமாக உணரப்பட்டது; விரும்பப்பட்டது. இருவரதும் தோற்றப்பொலிவும் இளமைத் துடிப்பும் விரல்களின் இயல்பான ஓட்டமும் இசையுடன் கலந்து மக்களைத் தம்வசப்படுத்தியது. இருவரும் இணைந்து இராக ஆலாபனை செய்தால் நேரம் போவதே தெரியாது. ஏனெனில் ஸ்வரக் கோர்வைகள், சஞ் சாரங்கள் அடுத்தடுத்து தொடர்ச்சியாகவும் அழகாகவும் கோர்க்கப்பட்டு மிக லாவகமாக அமைந்திருக்கும். இராக ஆலாபனையை இரசிக்காதவர்களைக் கூட இவ்விரட்டையர்களின் ஆலாபனை கவர்ந்திழுத்துவிடும்.

இவை மட்டுமன்றி தாம் இசைக்கின்ற சூழலிற்கேற்ப கர்நாடக இசை வழுவாத மெல்லிசைப் பாடல்களையும் கச்சேரிகளில் இணைத்துக்கொள்வதால் பல்வேறு தரப்பினரிடையேயும் வரவேற்பைப் பெற்றவர். தனது பெயரை ஞாபகப்படுத்தும் 'கானமூர்த்தி' இராகத்தினை வாசிப்பதில் அவருக்கு நிகர் அவரேதான்.

திருமண நிகழ்வு என்றாலே கானமூர்த்தி பஞ்சமூர்த்தியின் நாதஸ்வரம் தான் என்று கூறுமளவிற்கு அவர்களது இசை அனைவரையும் கவர்த்திழுக்கக் கூடிய தனித்துவம் மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். இந்தியாவின் சேதுராமன், பொன்னுச்சாமி சகோதரர்கள் எவ்வாறு சிறப்பிடம் பெற்றிருந்தனரோ அதைப் போன்று இலங்கையில் இவர்கள் இருவரும் இணைந்து கானமழையில் மக்களை நனைய வைத்தனர்.

நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆலயங்களில் மட்டுமன்றி, சிங்கப்பூர், மலேசியா, கனடா, லண்டன் போன்ற நாடுகளில் உள்ள ஆலயங்களிலும் வாசித்து இவர் பெற்றுக் கொண்ட பாராட்டுகளும் பட்டங்களும், பதக்கங்களும் எண்ணிலடங்கா. எம்மண்ணை விட்டு அந்நிய தேசத்தை நோக்கி எம் கலை ஞர்கள் சென்றுகொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் எம்மண்ணைவிட்டு நீங்காது கடந்த 45 ஆண்டுகளிற்கும் மேலாக இம்மண்ணில் இசைத்தொண்டாற்றி எமக்குப் பெருமை சேர்த்த கானமூர்த்தி அவர்களின் மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி கலை உலகத்தினாலும் ஈடு செய்யமுடியாதது. இச்சிறப்புறு கலைஞனின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்போம்.

## கானமழை பொழிந்த கானமூர்த்தி ஈழத்தமிழரின் பெரும் இசைச் சொத்து

யாழ்ப்பாணத்தின் கலைச் சிறப்புகளை இந்த நூற்றாண்டில் புகழோடு பரப்பி உலகத் தமிழ் மக்களது உள்ளத்தில் நீங்காத இடம் பெற்ற நாதஸ்வர இரட்டையர்கள் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி. இவர்களில் மூத்தவரான கானமூர்த்தி இசையில் அபார ஞானமிக்க தலைசிறந்த நாதஸ்வர கானத்தின் மூர்த்தியாக கடந்த ஐந்து தசாப்தங்களாக ஈழம் உட்பட நம் தமிழர் வாழ் அனைத்து இடங்களிலும் தமது கானத்தை வரையாது வழிவழியாக வழங்கியவர்கள். சமகாலத்தில் அவர்களது இசைச்செயற்பாடுகள் நம் மக்களால் பெரிதும் போற்றப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இவர்களிருவருக்கும் நடந்த மிகப்பெரிய பாராட்டு விழா இன்றும் பசுமையாக உள்ளது.

1988ஆம் ஆண்டு கிளிநொச்சி அருள் மிகு கந்தசாமி கோயிலில் எனது இசையரங் கிற்கு முன்னதாக அளவெட்டி நாதஸ்வர மேதைகள் பாலகிருஷ்ணன், சிதம்பரநாதன், கேதீஸ்வரன், இணுவை நாதஸ்வர மேதை கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினர், மாவை நாதஸ்வரமேதை ஸ்ரீ சண்முகநாதன் குழுவினர் மத்தியில் நமது அன்புக்கினிய கோண்டாவில் நாதஸ்வர பூபதிகள் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி (அப்போது வயது 40 வரை இருக்கலாம்) கானமூர்த்தி இராகத்தில் பல்லவி தொடர்ந்து 5 மணிநேரம் இடைவிடாத இசைமழை பொழிந்தனர். தவில் மாமேதைகள் இணுவில் என்.ஆர்.சின்னராசா, கே.ஆர்.புண்ணியமூர்த்தி, கே.நித்தியானந்தம், எஸ்.சிவகுமார், அளவை என்.குமரகுரு இன்னும் நாச்சிமார்கோயிலடி மாமேதை கணேசபிள்ளை இவர்கள் இணைந்த இசைமழை. இவர்களது வாசிப்பிற்கு ஈடு இணையில்லை. மக்கள் வெள்ளம் ஆனந்தக்கூத்து இவை முடிவுற்றதும் அதிகாலை 1-4 மணிவரை எமது நிகழ்வு இசைப்பேரறிஞர் வி.கே.குமார சாமி - வயலின், பேரறிஞர் கோண்டாவில் சந்தான கிருஷ்ணனன் - மிருதங்கம், நாச்சி மார்கோயிலடி தவில்மேதை கணேச பிள்ளை - கஞ்சிரா, வித்வான் இராசா - முகர் சிங், ஏ.சிவகுருநாதன் - கடம், நாச்சிமார் கோயில் சண்முகலிங்கம் - தம்புரா அனைத்து நாதஸ்வர தவில் மேதைகளும் நிறைந்திருந்தனர். கச்சேரியில் நான் பாடிய பைரவி உருப்படியை அபாரமாகப் புகழ்ந்து

**சங்கீத கலாநிதி நா.வி.மு.நவரட்ணம்,**
**ஏந்த இசைப் பேராசான்**
**(யாழ்.பல்கலைக்கழகம்)**

என்னைக் கட்டித் தழுவிய அந்த கானத்தின் மூர்த்தியை, யாழ்ப்பாணம் ஏன் உலக தமிழினம் இன்று இழந்து தவிக்கின்றது. அவரது அருமை தம்பிக்கும் அருமை மனைவி, குழந்தைகளுக்கும் அன்பினிய மருகர் பாலமுருகனுக்கும் இசைமேதை கே.ஆர்.சுந்தரமூர்த்தி சமூகத்தினருக்கும் இசையின் மாபெரும் வளாகமாக விளங்கும் அவர்களது இசைப்பாரம்பரியத்தினர்களுக்கும் எமது இராமநாதன் நுண்கலை வளாகத்தின் சார்பிலும் யாழ்.பல்கலைக்கழகம் சார்பிலும் யாழ்ப்பாண தமிழிசை சங்க சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் பூதவுடல் மறைந்தாலும் கானமூர்த்தியின் புகழ் உடல் யாழ்ப்பாணம் மற்றும் உலகத் தமிழர் வாழும் வரை நிலைக்கும் என நாதப் பிரமமான இறைவனைப் பிரார்த்திப் போமாகா.

# அணுசக்தி ஒப்பந்தம் இந்தியாவை அமெ. தொழுவத்தில் கட்டிப்போடுமா?

முப்பத்து நான்கு ஆண்டுகளாகச் சர்வதேச அரங்கில் தனிமைப் பட் டிருந்த இந்தியா இப்போது அதிலிருந்து விடுபட்டுள்ளது. அணு விநியோகிக்கும் நாடுகளின் ஒப்புதலை இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் பெற்றிருப்பதே அதுவாகும். இது ஒரு மாபெரும் சாதனை என இந்திய அரசு தற்போது மார்தட்டிக் கொண்டிருக்கிறது.



ஆனால் இந்தியாவின் இடதுசாரிகளும் பாரதிய ஜனதாக் கட்சியும் இதனை ஓர் அப்பட்டமான சரணாகதி எனக் குற்றஞ்சாட்டியுள்ளன.

எது எப்படியோ இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் இப்போது ஏறத்தாழ நிறைவேறிவிட்டது எனலாம். அமெரிக்கக் காங்கிரஸின் ஒப்புதல் கிடைக்கும் என்பதும் லேசாகத் தென்படுகிறது அத்துடன் அது முற்றுப் பெற்றுவிடும்.

இம்மாதம் அமெரிக்கா செல்லும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும் 25ஆம் திகதி சந்தித்துப் பேசவுள்ளனர். அதன்போது இந்த அணுசக்தி ஒப்பந்தமும் கைச்சாத்தாகும் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச அணுசக்திக் கழகத்தின் ஒப்புதல் கிடைத்ததற்குப் பின்னர், அணு விநியோக நாடுகளின் (என்.எஸ்.ஜி) அங்கீகாரத்தைப் பெறுவதுதான் மிகப் பெரும் சவால் எனக் கூறப்பட்டது. பயந்தது போலவே அணுவிநியோக நாடுகளில் சில அதற்கு முட்டுக்கட்டை போட்டன. ஒகஸ்ட் மாதத்தில் நடந்த கூட்டம் முடிவு எதுவும் அறிவிக்கப்படாமல் முடிந்தது. செப்ரெம்பர் (இம்மாதம்) கூட்டமும் பயன் தரவில்லை.

இதற்கிடையில் அமெரிக்க அரசின் இரகசியக் கடிதப் போக்குவரத்து அம்பலத்துக்கு வந்தது. இதனால் அணுசக்தி ஒப்பந்தமே கேள்விக் குறியாக மாறியது. எனினும் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் நடைபெற்ற பேரங்கள், பேச்சுவார்த்தைகள் ஆகியவற்றின் பின்னர் இப்போது அணு விநியோக நாடுகள் நிபந்தனையற்ற ஒப்புதலை வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளன.

அணு விநியோக நாடுகளுக்கிடையே சுற்றுக்கு விடப்பட்ட அறிக்கை இரண்டே இரண்டு பக்கங்களைக் கொண்டதுதான். ''அணு ஆயுதப் பரவலைத் தடுக்கவேண்டும் என்ற சர்வதேச நாடுகளின் உறுதிப்பாட்டுக்கு ஏற்பவும் மேலும் அணு ஆயுதங்கள் பரவாமல் தடுக்கவும் அமைதி நோக்கத்துக்காக அணுசக்தி தொடர்பான தொழில்நுட்பத்தைப் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் இந்தியாவின் எரிசக்தி முடிவும் தேவைகளை நிறைவேற்றவும் இந்த விதிவிலக்கு இந்தியாவுக்கு அளிக்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சம்மதம் கிடைக்காத சங்கடம்

அணுவிநியோக நாடுகளின் குழுவில் இந்தியா இடம்பெறாத நிலையில், இந்திய வெளியுறவு அமைச்சின் மூலம் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளே இந்திய அரசின் நிலைப்பாடாக எடுத்துக் கொள்ளப்பட்டன. கடந்த 5ஆம் திகதி இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி வெளியிட்ட அறிக்கை அணுவிநியோக நாடுகளின் கூட்டறிக்கையில் ஒரு அம்சமாக சேர்த்துக் கொள்ளப்பட்டு, இந்தியாவுக்கு விதிவிலக்கை அளிக்கலாம் என அமெரிக்க உள்ளிட்ட நாடுகள் வாதிட்டன. அப்போதும் கூட ஆஸ்திரேலியா, நியூசிலாந்து உட்பட ஆறு நாடுகள் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

''அணு விநியோக நாடுகளின் குழுவில் எந்தவொரு முடிவும் கருத்தொற்றுமையின் அடிப்படையிலேயே எடுக்கப்படவேண்டும். பெரும்பான்மை ஆதரவின் அடிப்படையிலோ, வாக்கெடுப்பின் மூலமோ எந்த முடிவையும் எடுக்க முடியாது'' என்று அதன் விதிகள் கூறுகின்றன. எனவேதான் கருத்தொற்றுமையை ஏற்படுத்துவதற்கு இவ்வளவு தூரம் சிரமப்பட வேண்டியதாயிற்று.

### உள்முற்றத்திலும் இடம்பெற்ற சரிப்படுத்தல்கள்

அணுவிநியோக விதி விலக்குக் கிடைப்பதற்கு இப்போது அக்குழுவின் தலைமைப் பொறுப்பில் உள்ள ஜேர்மனி கொடுத்த ஆலோசனைகள்தான் முக்கிய காரணம். இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்கி ஒரு அறிக்கை வெளிவிட வேண்டும் என்ற ஆலோசனையை ஜேர்மனியைச் சேர்ந்த விக்டர் எப்லிங் என்பவர் முன்வைத்திருந்தார். அதனடிப்படையில், இந்திய வெளியுறவுச் செயலர் சிப்சங்கர் மேனனால் தயாரிக்கப்பட்டு பிரணாப் முகர்ஜின் பெயரில் வெளியிடப்பட்டு அணு விநியோகநாடுகளின் கூட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதுவரை எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருந்த நாடுகளைச் சமாதானப்படுத்துவதற்கு அந்த அறிக்கையை அமெரிக்கா பயன்படுத்தியது. அதன்பின்னர் அந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருந்த வாக்குறுதியை அணுவிநியோக நாடுகளின் சார்பில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையின் ஓர் 'நிபந்தனைக்குரிய' அம்சமாக சேர்ப்பது என முடிவு செய்யப்பட்டு, அதற்கான வாசகங்கள் தயாரிக்கப்பட்டன. அந்தக் கூட்டறிக்கையில் மொத்தம் ஐந்து பத்திகள் இடம் பெற்றுள்ளன. அதில் இரண்டாவது பத்தியின் உட்பிரிவாக ஏழு அம்சங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

சிவில் நோக்கத்துக்கான அணு உலைகளைத் தனியாகப் பட்டியலிட்டு, அதை சர்வதேச அணுசக்திக் கழகத்திடம் ஒப்படைப்பது, அதன் ஒப்புதலைப் பெறுவது, சர்வதேச அணுசக்திக்கழகத்தோடு மேலதிக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வது, அணுச்[illegible] சுழற்சி தொழில்நுட்பங்களை வேறு எந்த நாட்டுக்கும் வழங்குவதில்லை என்று ஒப்புக்கொள்வது, அணுசக்தி சார்ந்த தொழில்நுட்பங்களையோ, பொருள்களையோ பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில்லை என உறுதியளிப்பது, அணுவிநியோக நாடுகளின் விதிமுறைகளை ஏற்றுச் செயற்படுவது ஆகிய ஆறு அம்சங்களோடு ஏழாவதாக பிரணாப் முகர்ஜியின் பெயரில் வெளிவந்த அறிக்கையின் வாசகமும் உள்ளடக்கப்பட்டது.

''அணுகுண்டு வெடிப்புச் சோதனை செய்வதில்லை என்ற இந்தியாவின் சுயகட்டுப்பாட்டை அது தொடர்ந்து பின்பற்றுவது, அணு ஆயுதப் பொருள்களை உற்பத்தி செய்வதில்லை என்ற நிலையை மற்ற நாடுகளோடு இணைந்து ஒரு ஒப்பந்தமாக ஏற்படுத்துவதற்குப் பாடுபடுவது'' என அந்த வாசகம் வடிவமைக்கப்பட்டது.

அணுகுண்டுச் சோதனை செய்தால் உடனடியாக அணுசக்தி ஒப்பந்தம் இரத்தாகிவிடும் என்ற ரீதியில் கூட்டறிக்கை வாசகம் இருக்க வேண்டும் என்பதுதான் எதிர்ப்புத் தெரிவித்த நாடுகளின் கருத்தாக இருந்தது. கூட்டறிக்கையின் வாசகம் மேலே கூறப்பட்டது போல வடிவமைக்கப்பட்ட பின்னர் அமெரிக்கா, ''மேற்சொன்ன வாசகம் இந்தியா அணுகுண்டுச் சோதனை செய்வதற்கு தடைவிதிக்கின்ற ஒன்றுதான்'' என்ற விதத்தில் எடுத்துச் சொல்லி அந்த நாடுகளைச் சம்மதிக்க வைத்தது.

### அமெரிக்காவின் உள்நோக்கம்

இந்தக் கூட்டறிக்கை வெளியான பின்னர் அமெரிக்காவில் உள்ள ஆயுதக்கட்டுப்பாட்டு அமைப்பின் பொறுப்பாளர் டாரில் ஜி.கிம்பல் என்பவர் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டார். 'எதிர்வரும் காலங்களில் அணு ஆயுதப் பரவல் தடைமுயற்சிகளுக்கு இந்த ஒப்பந்தம் பெரிய அளவில் சேதத்தை ஏற்படுத்தும்' என்று அவர் கண்டனம் தெரிவித்தார். சி.டி.பி.டி. எனப்படும் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் 179 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. இந்தியா அதில் கையெழுத்திடவில்லை. அது தொடர்ந்து அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது இந்தியா வழங்கியுள்ள வாக்குறுதி சி.டி.பி.டி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள பிற நாடுகளைப் போல அதைச் சட்டரீதியாகக் கட்டுப்படுத்துமா? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அணு விநியோக நாடுகளில் சில இதனைக் குறிப்பிட்டு எதிர்ப்புத் தெரிவித்தபோது, புஷ் நிர்வாகம் அந்த நாடுகளின் வாயை அடைத்துவிட்டது. இது மிகவும் துரதிஷ்டவசமானது என அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அணுவிநியோக நாடுகளின் கூட்டறிக்கை வெளியிடப்பட்டதோடு அந்தக் குழுவில் இடம் பெற்றுள்ள ஆஸ்திரியா, சீனா, ஜேர்மனி, ஜப்பான், நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகள் தத்தமது நாடுகளின் சார்பில் தனித்தனியே அறிக்கைகள் வெளியிடப்பட்டதையும் கிம்பல் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதை வைத்துப் பார்த்தால் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது நிபந்தனையற்ற விதிவிலக்கு அல்ல என்பது தெளிவாகின்றது. இந்த அறிக்கையில் உண்மை என்னவெனில், அணுவிநியோகக் குழுவில் உள்ள அனைத்து நாடுகளும் இந்தியாவுடன் முழுமையான அணுசக்தி வர்த்தகத்தில் ஈடுபடப் போவதில்லை. அணுகுண்டு வெடிப்புச் சோதனையை இந்தியா செய்தால் இந்த நாடுகள் இந்தியாவோடு அணுசக்தி வர்த்தகத்தை முறியடித்துக் கொள்ளும் - என்றும்கிம்பல்குறிப்பிட்டுள்ளார்.



இதனிடையே-

ஒட்டுமொத்த தேசிய நலனைக் கருத்திற் கொண்டு, இந்தியா அணுகுண்டுச் சோதனை நடத்துவதை யாரும் தடுத்து நிறுத்தி விடமுடியாது என முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தெரிவித்துள்ளார். இந்தியாவின் தேவையைக் கருத்தில் கொண்டு, சர்வதேச அளவில், அணுகுண்டுச் சோதனை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் தாராளமாக அந்தச் சோதனையை நாம் நடத்தலாம். எந்த ஒப்பந்தமும் இதனைத் தடுக்காது. இந்திய- அமெரிக்க அணுசக்தி ஒப்பந் தத்தில் இது பற்றிக் குறிப்பிடப்படவில்லை எனவும் கலாம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய மத்தி அரசும் தனது கருத்தை வெளியிட்டிருந்தது. அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டதால், அணுகுண்டுச் சோதனை நடத்த இந்தியாவுக்குத் தடை ஏதும் கிடையாதென மத்திய வெளியுறவுத் துறை ராஜாங்க அமைச்சரும் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளருமான ஆனந்த் சர்மா தெரிவித்திருக்கிறார்.

எப்படியென்றாலும் அடுத்த வாரத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் எதிர்வரும் 25ஆம் திகதி அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்திக்கும் போது இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக அமெரிக்க காங்கிரஸின் ஒப்புதலைப் பெறும் பணியில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசாரைஸ் ஈடுபட்டுள்ளார். இது முழுக்க முழுக்க அமெரிக்காவுக்கு சாதகமான ஓர் ஒப்பந்தமாக இறுதி செய்யப்படப் போகின்றது என்பது தெளிவாகிவிட்டது.

இந்தியாவை உலகின் மைய நீரோட்டத்துக்குள் கலக்கச் செய்துவிட்டோம் என்று பெருமை பாராட்டிக்கொள்கிறார்கள் இந்திய ஆட்சியாளர்கள்.

அமெரிக்காவின் தொழுவத்தில் இந்தியாவைக் கொண்டு போய் கட்டிப்போட்டிருக்கிறார்கள் என்பது இந்த ஒப்பந்தத்தில் உண்மை நிலை என அரசியல் அவதானிகள் பலரும் தெரிவிக்கின்றார்கள்.

**அதிரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையாள மாந்திரீகம்



"நல்லதையே நினைப்போம்! நல்லதையே செய்வோம்!"

1) தொழிலில் வெற்றியின்மை 2) வியாபாரத்தில் விருத்தியின்மை 3) கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு 4) தாம்பத்திய வாழ்க்கையிலுள்ள பிரச்சினைகளுக்கு 5) திருமணம் தடைப்பட்டுக் கொண்டிருத்தல் 6) குழந்தைப் பாக்கியமின்மை 7) வெளிநாடு செல்லத்தடை 8) மனக்குழப்பம் 9) பணமிருந்தும் மன நிம்மதியின்மை 10) கடின உழைப்பிருந்தும் கையில் பணம் தங்காமை 11) படிப்பு, பட்டம் இருந்தும் புகழ்பெற முடியாமை 12) முயற்சி இருந்தும் முன்னேற்றத்தில் தடை 13) சூனியக்கோளாறு, தீய செய்வினைகள் 14) அதிஷ்ட வாழ்வு, சொத்து சேர இன்னும் உங்கள் சகல நிறை, குறைகளுக்கும் என்னை சந்திக்கலாம் 15) காண்ட அடிப்படையில் அக்குவேறு ஆணிவேறாக 331 பக்கம் கொண்ட அவரவர் ஜனன ஜாதகத்தை வாழ்க்கை சித்திரமாக அறிந்து தெரிந்து செயற்பட ஜாதக கணிப்புக்கு மட்டும் கட்டணம் ரூபா 2700/=

குறிப்பு: வாங்கும் பணத்திற்கு உத்தரவாத பண ரசீது கொடுப்பதென்றால் அது எமது நிறுவனம் மட்டுமே!

என்னிடம் தீய மாந்திரீக வேலைகளுக்கு இடமில்லை.

தேசபந்து பேராசிரியர் P.K.SAMY (J.D.G.A.N) J.P. ஐயா
Sri durgadevi manthirika utchada peedam.
No.162, Kotahena Sreet, Mayfield Road, Colombo - 13,
011 2470615, 011 2342463, 011 2342464, Fax 0094 - 11 - 2344831
நுவரெலியாவில் எண் நிறுவனம் துர்க்காதேவி ஆலயம்.
இல.33, கண்டி வீதி, நுவரெலியா 052 2222508.

SMS Service: 0777588405

(ச/554580)


## தமிழ்மொழித் தின விழா

யாழ்ப்பாணம், செப்.14

சரசாலை சரஸ்வதி வித்தியாலய மாணவர்களின் தமிழ்மொழித் தின விழா எதிர்வரும் புதன்கிழமை வித்தியாலய அதிபர் திருமதி தேவேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (202-207)

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சட்டநாதன் பூநாதன்
(யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்)

தோற்றம்: 01.10.1949 மறைவு: 14.09.2001

ஏழாண்டுகள் சென்றாலும் உம்
நினைவுகளை மறக்கமுடியவில்லை!
ஒரு கணம் காட்டாயோ உன் முகத்தை.

95, ஆசிர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.:0779570946 (78428) குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் ஆஸ்தான வித்துவான்
கலாபூஷணம், நாகசுர வித்துவான்
V.K.கானமூர்த்தி அவர்களின்
பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆலய பரிபாலன
சபையின் சார்பில் ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரது ஆத்மா அம்பாளின்
திருப்பாதங்களில் சாந்தியடைய
அம்பாளைப் பிரார்த்திப்போமாக.
ஓம் சாந்தி!

கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள்
ஆலய பரிபாலன சபை. (78433)


## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.14

தென்புலோலி விக்கினேஸ்வரா முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் புலோலி மொறாவில் விநாயகர் ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

புலோலி மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலை அதிபர் கே.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சந்திரயோகன் கலந்து கொள்வார். (202-21)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்குமான அழைப்பு



அமரர் கதிரிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
(தபால், தந்தி, தொலைத்தொடர்புத் திணைக்கள ஓய்வுபெற்ற நிர்வாக உதவி செயலாளர்)

மலர்வு: 06.10.1934 உதிர்வு: 16.08.2008

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் அண்மைக் காலமாக கொழும்பில் வசித்து வந்தவருமாகிய கதிரிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியைக் கேள்வியுற்றதும் நேரில் வந்தும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும், எமக்கு வேண்டிய உடனடித் தேவைகளை நிறைவு செய்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, எதிர்வரும் (16.09.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்).

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை 15.09.2008 திங்கட்கிழமை வல்வெட்டி இல்லத்திலும் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

20-1/2, ருத்ரா மாவத்தை,
வெள்ளவத்தை,
தொ.இல.2501301.

மருதடி வீத்தனை லேன் (தூபி வீதி),
வல்வெட்டித்துறை.
021-226 3327.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(சி/554633)

## தேவை

ஓலைச்சார்வு தேவை.
அண்ணா தொழிலகம்
துரை வீதி, இணுவில்.
(சி/554636)

## வான் விற்பனைக்கு

252 XXXXதொடரிலக்கமுடைய ரவுனேஸ் (TOWNACE) வான் விற்பனைக்கு உண்டு. 14.09.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிப 2.00 மணி வரை பார்வையிடலாம்.

தொடர்பு:-
இல, 160(பழைய இலக்கம் 54),
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(78409)

## மணமகள் தேவை

வடமராட்சி வடமேற்கு, படித்த கௌரவ குடும்பம், அச்சுவினி நட்சத்திரம், TECHNICAL OFFICER (OPEN UNIVERSITY ENGINEERING FINAL) எட்டில் செவ்வாய், கேது, பாவம் முதல் சுற்று 31, மூன்று சுற்றும் 43. 28 வயதிற்கு குறைந்த படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை. முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல: 3139, மே/பா உதயன். (78429)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

நடமாடும் வீட்டு படமாகிப்போன
எம் இதயத் தெய்வத்தின்

மலர்வு 20 * 02 * 1953



உதிர்வு 18 * 08 * 2005

அமரர் கனகரெட்ணம் ஜெயராஜசிங்கம்

திதி: சதுர்த்தசி 14.09.2008

ஐயா, அம்மா இறந்த துயர்
ஆறுமுன்னே எங்களுக்கு அடுத்து வந்த
பேரிடியோ அவலாக வேகுதைய்யா
இம்மாநிலத்தில் நாமமைத்த
கற்கோட்டை கண்ணிமைக்கும்
முன்னாலே கற்குவியல் ஆனதைய்யா
நல் குடும்பம் துலங்க வைத்த
நாயகரே எம்மைத் தனிமையுற
வைத்துவிட்டு எங்குதான் சென்றீரோ?

இல.71, அரசவீதி,
நல்லூர்.
(78410)

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

## தவறிவிட்டது

கல்வளை வீதி, சண்டிலிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுந்தரராஜன் என்பவரது தேசிய அ.அட்டை (720631768V), விசேட அ.அட்டை என்பன மருதனார்மடம் சந்திக்கும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்


## IMS
Market Lane, Manipay

புதிய பிரிவுகள் ஆரம்பம்

* MS. Office.
* Visual Basic.
* Oracle 8i.
* Computer Hard Ware.
* DTP.
* Java.
* C++.

1500/=

10.09.08 தொடக்கம் 10.10.08 வரை
அனைத்துப் பாடநெறிகளுக்குமான கட்டணம் 1500/= மட்டுமே. (பதிவுகளுக்கு முந்துங்கள்).

Institute of Micro Systems
(78398)


## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுய தெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ் பூத்த சுய தெரிவு முறை முன்னோடி, தனி மனித நிறுவுநர். சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துனர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்க. கொழும்பு நேரடி தொலைபேசி - 2360488, 2360694, 4873929.

# நன்றி ஆராதனை அழைப்பும்
## நன்றி நவிலலும்



போதகர் வண.
பேதுருப்பிள்ளை
இக்னேஷியஸ் டேவிட்

'நீதிமான்களின் மரணம் - நினைவு கூரப்பட வேண்டியதே'

கடந்த 13.08.2008இல் கர்த்தருக்குள் நித்திரை அடைந்த போதகர் வண. பேதுருப்பிள்ளை இக்னேஷியஸ் டேவிட் அவர்களுக்கு சென்றல் நேசிங் ஹோமிலும், யாழ்.போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் அனுதாபங்களைத் தெரிவித்து உதவிகளும் செய்த அகில உலக அப்போஸ்தல குடும்பத்தினர், இதர சபைகளின் குடும்பத்தினர், பற்பல முறையிலும் உதவி புரிந்தவர்கள், மலர்வளையம் வைத்தவர்கள், நேரிலும் தொலைபேசி, தொலைநகல் மூலமும் விசாரித்து ஆறுதல் கூறியவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கடிதம் மூலம் ஆறுதல் கூறிய யாவருக்கும் நன்றி கூறுவதோடு, நாளை (15.09.2008) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.அப்போஸ்தலசபை, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் நடைபெறும் அன்னாரின் வாழ்க்கைக்காக கர்த்தருக்கு நன்றி கூறும் ஆராதனைக்கு வருகை தரும்படி அனைவரையும் அழைக்கின்றோம்.

61, குருசோ வீதி, சுண்டுக்குளி.
தொ.பே. 077 6406910

மனைவி ருத்தும்,
குடும்பத்தினரும்,
அப்போஸ்தல சபைச் சமூகமும்.
(78411)

## மணப்பெண்கள் தேவை

1974, கிரகபாவம் 12, ஆசிரியருக்கு தொழிலற்ற அழகிய மணப்பெண்ணும் 1980, கிரகபாவம் 30, ஆசிரியருக்கு தொழிலுள்ள அழகிய மணப்பெண்ணும் தேவை.

தொடர்பு: 077 1619518 (78393)

## மணமகன் தேவை

யாழ். இந்து, அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இலங்கையில் ஆசிரியராக கடமையாற்றி தற்போது Australia வில் குடியுரிமையுடன் வசித்துவரும் 36 வயதுடைய மணமகளுக்கு நன்கு படித்த தகுந்த மணமகனை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ தேடுகின்றார்கள்.

தொடர்பு:-
அவுஸ்திரேலியாவில்: 0061425290426
(சி/554625)

# மரண அறிவித்தல்



## நடராசா சத்திராஜ்

அச்செழு, விதானை வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சத்திராஜ் (10.09.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா -மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- தங்கம்மா தம்பதியரதும் காலஞ்சென்ற கனகசபை- செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரதும் பேரனும் கோபிகரன் (லண்டன்), தயாகரன் (பிரான்ஸ்), அமரர் சிவாகரன் மற்றும் நவகரன் (கனடா), கருணாகரன், சுசிகரன் (மலேசியா), மதுரா (கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி), சுமித்திரா, கசகரன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற மகேஸ்வரன், சங்கரப்பிள்ளை மற்றும் சறோஜினிதேவி, சாந்தினிதேவி ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - பரமேஸ்வரி, பஞ்சலிங்கம் மற்றும் லலிதா (லண்டன்), தியாகலிங்கம் - பவானி (ஆசிரியை, யா/சைவத் தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்), சுந்தரலிங்கம் - யோகேஸ்வரி (ஜேர்மனி), அமிர்தலிங்கம் - கலாவாணி, யோகலிங்கம் (முகாமையாளர், எரிபொருள் நிலையம், கோப்பாய்), அருந்ததி (ஆசிரியை, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் மருமகனும் கனகராஜ் (லண்டன்), லோகினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் கேதீஸ்வரன் (கனடா), கோணேஸ்வரி (நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்), யோகேஸ்வரி (ஜேர்மனி), பேரானந்தமூர்த்தி (மதுர் டீசல் எஞ்சினியேர்ஸ், சுன்னாகம்), கிருபேந்திரமூர்த்தி (ரதன் பான்சி கவுஸ், பருத்தித்துறை), கவிதா (லண்டன்), மீரா (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.09.2008) வியாழக்கிழமை அச்செழு இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விதானை வளவு,
அச்செழு,
நீர்வேலி. (78431)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு விளக்கமளிக்க நல்ல வாய்ப்பு

இலங்கையில் ஈழத் தமிழினம் ஒரு வரலாற்றுத் திருப்புமுனையில்-முக்கிய காலகட்டத்தில்-நிற்கின்றது.

ஈழத் தமிழரின் தாயக பூமியான வன்னி மண் மீது மிகக் கொடூரப் போர் தொடுக்கப்பட்டிருக்கின்றது. 'பயங்கரவாதத்தை அழித்தல்' என்ற பூச்சோடு 'மனிதாபிமானப் போர்' எனும் நாமத்தில் குரூரமான யுத்தம் ஒன்றைத் தமிழர் தாயக மண் மீது கொழும்பு தொடுத்திருக்கின்றது.

இந்தப் படுபயங்கரமான யுத்தத்தில் சிக்கி சுமார் இரண்டு லட்சம் மக்கள் ஏதிலிகளாகியிருக்கும் இச்சமயத்தில், அந்த மக்களின் அவசர- அவசிய- மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்து வந்த ஐ.நா. அமைப்புகள், சர்வதேச-உள்நாட்டு தொண்டர் அமைப்புகள் போன்றவற்றையும் அவற்றின் தொண்டுப் பணியாளர்களையும் அங்கிருந்து வெளியேறுமாறு ஓர் அதிரடி உத்தரவு போட்டதன் மூலம் வன்னி மக்களின் நிலைமையைப் படுமோசமாக்கியிருக்கின்றது கொழும்பு.

சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் வன்னியிலிருந்து வெளியேறிய பின்னணியில் அந்தப் பிரதேசம் மீது-குறிப்பாக மக்கள் குடியிருப்புகள் மீது பரவலான- கண்மூடித்தனமான-குண்டுவீச்சுகளும் விமான, ஷெல் தாக்குதல்களும் மிக மோசமாகவும் கொடூரமாகவும் இடம்பெறலாம் என்ற அச்சம்-பெரும் பீதி-நிலவுகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான், பிரிட்டனின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மலோச்பிறவுண்-லண்டனில் ஹரோவில் நாளை பிரிட்டனில் வசிக்கும் ஈழத் தமிழ் சந்ததியினரைச் சந்தித்து உரையாடவிருக்கின்றார்.

பிரிட்டனில் ஈழத்தமிழர்களுக்காக குரல் எழுப்பி வரும்-மேற்கு ஹரோ பிரதேச எம்.பியான-கரித் தோமஸின் அழைப்பின் பேரில் கூட்டப்பட்டுள்ள இந்தச் சந்திப்பில், இலங்கை விவகாரத்தில் அதிக ஈடுபாடு காட்டிவரும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் இவான்ஸும் கலந்து கொள்ளவிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் நிலைமைகளை நேரடியாகக் கண்டறிவதற்காக அண்மையில் இலங்கை வந்து மீண்ட ஐரோப்பிய பிரதிநிதிகள் குழுவில் இவான்ஸும் ஒருவர் என்பதும்-

இங்குள்ள நிலைமைகள் குறித்து இவான்ஸ் தெரிவித்த கருத்துகள் இலங்கை அரசுத் தரப்புக்குப் பெரும் கசப்பு மருந்தாக அமைந்தன என்பதும்-குறிப்பிடத்தக்கவை.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் மலோச் பிறவுணே பிரிட்டனின் சார்பில் ஆபிரிக்க மற்றும் இலங்கை உட்பட ஆசிய நாடுகளின் உறவு விவகாரங்களையும் கையாள்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொடர்பாக ஐரோப்பிய நாடுகளின் கொள்கை அல்லது நிலைப்பாட்டை வகுப்பதில் நாளைய சந்திப்பு காத்திரமான பங்களிப்பை ஆற்றக் கூடியது எனச் சம்பந்தப்பட்டோர் கருதுகின்றமையால் இச்சந்திப்பு இக்கட்டத்தில் மிக முக்கியமானதாகின்றது.

'ஜி.எஸ்.பி.பிளஸ்' என்ற ஏற்றுமதிக்கான வரிச் சலுகை உட்பட பல்வேறு பொருளாதார சகாயங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பல நிபந்தனைகளை வரியாக விதித்து வருகின்றன. அவை பெரும்பாலும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்டவை என்பது நமக்குத் தெரிந்ததுதான்.

அத்தோடு, இலங்கையின் யுத்த பூமியில் போரினால் ஏற்பட்ட பேரழிவுப் பாதிப்புகளில் சிக்கி, ஏதிலிகளாக அலைவோருக்கு சர்வதேச மனிதாபிமானப் பணிகள் கிட்டுவதற்கான வாய்ப்பளிக்கப்பட வேண்டும். மனிதநேயப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்கு இடையூறுகள், கட்டுப்பாடுகள், மட்டுப்படுத்தல்கள், மறிப்புகள் எவையுமின்றி சுதந்திரமாகச் சென்று வர அனுமதிக்கப்பட வேண்டும் என்பவை போன்ற நிபந்தனைகளும் அதில் அடங்கியிருந்தன.

ஆனால் இந்த நிபந்தனைகளை எல்லாம்ஒரேயடியாக உதாசீனம் செய்து, புறம்தள்ளிவிட்டு, தன்னுடைய ஆக்கிரமிப்பு அராஜகத்தையும், அரச பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது கொழும்பு ஆட்சிபீடம்.

தமிழர் தாயகத்தில் கொடூர மனித உரிமை மீறல்கள் தொடர்கதையாக இடம்பெறுகின்றன. அங்கு போரில் பாதிப்புற்ற அகதிகளுக்கு-பல லட்சம் பேருக்கு- மனிதாபிமான உதவிகள் சென்றடைவதைத் தடுக்கும் நோக்கில் மனிதநேயப் பணியாளர்கள் தடுக்கப்பட்டுள்ளனர். இது சர்வதேச அனுசரணை விதிகளை மீறும் கொடூர நடவடிக்கையாகும்.

இதற்கு எதிராக பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளும் சர்வதேச சமூகமும் கிளர்ந்தெழ வேண்டிய இக்கட்டு நிலைமை வந்து விட்டது.

அதை பிரிட்டனுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் புரிய வைத்து விளங்கப்படுத்தும் ஒரு முயற்சியாக நாளைய லண்டன் கூட்டம் அமைய வேண்டும். சம்பந்தப்பட்டோருக்கு இத்தகவல் அர்ப்பணம்.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.14

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய ஆட்டத்தில் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் வி.கவும் தாவடி காளியம்பாள் வி.கவும் மோதவிருக்கின்றன.

சங்கத்தின் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார். (1)

* * *

சங்கானை கல்விக்கோட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட் டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணி களின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

* மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.
* சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.
* வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் சித்தன்கேணி சிறிகணேசா வித்தியாலயம்.
* அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை எதிர் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம்.
* அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை எதிர் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

* சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி எதிர் அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை.
* சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி எதிர் அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை.

**18 வயதுப் பிரிவு**

சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி எதிர் பண் ணாகம் மெய்கண்டான் மகாவித்தி.

* வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி.

# சிலுவையே ஜெயம்

கோயில்கள், மாடிவீடுகள், மண் குடிசைகள் எங்குபார்த்தாலும் திருச்சிலுவையைக் காணலாம். இச்சிலுவை அடையாளத்தை நாம் எமது நெற்றியிலும் நெஞ்சிலும் வரைந்து கொள்கின்றோம். ஏன் கழுத்தில் கூடக் கட்டிக் கொள்கின்றோம். முக்கிய நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும் முடிவிலும் சிலுவை அடையாளம் வரைந்து கொள்கின்றோம். அடிமைகளின் கொலைக் கருவியான சிலுவை ஆராதனைக்குரிய அரும் பொருளானது ஆண்டவர் அதில் மரித்து உயிர்த்ததினால் தான். ஆண்டவர் சிலுவையில் உயர்த்தப்பட்டார். அதனால் சிலுவைய்யும் உயர்வு பெற்றது.




சிலுவையின்றி கிறீஸ்தவம் இல்லை. ஈடேற்றமும் இல்லை. துன்பத்தின் வழியாகவே மனித இனம் மீட்புப்பெற வேண்டும் என்று இறைவன் விரும்பினார். எனவே இயேசு தன்னை தாழ்த்தினார். சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்டார். அதனால் மனிதனை மாண்புறச் செய்தார் அதில் வெற்றியும் கண்டார்.

''சிலுவையின் பெயர் உடலில் இருந்து மட்டுமன்றி எண்ணத்திலும் இருந்தும், உரோமைக்குடிமகனின் பார்வை, கேள்வி அனைத்திலிருந்தும் அகன்று நிற்கட்டும்'' என்று சிலுவை மீது தனக்குள்ள வெறுப்பை வெளியிடுகிறார் ஒரு உரோமைக் குடிமகன். இஸ்ராயேல் மக்கள் எகிப்து நாட்டிலிருந்து திரும்பும்பொழுது இறைவனுக்கும் மோயீசனுக்கும் எதிராகப் பேசியதால் கொள்ளிவாய்ப் பாம்புகளால் கடியுண்டு இறந்தனர். மோயீசன் அவர்களுக்காகப் பரிந்து பேசியதால் வெண்கலத்தால் செய்யப்பட்டு விண்ணிலே உயர்த்தப்பெற்ற பாம்பைப் பார்த்தவர்கள் காப்பாற்றப்பட்டனர். சிலுவையில் தொங்கும் இயேசுவின் விசுவாசம் கொண்டு அவரின் பாதுகாவலைத் தேடுவோர் மீட்கப்பெறுவர் என்பதன் முன் அடையாளமே இந்நிகழ்ச்சி. சிலுவையின் அற்புத சக்தியை ஆண்டவரே குறிப்பிடுகிறார். ''நானே உலகினின்று உயர்த்தப் பெற்ற பின் அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன்''. (அரு 12:8) ''கடவுளின் வல்லமையால் உயர்த்தப் பெற்ற அவர் வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியைத் தந்தையிடமிருந்து பெற்றுப் பொழிந்தருளினார்'' (அ.ப.2:33) ''ஆதலால் தான் கடவுள் அவரை எல்லோருக்கும் மேலாக உயர்த்தி எப்பொழுதும் மேலான பெயரை அவருக்கு அருளினார் (பிலி2:9). உயர்த்தப்பெற்ற வெண்கலப் பாம்பை பார்த்தவர் சாவுக்குத் தப்பினர். மாட்சிமையில் வீற்றிருக்கும் இயேசுவை நோக்குவர் நித்திய சாவினின்று மீட்புப் பெறுவர். மீட்பு வரலாற்றில் தவிர்க்க முடியாதது சிலுவை.

எனவே நாமும் சிலுவையை அணிவதோடு மட்டுமல்லாமல் வாழ்வில் வரும் சிலுவையையும் பொறுமையோடு சுமக்க வேண்டும். ஏனெனில் சுமைசுமந்து சோர்ந்திருப்போரே எல்லாரும் என்னிடம் வாருங்கள் என்று அன்பின் இறைவன் கூறியிருக்கிறார்.

மனவல்தாசன்.

# வலயக் கல்விப் பணிப்பாளர்களின் இடமாற்றம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிப்பு

யாழ்பாணம், செப்.14

வலிகாமம் மற்றும் வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இடமாற்ற உத்தரவு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று ஈ.பி.டி.பியின் யாழ்.அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கல்வி வலயப் பணிப்பாளர்களின் இடமாற்ற உத்தரவை ரத்துச் செய்யுமாறு வலிகாமம் வடக்கு, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை மற்றும் வடமராட்சி கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இடமாற்ற உத்தரவு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது என்று அச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# தமிழ் மக்களின் விடுதலை உணர்வை எந்தச் சக்தியாலும் தகர்க்க முடியாது என்பதற்கு வவுனியாத் தாக்குதல் அத்தாட்சி

## அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்

கிளிநொச்சி,செப்.14

எந்த வல்லாதிக்க சக்திகள் எமது போராட்டத்துக்கு எதிராக சிங்கள அரசாங்கத்துக்கு உதவி புரிந்தாலும் எந்தச் சக்தியாலும் எமது மக்களின் விடுதலை உணர்வை தகர்க்க முடியாது என்பதற்கு வவுனியா படைத்தளம் மீதான தாக்குதல் ஓர் எடுத்துக் காட்டாகும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

வவுனியா படைத்தள அழிப்பில் வீரகாவியமான கரும்புலி மாவீரர்களின் வீர வணக்கக் கூட்டத்தில் பேசுகையிலேயே அரசியல்துறைப் பொறுப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

வீர வரலாறு படைத்த கரும்புலிகளுக்கு தனி வரலாறு உண்டு. எமது விடுதலை போராட்டத்தில் நெருக்கடியான காலகட்டங்களில் நெருக்கடிகளை உடைத்தெறிந்து விடுதலைப் போராட்டத்தை முன்நகர்த்திச் செல்வதில் இக் கரும்புலி மாவீரர்களுக்கு பெரும்பங்கு உண்டு.

இக் கரும்புலிகள் கொடுத்த அடி சிங்களத்தின் படை இதயத்தில் விழுந்த அடியாகும். எமது மக்கள் மீது வானூர்தி தாக்குதல்களை நிகழ்த்தும் நடவடிக்கைக்கான மையத்தின் மீது விழுந்த அடி இது.

தமிழ் மக்களின் நிலங்களை வல்வளைத்து , தமிழ்மக்களை பிடித்து அடைத்து வதைக்கும் வதை முகாம்களை, புதைகுழிகளைக் கொண்டதுமான படை நடவடிக்கை மையத் தளத்தில் கரும்புலிகள் தமது வீர வரலாற்றை படைத்துள்ளனர்.

எமது வான் படையினை கண்காணிக்கும் தளமாகவும் இது இருந்தது. இத் தாக்குதல் என்பது தமிழின அழிப்புக்கு உலக வல்லாதிக்க சக்திகள் இலங்கை அரசுக்குசெய்கின்ற ஒத்துழைப்புகளை அம்பலப்படுத்தியுள்ளது - என்றார். (அ)



## நாளை

| | |
|---|---|
| ஆவணி 30 | 15.09.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | பூரணை விரதம் |
| | பி.ப. 03.10வரை |
| நட்சத்திரம் : | பூரட்டாதி |
| | மு.இ. 11.50வரை |
| சுபநேரம்: | 12.03 - 01.33 |
| ராகுகாலம்: | 07.33 - 09.03 |

# கீரிமலை தீர்த்தக்கேணியை கட்டுவித்த யாழ்ப்பாண மிட்டாசுக் கடை வல்லிபுரம்

**யாழில் முதன்முதல் தேநீர்ச்சாலை அமைத்தவர் இவரே**

மிட்டாசுக்கடை வல்லிபுரம் அந்தக் காலத்தில் மிகப்பிரபல்யமானவர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியும் காங்கேசன்துறை வீதியும் சந்திக்கும் சந்தி இன்றும் மிட்டாசுக்கடைச் சந்தி என்றே அழைக்கப் படுகிறது. வல்லிபுரம் என்பவர் இந்தச் சந்தியில் (காங்கேசன் வீதி, ஆஸ்பத்திரி வீதிச்சந்தி) மிட்டாய்க் கடை வைத்து வியாபாரம் செய்தமையாலேயே இந்தச் சந்திக்கு மிட்டாசுக் கடைச் சந்தி என்ற பெயர் வந்தது. யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக தேநீர்ச்சாலையை ஆரம்பித்ததுடன் இனிப்பு (மிட்டாய்) உற்பத்தி வியாபாரம் என்பவற்றிலும் ஈடுபட்டார் வல்லிபுரம்.

இந்துக்களின் புனிதஸ்தலமான கீரிமலையைக் கட்டுவித்தவரும் இவரே கடைப்பகுதியில் கங்காசத்திரம் என்ற பெயரில் மடம் ஒன்றைக் கட்டியதுடன் யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலும் கிணறுகளையும் தோண்டுவித்தார்.

1911 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பதினெட்டாம் திகதி வல்லிபுரம் இறைவனடி சேர்ந்தார்.

இந்துக்களின் புனித ஸ்தலமான கீரிமலை யில் கேணியைக்கட்டி யாத்திரிகர்களும் உல்லாசப் பயணிகளும் நீராட வழி வகுத்த வல்லிபுரத்தின் சேவை நமது முன்னோரின் சமூகப் பணிக்கு ஓர் எடுத்துக் காட்டு. இன, மத, சாதி பேத மின்றியாவரும் கீரிமலையில் நீராட வழிவகுத்த வல்லிபுரத்தின் நாமம் என்றென்றும் நிலைத்திருப்பதாக, நிலைத்திருக்கும்.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# குடாநாட்டு விளையாட்டுத் துறையின் புகழை தேசிய ரீதியில் மீண்டும் நிலை நாட்டியுள்ளோம்



குடாநாட்டு விளையாட்டுத் துறையின் புகழைத் தேசிய ரீதியில் நாம் மீண்டும் ஒரு முறை நிலைநாட்டியிருக்கின்றோம்.

இவ்வாறு பெருமிதத்துடன் கூறுகின்றார் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி உடற் பயிற்சி அணியின் தலைவர் ம.சுலக்ஷன்.

பாடசாலைகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் உடற்பயிற்சிப் போட்டியில் மேற்படி கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.. அந்த வெற்றிக்களிப்புடன் நேற்றுமுன்தினம் கப்பலில் குடாநாடு திரும்பிய வீரர்களை சந்தித்து அவர்களின் சந்தோசக் களிப்பினை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக மேற்கொண்ட நேர்காணலின் போதே சுலக்சன் தமது மகிழ்ச்சியை இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மிகவும் சந்தோசமாக இருக்கின்றது ஏனெனில் 23 வருடங்களின் பின் யாழ். மாவட்டத்திற்கும் தீவக மண்ணுக்கும் எமது

ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி உடற்பயிற்சி அணியின் தலைவர் சுலக்ஷன் செவ்வி

அணி பெருமை தேடிக் கொடுத்துள்ளது.

எமது அணியில் உள்ள ஒவ்வொருவரின் உள்ளத்தில் எழுந்த ஆர்வமும் விடாமுயற்சியுமே இந்த வெற்றிக்குக் காரணம். வெற்றி பெற வேண்டும் என்று அவர்களின் மனங்களில் உறையோடிப் போயிருந்த மனப்பாங்கே இந்த வெற்றிக்குக் காரணம்.

எமது விருப்பத்திற்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வவுனியாவில் இருந்து கொழும்புக்கு ரயில் பயணத்துக்கு ஏற்பாடு செய்து தந்திருந்தமை சந்தோசத்தை தருகின்றது. இதுவே எமது முதல் ரயில் பயணம்.

நாங்கள் முதன்முதலாக 2005 ஆம் ஆண்டு தேசிய மட்டப் போட்டிக்கு சென்று இரண்டாம் இடத்தைப் பெற்றோம். இதனை நாம் பெறுவதற்கு முழு மூச்சாக செயற்பட்டவர் பயிற்சியாளர் ஏ.எவ்.எம்.மெடோன். இவரின் நுட்பமான பயிற்சியால் வலுவடைந்ததே எமது அணி. தற்போதும் எமது அணிக்கு இவரே பயிற்சி வழங்கி உள்ளார்.

எமது வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்கிய பழைய மாணவர்களுக்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்-என்றார் அவர். (50-325)

# வெற்றியீட்டிய மாணவர்களுக்கு இராணுவ அதிகாரிகள் தேநீர் விருந்து

யாழ்ப்பாணம், செப்.14

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பல வெற்றி களைப் பெற்றுத் திரும்பிய யாழ். மாணவர்களுக்கு படைகளின் தளபதி தேநீர் விருந்துபசாரம் வழங்கி வரவேற்பளித்தார்.



பாதுகாப்புப் படைகளின் யாழ். தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் ஆலோசனையின் பேரில் 515 ஆவது படைகளின் தளபதி கேணல் ஜே.ஜே. மொகொட்டி தலைமையில் தேநீர் விருந்து பசார நிகழ்வு நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் தெல்லிப்பழையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுமார் நூறு மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (அ-02)

## இனச்சுத்திகரிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்கு - இனத்தை பூண்டோடு அழிக்கும் நடவடிக்கையை- முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது என்பதையே காட்டுகின்றது என விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பிரஸ் தாபிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இனச் சுத்திகரிப்புச் செய்வதற்கு முன்னேற்பாடாகவே அரசாங்கம், சர்வ தேச தொண்டு நிறுவனங்களை வெளியேறுமாறு உத்தரவிட்டிருக்கிறது என்பதே அங்கு வாழும் மக்களின் ஏகோபித்த கருத்தாக உள்ளதாகவும் சமாதானச் செயலகம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஐ.நா.வின் தொண்டு நிறுவனங்களின் முன்னர் முற்றுகையிட்ட மக்களும் இதனையே சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூறியுமிருந்தனர். (அ-02)

## விமானப்படைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியிருந்தது. அந்த ஒப்பந்தம் இன்னும் காலாவதியாகவில்லை.

அந்த ஒப்பந்தம் முடிவுக்கு வரும்வரை, நடைமுறையில் உள்ளவரை, இந்தியா வின் தொழில்நுட்ப உதவிகள் தொடர வேண்டும்.

இது குறித்து இந்தியாவுக்கு தெரியப் படுத்தப்பட்டுள்ளது-

இவ்வாறு விமானப்படைப் பேச்சாளர் ஜானக நாணயக்காரவும் இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்காரவும் தெரிவித்துள்ளனர். (அ-1)

## இடம்பெயர்ந்த...

(முதலாம் பக்க்த் தொடர்ச்சி)

யான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் ஆங்காங்கேயே பாதுகாப்பாக தங்கவைக்கபட வேண்டும். அதற்கான ஏற் பாடுகளை சகல தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை தீர்மானமாகக் கொண்டுவரப்பட உள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தமது பிரதேசத்திலேயே வாழக்கூடிய நிலை ஏற்படுத்தப் பட வேண்டும் என்று தமது தீர்மானம் மூலம் கோருவர். (அ-01)

## டில்லியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரேட்டர் கைலாஷ் பகுதியிலும் குண்டு கள் வெடித்தது.

இந்தக் குண்டு வெடிப்பில்சிக்கி 18பேர் உயிரிழந்தனர். சுமார் 90பேர் காயமடைந்தனர்.

45நிமிடங்களுக்குள் நிகழ்ந்த ஐந்து குண்டு வெடிப்புகளால் டில்லி வாழ் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புகள் நிகழ்வதற்கு சற்றுமுன் குண்டு வெடிப்புகளுக்கு பொறுப்பு ஏற்பதாக சில பத்திரிகை அலுவலங்களுக்கு சிமி தீவிரவாத இயக்கத்தின் ஒரு பிரிவான 'இந்திய முஜாஹிதீன்' மின் அஞ்சல் அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது. இதே அமைப்பு தான் ஆமதாபாத் குண்டுவெடிப்புகளுக்கும் பொறுப்பு ஏற்பதாக கூறியிருந்தது.

சிமி இயக்கத்தைச் சேர்ந்த சில முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதால், டில்லி மற்றும் சென்னையில் தாக்குதல் நடத்த தீவிர வாதிகள் திட்டமிட்டிருந்தனர் என்று உளவுத்துறை தகவல் தெரிவிக் கின்றன.

இந்தியா கேட் பகுதியில், வெடிப்பதற்கு முன்னதாக ஒரு குண்டு பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

டில்லி தொடர் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து நாடு முழுவதும் பொலிசார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர். இந்த குண்டு வெடிப்புச் சம்பவத் திற்கு பிரதமர் மன் மோகன் சிங் கடும் கண்டனம் தெரி வித்துள்ளார். (அ-02)

## சந்நிதியில் இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது. ஆலயத்துக்கான விசேட போக்குவரத்துச் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## வன்னியில் இரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் போது அந்த நிறுவனத்தின் பிரதிநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வன்னியை விட்டு வெளியேற வேண்டாம் என்று கோரி பொதுமக்கள் நேற்றும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் முன் முற்றுகைப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் உயரதிகாரிகள் வன்னிக்கு வந்து, இடம்பெயர்ந்துள்ள இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்களை கைவிட்டு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் வெளியேறுகின்றது என்று பகிரங்க அறிக்கையை விட்டு வெளியேறவேண்டும் என்று அங்கு திரண்ட மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கு கிளிநொச்சியில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகப் பிரதிநிதி இது சம்மந்தமான தகவலைத் தாம் ஜெனீவாவுக்கு மின்னஞ்சலில் அனுப்பியுள்ளதாகவும் அவர்களின் பதிலைப் பெறுவதற்கு இன்று ஞாயிற்றுக் கிழமை வரை அவகாசம் தருமாறும் கேட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரிகள் வரும் வரை வன்னியிலிருந்து அனைத்துலக தொண்டு நிறுவனங்களை வெளியேற அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவித்து மக்கள் வெள்ளிக்கிழமை தொடக்கம் முற்றுகை போராட்டம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் வெளியேற்றத்துக்கு எதிராக புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் மடல்களை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு அனுப்புமாறு வன்னி வாழ் தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிறிலங்கா அரசின் இன அழிப்பு முகத்தை அம்பலப்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு மடல்களை அதிகம் அனுப்புமாறும் அவர்கள் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# கப்பூதுவில் மீட்கப்பட்ட சடலம் இனங் காணப்பட்டது.

யாழ்ப்பாணம், செப்.14

வடமராட்சியில் கப்பூது, குயிலங் கண்டி வீதியில் நேற்றுமுன்தினம் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட சடலம் இனங்காணப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கல்வயலில் கடந்த திங்கட்கிழமை ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட பொன்னம்பலம் ஜெயக்குமார் (வயது 34) என்பரின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மரணமானவரின் மனைவியும் பிள்ளைகளும் சடலத்தை அடையாளம் காட்டினர்.

பிரேத பரிசோதனையை வல்வெட்டித் துறை மாவட்ட வைத்திய அதிகாரி கே.மயிலேறும்பெருமாள் மேற்கொண்டார். மரண விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித் துறை நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜ சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறுஉத்தரவிட்டார். (202-218-207)

## கொழும்பில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறுவதையே நான் விரும்புகின்றேன். அவர்கள் இங்கு தங்குவதால் பாதுகாப்பு வழங்குவது பெரும் பிரச்சினையாக உருவாகி வருகிறது. வெளியில் இருந்து வந்து தங்குவோருடன் விடுதலைப் புலிகளும் ஊடுருவுகிறார்கள்.

கடந்த (ஓகஸ்ட்) மாதத்தில் மட்டும் வெளியிடங்களில் இருந்து 6,950 பேர் தலைநகருக்கு வந்து தங்கியுள்ளார்கள். அவர்கள் லொட்ஜுகளிலும் தனியார் வீடுகளிலும் தங்கியுள்ளார்கள். இது ''அசாதாரணமானது'', ''அதிர்ச்சி''தருவதும் ஆகும்.

கிழக்கில் இருந்தோ அல்லது வேறு இடங்களில் இருந்தோ வந்தவர்கள், காரணமின்றி இங்கு தங்கினால் அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிவிட வேண்டும். அதுவே விரும்பக் கூடிய ஒன்றாகும்.

வன்னியைச் சேர்ந்த மக்கள் அங்கு பல பிரச்சினைகளை எதிர்நோக்கு வதால் இங்கு வந்துள்ளார்கள் . அதனைப் புரிந்து கொள்ளலாம். அவர்களைத் தவிர்ந்த எல்லோரும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி விடவேண்டும்.

விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்குள் ஊடுருவி, வெடிபொருள்களைகொண்டு வருதற்கு வாய்ப்புண்டு. அதனைத் தடுக்க வேண்டும். அதற்காகவே ஆள்கள் வருவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்.

அப்பாவி மக்களை பாதுக்காப்பதற்கு இந்த முன்னேற்பாட்டு நடவடிக்கை தேவை. அதனைச் செய்வதால் நாம் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகச் சிலர் குற்றஞ்சாட்டுகிறார்கள் - என்றும் தெரி வித்தார் கோத்தபாய.

கடந்த வருடம் ஜூன் மாதத்தில் கொழும்பு நகரில் லொட்ஜ்களில் தங்கிருயிருந்த த்மிழர்கள் அரசாங்கத்தினால் வகைதொகையின்றி இரவிரவாக பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு, பஸ்களில் வவுனி யாவுக்கு கூட்டிச் செல்லப்பட்டதும்-

உயர் நீதிமன்றம் இதில் தலையிட்டு இந்த பலாத்கார நடவடிக்கை குறித்து அரசாங்கத்தை கண்டித்ததும் - தெரிந்தவையே.

பாதுகாப்புச் செயலாளர் தமது பேட்டியில் தமிழர்கள் வெளியேறவேண்டும் என்று நேரடியாக கூறாவிடினும் அதனையே பூடகமாக கூறியிருக்கிறார் என்று அவதானிகள் தெரிவித்தனர். (அ-1)

பொருளியல்
N.B.கஜீதரன்
Paper class
Mon
Fri } 3-4p.m.
ஆரம்பம்=
15.09.2008
SHAMROCK
(ஈச்சமோட்டை - யாழ்.)

A/L DAY CLASS
PHYSICS
Mon.- Fri.- 11.30-1p.m
ஆரம்பம்:- 15.09.2008
Mon.- 11.30 a.m.
By: K.Selvan
NEC

SPOKEN ENGLISH WITH GRAMMAR
இலக்கண விளக்கத்துடன் கூடிய பேச்சு ஆங்கிலம்
By: P.N.சுதர்சன் DETE(Merit)
(பிரபல ஆசிரியர்)
புதிய பிரிவு ஆரம்பம்-15.09.2008 (திங்கள்)காலை 7.15a.m.
DMI நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Computer Classes T.P: 0771240080
+Video Editing
+Computer Hardware

## கண்ணீர் அஞ்சலி

*எமது கல்லூரியின் ஆசிரியரும் கழக அங்கத்தவருமாகிய*
**M. ராம்குமார்** *அவர்களின் மாமனார்*
**V.K.கானமூர்த்தி**
**(நாதஸ்வர வித்துவான்)**
*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி

## மரண அறிவித்தல்

*திருமதி மனோகரன் ஜெயபவானி(வாணி)*

விபுலானந்தர் வீதி, மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோகரன் ஜெயபவானி நேற்று (13.09.2008)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் மனோகரனின் அன்பு மனைவியும் சரவணமுத்து (அமரர்)- இரத்தினாம்பாள் தம்பதியரின் அன்பு மகளும் ரம்யா(கனடா), கபிலேஸ் (யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி, தரம் -8) ஆகியோரின் பாசமிகு தாயும் பு.ஜெயகௌரி (ஆசிரியை,யாழ். சில்லாலை றோ.க. பாடசாலை), ஜெயகலா (ஜேர்மனி), ஜெயகாந்தன் (கனடா) ஆகியோரின் சகோதரியும் அ.புவனேந்திரராஜா(ஆசிரியர், மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயம்), வில்வராஜா(ஜேர்மனி), சுஜாதா(கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாதகலில் உள்ள அவரது இல்லத்தில் இன்று(14.09.2008)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதக லில் உள்ள இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்.

தகவல்:
தாய், மகன்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org